# 2

# தேசிய வெளியீடு, செலவினம் மற்றும் வருமானம்

## 2.1 பொதுநோக்கு

இலங்கைப் பொருளாதாரம் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளின் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி அவற்றின் வளர்ச்சியை மெதுவடையச்செய்திருந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தொடர்ந்தான சவால் நிறைந்த உள்நாட்டு சூழலுக்கு மத்தியில் 2018இன் 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.3 சதவீதத்திற்கு மேலும் மிதமடைந்திருந்தது. ஒரு தசாப்தத்திற்கும் மேலாக நாட்டில் நிலவிய சமாதான சூழலை உலுக்கிவிட்டிருந்த இத்தாக்குதலானது குறிப்பாக பணிகள் மற்றும் கைத்தொழில் துறைகளுடன் தொடர்புடையதும் ஏனைய முக்கிய பொருளாதார நடவடிக்கைகளுடன் முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய இடைத்தொடர்புகளை கொண்டிருந்த சுற்றுலாத்துறையை நிலைகுலையச் செய்திருந்தது. இந்நிகழ்வின் பாதகமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடானது ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வரலாற்றிலேயே அதன் மிகக் குறைந்த மட்டங்களைப் பதிவுசெய்திருந்தது. இத்தகைய பின்னணியில், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள், தனியாள் பணிகள் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள் என்பவற்றில் காணப்பட்ட மந்தமான தன்மைகளின் காரணமாக இக்காலப்பகுதியில் பணிகள் நடவடிக்கைகள் மெதுவான வேகத்தில் விரிவடைந்திருந்தன. மேலும், இக்காலப்பகுதியில் குறிப்பாக கட்டவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் நடவடிக்கைகளின் மீட்சியினால் ஆதரவளிக்கப்பட்டு கைத்தொழில்துறை நடவடிக்கைகள் மிதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருந்தன. அதேவேளை, ஆண்டுகாலப்பகுதியில் காலநிலை நிலைமைகளுடன் தொடர்புடைய இடையூறுகளின் காரணமாக மீன்பிடி மற்றும் தானியங்களின் வளர்ச்சியை உள்ளடக்கிய முக்கிய நடவடிக்கைகளின் வீழ்ச்சியின் காரணமாக வேளாண்மை நடவடிக்கைகள் சிறிதளவான வளர்ச்சியை மாத்திரமே பதிவுசெய்திருந்தன. பொருளாதார வளர்ச்சியை தூண்டும் நோக்குடன் மத்திய வங்கியினால் தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை பின்பற்றப்பட்டிருந்த போதிலும் நாட்டில் நிலவிய நிச்சயமற்ற கொள்கை மற்றும் அரசியல் நிலைமைகளின் காரணமாக ஏற்பட்ட ஊக்கம் குன்றிய தோற்றப்பாடு முதலீட்டாளர் நம்பிக்கையினைப் புரட்டிப்போட்டமையின் முக்கிய காரணத்தால் முதலீட்டுச் செலவினம் 2019இல் மேலும் தளர்வடைந்திருந்தது. எனினும், நுகர்வுச் செலவினம் 2019இல் மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளால் ஆதரவளிக்கப்பட்டு பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதி சிறிதளவினால் அதிகரித்த அதேவேளை அவற்றின் ஏற்றுமதிகள் உயர்ந்த வீதத்தில் விரிவடைந்தமையின் காரணமாக 2019இல் தேறிய வெளிநாட்டுக் கேள்வியில் குறிப்பிடத்தக்க மேம்பாடு அவதானிக்கப்பட்டிருந்தது. அதேவேளை, உள்நாட்டுச் சேமிப்புக்கள் உயர்ந்த வீதத்தில் சுருக்கமடைந்திருந்தன. மேலும், ரூபா நியதிகளில் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற தேறிய முதலாந்தர வருமானம் தொடர்ந்தும் சுருக்கமடைந்திருந்த வேளையில் ரூபா நியதிகளில் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்து கிடைத்த தேறிய இரண்டாந்தர வருமானம் (தேறிய நடைமுறை மாற்றல்கள்) இவ்வாண்டுப்பகுதியில் வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தேசிய சேமிப்புக்கள் வீழ்ச்சியடைந்திருந்த அதேவேளை முதலீட்டில் ஏற்பட்ட சுருக்கத்தின் காரணமாக மூலவள இடைவெளியும் குறுக்கமடைந்திருந்தது.

2


## 2.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி[1], தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் மொத்தத் தேசிய வருமானம்

நிலையான சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்ட (இதன் பின்னர் நிலையான விலைகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) மொ.உ.உற்பத்தியானது 2018இல் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் 2.3 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருந்தது. நிலையான விலைகளில் மொ.உ.உற்பத்தி 2018இன் ரூ.9,668.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.9,889.4 பில்லியனாக மதிப்பிடப்பட்டது. அதேவேளை, நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்ட (இதன் பின்னர் நடைமுறை விலைகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) மொ.உ.உற்பத்தி ரூ.15,016.1 பில்லியனில் மதிப்பிடப்பட்ட வேளையில் (ஐ.அ.டொலர் 84.0 பில்லியன்) 2018இல் இது ரூ.14,366.1 பில்லியனாக விளங்கி (ஐ.அ.டொலர் 88.4 பில்லியன்) 2018இன் 7.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 4.5 சதவீதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்திருந்தது. இதன்படி,

1 மொத்த உள்நாட்டு உற்பத்தியை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் உற்பத்தி, செலவினம் மற்றும் வருமான அணுகுமுறைகளில் மதிப்பீடு செய்கின்றது.

வரைபடம் 2.1

மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதம் (அ)




(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

அட்டவணை 2.1

நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(ஆ)


| பொருளாதார நடவடிக்கை | வளர்ச்சி (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 (இ) | 2019 | 2018 (இ) | 2019 | 2018 (இ) | 2019 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல்** | **6.5** | **0.6** | **13.5** | **1.8** | **7.1** | **7.0** |
| தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | 2.0 | - 9.5 | 0.1 | - 0.5 | 0.1 | 0.1 |
| அரிசியின் வளர்ச்சி | 44.7 | - 0.3 | 7.0 | - 0.1 | 0.7 | 0.7 |
| காய்கறிகளின் வளர்ச்சி | 4.0 | 1.5 | 0.7 | 0.4 | 0.6 | 0.6 |
| கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்களின் வளர்ச்சி | - 10.9 | 8.4 | - 0.1 | 0.1 | 0.0 | 0.0 |
| பழவகைகளின் வளர்ச்சி | 11.4 | 8.5 | 1.8 | 2.1 | 0.6 | 0.6 |
| எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | 7.1 | 18.2 | 1.2 | 4.7 | 0.6 | 0.7 |
| தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | 0.4 | - 1.3 | 0.1 | - 0.4 | 0.7 | 0.7 |
| ஏனைய குடிப்பானப் பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை) | 25.6 | - 23.4 | 0.1 | - 0.2 | 0.0 | 0.0 |
| வாசனைத்திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி | 5.9 | - 1.0 | 1.2 | - 0.3 | 0.7 | 0.7 |
| இறப்பரின் வளர்ச்சி | - 0.3 | - 9.5 | - 0.0 | - 1.0 | 0.2 | 0.2 |
| ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி | - 2.5 | - 0.3 | - 0.1 | - 0.0 | 0.2 | 0.2 |
| விலங்கு உற்பத்தி | 8.0 | 3.2 | 1.5 | 0.9 | 0.7 | 0.7 |
| தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் | 0.2 | - 6.3 | 0.0 | - 0.3 | 0.1 | 0.1 |
| காடாக்கலும் குத்திகளும் | - 0.8 | - 4.8 | - 0.2 | - 1.4 | 0.6 | 0.6 |
| மீன்பிடித்தல் | 0.2 | - 4.3 | 0.1 | - 2.3 | 1.2 | 1.1 |
| **கைத்தொழில்** | **1.2** | **2.7** | **10.0** | **30.8** | **26.3** | **26.4** |
| சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | - 5.2 | 2.8 | - 4.0 | 2.9 | 2.3 | 2.3 |
| தயாரிப்பு | 3.6 | 1.9 | 16.8 | 12.8 | 15.6 | 15.6 |
| மின்சாரம், எரி வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 5.9 | 4.0 | 1.8 | 1.8 | 1.0 | 1.1 |
| நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 5.8 | 5.5 | 0.3 | 0.4 | 0.1 | 0.2 |
| சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள் | 6.7 | 7.3 | 0.6 | 1.0 | 0.3 | 0.3 |
| கட்டடவாக்கம் | - 2.5 | 4.0 | - 5.5 | 11.9 | 6.8 | 6.9 |
| **பணிகள்** | **4.6** | **2.3** | **78.2** | **56.8** | **57.5** | **57.4** |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப்பணி நடவடிக்கைகள் | 3.5 | 1.8 | 24.6 | 17.9 | 23.1 | 23.0 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 9.6 | 15.7 | 1.8 | 4.5 | 0.7 | 0.7 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள் | 9.6 | 2.5 | 38.6 | 15.4 | 14.1 | 14.2 |
| தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள் | 2.9 | 2.2 | 10.2 | 10.9 | 11.4 | 11.4 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 1.2 | 2.3 | 3.0 | 8.2 | 8.1 | 8.1 |
| **அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமனானவை** | **3.7** | **2.2** | **101.6** | **89.4** | **90.8** | **90.8** |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரி | - 0.6 | 2.6 | - 1.6 | 10.6 | 9.2 | 9.2 |
| **சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனானவை** | **3.3** | **2.3** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | - 6.0 | - 6.3 | | | | |
| **சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம்** | **3.2** | **2.2** | | | | |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


வரைபடம் 2.2

## தேசிய வெளியீடு, செலவினம் மற்றும் வருமான நிழற்படம் - 2019




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.3
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தலைக்குரிய வருமானம் (அ)




(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் (2010 அடியாண்டு) மதிப்பீடுகளையும் பிந்திய குடித்தொகை தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டது

*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

மொ.உ.உற்பத்திச் சுருக்கி 2018இன் 4.3 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்திருந்தது.

**தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2018இன் ரூ.662,949 உடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.688,719ஆக மதிப்பிடப்பட்டதுடன் இது 2018இன் 6.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் 3.9 சதவீதமான அதிகரிப்பை பதிவுசெய்திருந்தது.** ரூபா நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியின் மெதுவான வளர்ச்சிக்கு நடைமுறை விலைகளிலான மொ.உ.உற்பத்தி மெதுவடைவான மட்டத்தில் காணப்பட்டமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2018இன் ஐ.அ.டொலர் 4,079 உடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 3,852ஆக விளங்கி 2018இன் 0.05 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 5.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு நடைமுறை விலைகளிலான மொ.உ.உற்பத்தியின் மெதுவான வளர்ச்சி அதேபோன்று ஆண்டுச் சராசரி அடிப்படையில் ஐ.அ.டொலருக்கெதிராக உள்நாட்டு நாணயம் தேய்வடைந்தமை என்பன காரணங்களாக அமைந்திருந்தன[2].


**உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய முதன்மை வருமானத்திற்காக மொ.உ.உற்பத்தியை சீராக்கம் செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தேசிய வருமானம் நடைமுறை விலைகளில் ரூ.14,583.9 பில்லியனுக்கு அதிகரித்து 2018இன் 7.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 4.3 சதவீதம் கொண்ட மெதுவான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது.** மொத்தத் தேசிய வருமானத்தில் ஏற்பட்ட இம்மெதுவான தன்மைக்கு நடைமுறை விலைகளில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சி மற்றும் தேறிய முதலாந்தர வருமானம் 2018இன் 10.4 சதவீதமான சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 10.9 சதவீதமான எதிர்க்கணிய வளர்ச்சி என்பவற்றின் இணைந்த வெளிப்பாடாகும்.

## 2.3 நிறுவன ரீதியிலான துறைகளிலிருந்தான பங்களிப்பு

**வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறையானது நடைமுறை விலைகளில் பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலுக்கு முக்கிய பங்களிப்பாளராக தொடர்ந்தும் விளங்கியிருந்தது.** இதன்படி, வீட்டலகுகள் மற்றும் இலாபமீட்டாத வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறையானது 2018இல் பதிவுசெய்யப்பட்ட 7.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 5.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 2019இன் பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலில் 48.8 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தது. இரண்டாவது மிகப்பெரும்

2 வருடாந்த சராசரி செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி கணிப்பிடப்படுகின்றது.

வரைபடம் 2.4
2019 இல் நிறுவனத்துறையினரின் மொத்த பெறுமதி சேர்ப்பின் பங்குச் சதவீதம் (நடைமுறைச்சந்தை விலைகளில்) (அ)




(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

அட்டவணை 2.2

### நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறையினரின் மொத்த பெறுமதி சேர்ப்பு (அ)(ஆ)

| விடயம் | மொத்த பெறுமதி சேர்ப்பின் சதவீதமாக (%) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 (இ) | | | | 2019 | | | |
| | நிதியல்லா கூட்டுத்தாபனம் | நிதியியல் கூட்டுத் தாபனங்கள் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | நிதியல்லா கூட்டுத்தாபனம் | நிதியியல் கூட்டுத் தாபனங்கள் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் |
| வேளாண்மை | 18.6 | - | - | 81.4 | 19.2 | - | - | 80.8 |
| கைத்தொழில் | 63.7 | - | 1.7 | 34.6 | 64.3 | - | 1.4 | 34.3 |
| பணிகள் | 23.6 | 8.7 | 15.9 | 51.8 | 23.9 | 8.9 | 15.7 | 51.6 |
| அடிப்படை விலையில் மொத்த பெறுமதி சேர்ப்பு | 34.8 | 5.4 | 10.4 | 49.3 | 35.4 | 5.5 | 10.2 | 48.8 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பங்களிப்பாளர் என்ற ரீதியில் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறையானது பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலில் 35.4 சதவீதத்திற்கு வகைகூறியிருந்ததுடன் 2018இன் 8.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 7.9 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. அதேவேளை, பொது அரசாங்கத் துறை மற்றும் நிதியியல் கூட்டுத்தாபனங்கள் துறை என்பன 2018இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 18.1 சதவீதம் மற்றும் 8.2 சதவீதம் கொண்ட தொடர்பான வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2019இல் முறையே 4.5 சதவீதம் மற்றும் 8.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தன. இதற்கமைய, பொது அரசாங்கம் மற்றும் நிதிக் கூட்டுத்தாபனத் துறைகள் என்பன பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலில் முறையே 10.2 சதவீதத்திற்கும் 5.5 சதவீதத்திற்கும் வகைகூறியிருந்தன.

**நடைமுறை விலைகளில் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளுக்கான நிறுவன ரீதியான துறைகளின் பங்களிப்புக்களை கருத்திற்கொள்கையில், 2019ஆம் ஆண்டுப்பகுதியில் வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டலுக்கான முக்கிய பங்களிப்பாளராக வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் என்பன காணப்பட்ட அதேவேளை கைத்தொழில் நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டலானது நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் துறையினால் முக்கியமாக தூண்டப்பட்டிருந்தது.** இதன்படி, வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாமீட்டாத நிறுவனங்கள் துறையானது வேளாண்மை நடவடிக்கைகளின் கூட்டப்பட்ட பெறுமதியில் 80.8 சதவீதத்திற்குப் பங்களித்து 2018இன் 81.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் அதன் பங்களிப்பில் சிறிதளவு வீழ்ச்சியை எடுத்துக்காட்டியிருந்தது. மேலும், 2018இன் 51.8 சதவீதம் கொண்ட பங்களிப்புடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளின் கூட்டப்பட்ட பெறுமதியில் 51.6 சதவீதமானது வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறையினால் உருவாக்கப்பட்டிருந்தது. அதேவேளை, கைத்தொழில் நடவடிக்கைகளின் கூட்டப்பட்ட பெறுமதியில் நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் துறை 2018இல் பதிவுசெய்யப்பட்ட 63.7 சதவீதம் கொண்ட பங்களிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் 64.3 சதவீதத்திற்குப் பங்களித்திருந்தது.

## 2.4 வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியான உதவி மற்றும் பிரச்சினைகள்

### வேளாண்மை

**2019இல் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் வேளாண்மை நடவடிக்கைகள் 2018இன் 6.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.6 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு மீன்பிடி, மற்றும் காடாக்கல் மற்றும் இறப்பர் மற்றும் தேயிலை போன்ற முக்கிய பயிர்களின் வளர்ச்சி என்பன உள்ளிட்ட முக்கிய நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.** மேலும், இவ்வாண்டுப்பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத வானிலையுடன் தொடர்பான இடையூறுகளின் காரணமாக தானியங்கள், வாசனைத்திரவியங்களின் பயிர்ச்செய்கை, மரக்கன்றுகளை பதியமிடல் மற்றும் வேளாண்மைக்கான ஆதரவு நடவடிக்கைகள், மற்றும் கோப்பி, கொக்கோ போன்ற ஏனைய குடிபானப் பயிர்களின் பயிரிடுகை, அரிசி மற்றும் ஏனைய நீண்ட காலப் பயிர்கள் என்பனவும் சுருக்கமடைந்து, ஒட்டுமொத்த வேளாண்மை நடவடிக்கைகளில் விரிவாக்கம் தடைப்படுவதற்கு காரணமாக விளங்கின. எனினும், எண்ணெய்ப் பசை பழவர்க்கங்கள் (தெங்கு உள்ளிட்ட), ஏனைய பழவர்க்கங்கள் மற்றும் காய்கறிகள், மற்றும் விலங்கு உற்பத்திகள் இவ்வாண்டு காலப்பகுதியில் விரிவடைந்து

2

சிறப்புக்குறிப்பு 4
வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல்

**அறிமுகம்**

சனத்தொகை வளர்ச்சி மற்றும் உணவு ரீதியான மாற்றங்கள் என்பனவற்றின் விளைவாக உணவுக்கான உலகளாவிய கேள்வி தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருவதுடன், ஐக்கிய நாடுகளின் உலக சனத்தொகை எதிர்பார்க்கைகள் - 2019இன் கணிப்பின்படி உலக சனத்தொகையானது இன்றைய 7.8 பில்லியன் மட்டத்திலிருந்து 2050ஆம் அண்டளவில் 9.7 பில்லியனை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சனத்தொகையின் இவ்வளர்ச்சிப் போக்கானது உணவுப் பாதுகாப்பு உள்ளடங்கலாக பல எண்ணிக்கையான உலகளாவிய நிலைபெறுதன்மைப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடான இலங்கையானது, வளர்ச்சியடைகின்ற சனத்தொகை, அறுவடைக்குப் பிந்திய கணிசமான இழப்புகள் மற்றும் கிரமமாக இடம்பெற்றுவருகின்ற பாதகமான வானிலை தாக்கங்கள் போன்றவற்றுக்கு மத்தியில் உணவுப் பாதுகாப்பு மீதான இதனையொத்த கரிசனைகளை எதிர்கொள்கின்றதுடன் இச்சவால்கள் வினைத்திறன்மிக்க வேளாண்மை நடைமுறைகளூடாக கையாளப்பட வேண்டியுள்ளது. அண்மைய கொவிட்-19 உலகளாவிய பரம்பலும் எமது நாட்டைப் போன்று அபிவிருத்தியடைந்துவரும் நாடொன்றுக்கான உணவுப் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றி மீண்டும் வலியுறுத்தியுள்ளது. மரபுசார்ந்த வோளண்மையானது விவசாயிகளின் அறிவு மற்றும் அனுபவத்தினை ஒன்று சேர்ப்பதனூடாக கடந்த பல நூற்றாண்டுகளாக ஒட்டுமொத்த சனத்தொகைக்கும் உணவளித்தது. கடந்த கால வரலாற்றில் அபிவிருத்தி செய்யப்பட்ட தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட தொட்டி - கிராமிய முறைமை (எல்லங்க முறைமை), மலைச்சரிவில் தொடர்கட்ட படிமுறையில் அமைந்த நெல் நிலங்கள் (ஹெல்மாலு) மற்றும் நீர்ப்பாசன முறைமைகள் என்பன நீர் முகாமைத்துவ வினைத்திறன், காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப மாற்றிக்கொள்ளல் மற்றும் வெள்ளப்பெருக்கு, வரட்சி மற்றும் பீடைத் தாக்கங்கள் போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கெதிராக காத்துக்கொள்ளும் விதங்கள் தொடர்பாக இலங்கையில் குறிப்பிடத்தக்க வேளாண்-உயிர்பல்லினத்தன்மை முறைமைகளாக இருந்து வந்தன. இருப்பினும், குடியேற்ற காலத்தின் போது பெருந்தோட்ட வேளாண்மைக்காக முன்னுரிமை வழங்கப்பட்டதுடன் ஜீவனோபாய பயிர்ச்செய்கை தவிர்ந்த வேறு பயிர்களை பயிரிடுதலுக்கு குறைந்தளவான கவனமே செலுத்தப்பட்டது. அரசாங்கம் குறைவான கவனம் செலுத்தியதன் மூலம் ஜீவனோபாய பயிர்ச்செய்கை மாத்திரம் நாட்டின் வளர்ந்துவரும் உணவுக் கேள்வியினை நிறைவு செய்வதற்கு போதுமானதாக இருக்கவில்லை. அதனைத் தொடர்ந்து, 1960 களின் பல அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் முக்கிய கொள்கை பதிலிறுப்பாகக் காணப்பட்ட பசுமைப் புரட்சியானது அதிக விளைச்சலைத் தரும் ஆற்றல்வாய்ந்த இனங்கள், கலப்பின விதைகள், நீர்ப்பாசன உட்கட்டமைப்பினை விரிவுபடுத்தல், செயற்கை வளமாக்கிகள் மற்றும் பீடைநாசினிகள் போன்ற பல்வேறு நுட்பங்கள் ஊடாக வேளாண்மைச் செயன்முறையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு முனைந்தது. வேளாண்மைத் துறையானது பசுமைப் புரட்சியின் காரணமாக கணிசமான மாறுதலுக்கும் மேம்படுத்தலுக்கும் உட்பட்டிருந்த போதிலும் உணவுப் பாதுகாப்பு அதேபோன்று விவசாயிகளுக்கான குறைவான வருமானம் தொடர்பான கரிசனைகளை தோற்றுவித்து அண்மைய ஆண்டுகளில் உற்பத்தித்திறன் மட்டங்கள் மந்தமடைந்ததாக காணப்படுகின்றன. எவ்வாறாயினும், காணி மற்றும் நீர் வளங்கள் போன்ற வேளாண்மை நடவடிக்கைகளுக்காக கிடைக்கப்பெறுகின்ற மூலவளங்கள், ஏனைய கைத்தொழில் நடவடிக்கைகள் அத்துடன் நகரமயமாக்கல் போன்ற காரணங்களால் துரிதமாகக் குறைவடைந்துவருதனால் தற்கால சூழ்நிலையின் கீழ் மரபு ரீதியான வேளாண்மை நடைமுறைகளின் அடிப்படையிலமைந்த வேளாண் - உயிர்ச்சூழலமைப்பிற்கு திரும்பிச் செல்வது சாத்தியமற்றதாகவே காணப்படுகின்றது. இத் துறையில் தொழில்பெற்றுள்ள தொழிற்படையின் குறிப்பிடத்தக்க பங்கிற்கு மத்தியில், தொழிலாளர் அதிகம் தேவைப்படும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் தொடர்பில் தொழிலாளர் பற்றாக்குறைகள் பொதுவாக அதிகரிக்கின்ற விதத்திலேயே காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, அண்மைக்கால திடீர் வானிலை மாற்ற அனுபவங்கள் மற்றும் அதன் விளைவான வெள்ளப்பெருக்கு, வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்கள் என்பனவும் வேளாண்மை நடவடிக்கைகள் மீது மேலதிக மட்டுப்பாடுகளை விதிப்பதற்கு முற்படுகின்றன. இப்போக்குகள், புத்தாக்கமிக்க தொழில்நுட்பங்கள் ஊடாக வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறனை அதிகரித்து வினைத்திறன் மிக்கவாறு மூலவளங்களை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றன.

கடந்த இரு தசாப்பதங்களுக்கும் மேலாக உலகின் துரிதமான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பல்வேறு புதிய புத்தாக்கங்களுக்கு வழிவகுத்துள்ளன, இவை வேளாண்மையாளர்களினதும் ஏனைய வேளாண்மைத் துறை ஆர்வலர்களினதும் தொழில்நுட்பரீதியான தேவைகளை ஒரு போதுமில்லாதவாறு விரைவாகவும் மிகவும் செம்மையாகவும் தீர்க்கவல்லன. இந்தியா, இஸ்ரேல் மற்றும் பிரேசில் போன்ற நாடுகள், துரிதப்படுத்தப்பட்ட இயந்திரமயமாக்கம் மற்றும் முன்னேற்றகரமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல் போன்றவற்றின் மூலம் வேளாண்மைத் துறையில் துரிதமான மாறுதல்களைக் கண்டுள்ளன. நிலைக்குத்தான பயிர்ச்செய்கை, மண்ணில்லா பயிர்செய்கை, சிறந்த வேளாண்மை நடைமுறைகள் மற்றும் புவியியல் தகவல் முறைமைகள் போன்ற பல எண்ணிக்கையான புதிய தொழில்நுட்ப பின்பற்றல்களும் இலங்கையில் கிடைக்கப்பெறுகின்ற போதிலும், இத்தொழில்நுட்பங்களின் பயன்படுத்துகை ஒப்பீட்டளவில் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. எனவே, நெறிமுறையொன்றாக வேளாண்மை நடவடிக்கைகளுக்கென புதிய முன்னேற்றகரமான தொழில்நுட்பங்களைத் தழுவிக்கொள்வதற்கு இலங்கை இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

**வேளண்மைத் துறையின் செயலாற்றத்தினை அதிகரிக்கும் புதிய தொழில்நுட்பங்கள்**

நுண்ணிய சாதனங்கள் தொடக்கம் பாரிய வலையமைப்புக்கள் வரை காணப்படுகின்ற புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்கள், நவீன உலகளாவிய வேளாண்மையினை ஒட்டுமொத்தமாக

உற்பத்தித்திறன்மிக்கவாறு மாறுதலடையச் செய்துள்ளன. புத்தாக்கமான வேளாண்மை நுட்பங்களானவை நீர், போசனைகள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு பொருட்கள் போன்ற உள்ளீடுகளை அனைத்துத் தோட்டங்களுக்கும் சமமாக பிரயோகிப்பதில் மாத்திரம் இனிமேலும் தங்கியிராது. வேளாண்மை உற்பத்திகளுக்காக கிடைக்கப்பெறுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்திகளுக்காக அதிகரித்து வருகின்ற கேள்வி என்பவற்றைக் கருத்திற்கொள்கையில், பல்வேறுவகையான நவீன தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதனூடாக கள நிலைமைகளில் காணப்படுகின்ற தோட்டங்களுக்கிடையிலான மற்றும் தோட்டங்களுக்குள்ளான வேறுபாட்டினை அவதானித்து, கணித்து மற்றும் பதிலிறுத்தி பயிர்களுக்கான வேளாண்மை உள்ளீடுகளின் திட்டவட்டமான அளவின் பிரயோகத்தினைப் பரிந்துரைக்கின்ற துல்லியமான அல்லது வினைத்திறன்மிக்க வேளாண்மை நுட்பங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இதன் மூலம் வேளாண்மை உற்பத்திகளின் விளைச்சலினையும் தரத்தினையும் அதிகரிப்பதற்காக வினைத்திறன்மிக்க வேளாண்மை எண்ணக்கருக்கள், நவீன தொழில்நுட்பங்களையும் தற்கால வேளாண்மை நடைமுறைகளையும் ஒருங்கிணைக்கின்றன.

இணையமூடான சாதனங்களின் வலையமைப்பு (IoT), செயற்கை நுண்ணறிவு (AI), ஆளில்லா விமானங்கள் மற்றும் ரோபோக்கள் போன்ற நான்காவது கைத்தொழில் புரட்சித் தொழில்நுட்பங்களை வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறன் மேம்படுத்துவதற்காக செயல்திறன்மிக்க விதத்தில் பயன்படுத்தமுடியும். தற்காலத்தில் திறன்பேசிகள், கணனிகள் மற்றும் வினைத்திறன்மிக்க இலத்திரனியல் சாதனங்கள் போன்ற எண்ணற்ற பௌதீக சாதனங்கள் உலகம் முழுவதும் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டு தகவல்களைச் சேகரித்துப் பகிர்ந்துகொள்கின்றன. இச்சாதன வலையமைப்பிற்கு உணரிகளைக் கூட்டிணைப்பது மனிதரின் எவ்வித ஈடுபாடுமின்றி நிகழ்நேரத் தரவுகளை தொடர்பூட்டுவதற்கு அவர்களை இயலச்செய்கின்றது (ரேன்ஜர், 2020). இத் தொழில்நுட்பமானது இணையமூடான சாதனங்களின் வலையமைப்பு என அறியப்படுகின்றது. ஈரப்பதன் உள்ளடக்கம், மண்ணில் கிடைக்கப்பெறும் போசனைகள், பீடை மற்றும் நோய்த்தாக்கங்கள் போன்ற தரவுகளை பெற்றுக்கொள்வதற்கும் வாகனங்கள், களஞ்சியக் கொள்ளளவு பற்றி கண்டறிதல், கால்நடைகளைக் கண்காணித்தல் மற்றும் ஏனைய வேளாண்மைத் தொழிற்பாடுகளுக்காகவும் இணையமூடாக வலையமைப்புக்கு இணைக்கப்பட்ட சாதனங்களை காணி, வாகனம், நீர், பயிர் மற்றும் கால்நடை போன்றவற்றின் மீது பொருத்த முடியும். பயன்படுத்தத்தக்க தகவல்களை உருவாக்குவதற்கு சேகரிக்கப்பட்ட தரவுகள் செயற்கை நுண்ணிறிவினைப் பயன்படுத்தி செயன்முறைப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இவை கணனி அல்லது செல்லிடத்தொலைபேசிகள் ஊடாக விவசாயிகள் மற்றும் ஏனைய ஆர்வலர்களினால் எளிதில் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும். தோட்ட மட்டத்தில் சேகரிக்கப்பட்ட வெப்பநிலை, ஈரப்பதன், வானிலை நிலைமைகள், நீர்ப் பயன்பாடு மற்றும் ஏனைய கள நிலைமைகள் போன்ற பல வகையான தரவுகளை மனிதத் தலையீடின்றி கணனி செய்நிரலாக்கங்கள் தரவுகளை கற்றுக்கொள்கின்ற நுட்பங்களைப் பயன்படுத்துகின்ற செயற்கை நுண்ணறிவானது நிகழும் நேர அடிப்படையில் பகுப்பாய்வு செய்வதற்கு பயன்படுத்தக் கூடியதாகவிருக்கும். எடுத்துக்காட்டாக செயற்கை நுண்ணறிவுடன் ஒருங்கிணைக்கப்பட்ட ஈரப்பதன் உணரி மற்றும் நீர்ப்பாய்ச்சல் முறைமையானது மண் ஈரப்பதன் மட்டத்தின் அடிப்படையில் பயிரொன்றுக்குத் தேவையான மிகச்சரியான நீரின் அளவையும் பயிர்ச்செய்கையின் படிமுறையையும் அதேபோன்று வானிலை எதிர்வுகூறலையும் நிர்ணயிக்கக்கூடியதுடன் அதற்கேற்றவாறு மனிதத் தலையீடின்றி தோட்டங்களில் நீர்ப்பாய்ச்சுவதனையும் இயலச்செய்கின்றது. எடுத்துக்காட்டாக, நைஜீரியாவில் ஹொலோ ரக்டர் என்ற இணையமூடான சாதனங்களின் வலையமைப்புச் சேவையானது மூலவளங்களைப் பகிர்ந்துகொண்டு கிடைக்கப்பெறுகின்ற உழவு இயந்திரங்களை முழுமையாக பயன்படுத்தும் நோக்குடன் வேளாண்மையாளர்களுக்கு தமது உழவு இயந்திரங்களை வாடகைக்கு விடுவதற்கு விரும்புகின்ற உழவு இயந்திர உரிமையாளர்களை ஒன்றிணைக்கின்றது. மேலும், உணவு வழங்கல் சங்கிலி வினைத்திறனின்மைகள், துறையிலுள்ள வழங்குநர்களுக்கும் சில்லறை வர்த்தகர்களுக்குமிடையிலான தொடர்பின்மையினை எடுத்துக்காட்டுகின்றன. பகிரப்பட்ட டிஜிட்டல் பேரேட்டு (Blockchain) தொழில்நுட்பமானது உற்பத்திச் செயன்முறையின் ஒவ்வொரு படிமுறையிலும் வினைத்திறன், கண்டறியும்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உறுதிசெய்து வழங்கல் சங்கிலியிலுள்ள அனைத்து பங்கேற்பாளர்களுக்குமிடையிலும் நேரடித்தொடர்பொன்றினை ஏற்படுத்துகின்றது. ஊதாரணமாக, தாய்லாந்து அரசாங்கமானது சேதன வகை அரிசிக்காக குறிப்பாக உற்பத்தி தொடக்கம் ஏற்றுமதி வரையில் தாய்லாந்தின் ஜெஸ்மின் அரிசி வகைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு பகிரப்பட்ட டிஜிட்டல் பேரேட்டு கண்டுபிடிக்கக்கூடிய தீர்வையினைப் பயன்படுத்துவதற்கான முன்னோடிக் கருத்திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. தொடர்ச்சியான தொழில்நுட்ப அபிவிருத்திப் பாதையில் ஆளில்லா விமானங்களும், தன்னியக்கப்படுத்தப்பட்ட ரோபோக்களும் வினைத்திறன்மிக்க விவசாய நடவடிக்கைகளுக்கான பல்துறைசார் தொழில்நுட்பங்களாக தோற்றம் பெற்றுள்ளன. ஆளில்லா விமான தொழில்நுட்பமானது மண் மற்றும் களப் பகுப்பாய்வுகள், திட்டமிடல், பயிர்களுக்கான விசிறல்கள், பயிர் கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வு, நீர்ப்பாசனம் மற்றும் பயிர் ஆரோக்கியக் கணிப்பீடுகள் போன்றவற்றுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் ஆளில்லா விமான தொழில்நுட்பமானது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் காலத்தை மீதப்படுத்துவதற்கு வசதியளிப்பதுடன் அரிதான மனித மற்றும் ஏனைய மூலவளங்களின் பயன்பாடுகளைக் குறைத்து எதிர்காலப் பகுப்பாய்வுகளுக்காக தரவுகளைச் சேமிப்பதுடன் செயல்திறன் வாய்ந்த மூலவளப் பயன்பாட்டின் மூலம் விளைச்சல்களை அதிகரிக்கின்றது. உதாரணமாக, இந்தியாவின் ஆந்திராப் பிரதேசத்திலுள்ள வேளாண்மையாளர்கள் தேவையான பீடை நாசினிகளைக் கொண்டு தமது பயிர்ச்செய்கைகளுக்கு நாசினிகளை விசுறுவதற்கு ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். மேலும், வினைத்திறன்மிக்கவாறு பயிர்க் காப்புறுதித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு காப்புறுதிக் கம்பனிகளுக்கும் அதேபோன்று அரசாங்கத்திற்கும் வேளாண்மை அளவீட்டுப் பணிகளை வழங்குவதற்கு இந்தியாவிலுள்ள தனியார் தொழில்நுட்பக் கம்பனிகள்

2

ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துகின்றன. இதற்கு மேலதிகமாக, களைபிடுங்கும் ரோபோக்கள், சாரதிகளற்ற உழவு இயந்திரங்கள் மற்றும் மண் தொற்றுநீக்கம் செய்யும் ரோபோக்கள் போன்ற முன்னேற்றகரமான ரோபோ முறைமைகள் போன்றன உள்ளீடுகளை வழங்குதல், நிலம் பண்படுத்தல், களை கட்டுப்பாடு, கௌவாத்துச் வெட்டுதல், நாற்றுநடல், விசுறுதல் மற்றும் செறிவுகுறைத்தல், அறுவடை மற்றும் காய்பறித்தல், மற்றும் வகைப்பிரித்தல் மற்றும் பொதியிடல் போன்றவற்றுக்காக வேளாண்மை நிலங்களில் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, மூலவளங்களை வினைத்திறன்மிக்கவாறு முகாமை செய்கின்ற அதேவேளை குறைவான தொழிலாளர் பயன்பாட்டினூடாக உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்கு ஆளில்லா விமான மற்றும் ரோபோ தொழில்நுட்பங்கள் வேளாண்மையாளர்களுக்கு ஆதரவளிக்கின்றன.

தற்காலத்தில், நனோதொழில்நுட்பமானது முதிர்ச்சியடைந்த விஞ்ஞானத் துறையொன்றாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் வேளாண்மையில் பரந்தளவில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பான பிரயோகங்களையும் கொண்டுள்ளது. நனோதொழில்நுட்பம் என்பது வழமையாக 100 நனோ மீற்றர்களுக்கு ஒரு வீச்சில் அளவு மூலக்கூறு மட்டத்தில் திணிவினைக் கட்டுப்படுத்துவதற்கு முனைகின்ற அத்துடன் அவ்வளவு வீச்சினுள் சாதனங்களை உருவாக்குகின்ற பிரயோக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறையாகுமென விரிவாகக் குறிப்பிடப்படுகின்றது (சயன்ஸ்டெய்லி, 2020). நனோதொழில்நுட்பமானது வேளாண்மை பொருட்களின் உற்பத்தி, பெறுமதி சேர்த்தல், களஞ்சியப்படுத்தல மற்றும் பொதியிடல், அத்துடன் கொண்டுசெல்லுதல் போன்ற அனைத்து கட்டங்களிலுமான வேளாண்மை நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. நனோகுளிகைகள் மற்றும் நனோதுணிக்கைகள் போன்ற நனோப்பொருட்களின் பிரயோகமானது விசேடமாக குறித்துரைக்கப்படுகின்ற பிரதேசங்களுக்காக மேம்படுத்தப்பட்ட பயிர் அகத்துறிஞ்சல் மற்றும் பதார்த்தங்களை விநியோகித்தல் ஊடாக பயிர்ப் பாதுகாப்பு உற்பத்திகளின் வினைத்திறன் வாய்ந்த பயன்பாட்டினை நோக்காகக் கொள்கின்றது. உதாரணமாக, நனோப்பொருட்கள் வடிவில் பிரயோகிக்கப்படுகின்ற வளமாக்கியானது பிரயோகப் பொருட்களை வேகம் குறைந்த மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் விடுவிப்பதன் மூலம் போசனை இழப்புகளைக் குறைத்து இதனூடாக உத்தமமான மூலவளப் பயன்பாட்டினூடாக விளைச்சலை அதிகரிப்பதுடன் வளமாக்கிகளை மிதமிஞ்சிப் பயன்படுத்துவதனைத் தடுப்பதன் மூலம் சுற்றாடலுக்கான தீங்குகளைக் குறைக்கின்றது. மேலும், நனோதொழில்நுட்பமானது மண்வளம் மேம்படுத்தல், பயிர் நோய் கண்டுபிடித்தல் மற்றும் கட்டுப்பாடு, விதைப்பூச்சிடல், கிருமிநாசினிகளைப் பிரயோகித்தல், கால்நடை மருந்துகள் அதேபோன்று பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபணு மாற்றம் செய்தல் போன்ற துறைகளிலும் கண்டறியப்படுகின்றது.

அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் நுகர்வோருக்கு குறைந்தளவான உணவு வழங்கலையும் உயர்வான சில்லறை விலைகளையும் ஏற்படுத்துகின்றன. இதனால் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்கள், விரைவில் கெட்டுப்போகக்கூடிய உற்பத்திகளின் பழுதடையாமலிருக்கும் காலத்தினை நீடிப்பதிலும் உணவு இழப்புகளைக் குறைப்பதிலும் முக்கிய பங்காற்றுகின்றன. அறுவடைக்குப் பிந்திய இழப்பு முகாமைத்துவமானது அறுவடை நேரத்திலிருந்து அவை சந்தைக்குச் சென்றடையும்வரை பொருட்களை கவனமாகக் கையாளுவதனை வேண்டுகின்றது. குளிரூட்டப்பட்ட களஞ்சியத்திற்கு மேலதிகமாக, இரசாயன சிகிச்சைகள் (ஒட்சியேற்றத் தடைகள், கபிலநிற தடைகள் மற்றும் நுண்ணுயிர் எதிரி) மற்றும் பௌதிக சிகிச்சைகள் (கதிர்வீச்சு, வெப்பம் மற்றும் சாப்பிடக்கூடிய பூச்சிடல்கள்) ஆகியன உணவு வழங்கல் சங்கிலிகளில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. இத் தொழில்நுட்பங்களின் நோக்கம் பௌதிக செயன்முறைகள் மற்றும் முதிர்வடைவு காரணமாக உணவின் தரம் மோசமடைவதை குறைக்கும் அதே வேளையில், நுண்ணுயிர் வளர்ச்சி மற்றும் தொற்றுகை இடர்நேர்வை குறைப்பதும் ஆகும். அறுவடைக்குப் பிந்திய சிகிச்சைகளின் பிரயோகத்திற்கு மேலதிகமாக, உணவுப் பெறுமதிச் சங்கிலியின் களஞ்சியப்படுத்தல் மற்றும் கொண்டுசெல்லல் போன்ற பல்வேறுபட்ட கட்டங்களில் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைப்பதற்கு மேம்படுத்தப்பட்ட பொதியிடல் தொழில்நுட்பங்களும் உதவுகின்றன. ஒட்சிசன் மற்றும் எதிலீன் உறிஞ்சிகளை இணைத்து செயற்படும் பொதியிடலானது உணவின் பௌதிக செயன்முறைகளை மெதுவடைய செய்வதுடன், இதன் மூலம் அவற்றின் பழுதடையாமல் இருக்கும் காலத்தினை நீடிக்கலாம். அதேவேளையில், உணவின் தரம் மற்றும் பொதியிடல் ஒருமைப்பாட்டை கண்காணிப்பதில் உணரிகள், காட்டிகள் மற்றும் கதிர்வீச்சு அதிர்வெண் அடையாள முறைமைகளை உள்ளடக்கிய நுண்ணறிவு பொதியிடல் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், அறுவடைக்குப் பிந்திய சில மாற்றங்களுக்கு தாக்குபிடிக்கக்கூடிய பயிர் வகைகளையும் மரபணு நிபுணர்கள் உருவாக்கியுள்ளனர்.

வேளாண்மை சார்ந்த அறிவினை காத்திரமான விதத்தில் பரிமாற்றிக் கொள்ளுதல் வினைத்திறன்மிக்க வேளாண்மைக்கான இன்றியமையாத முன்தேவைப்பாடாக விளங்குகின்றது. வேளாண்மையாளர்களுக்கும் தொடர்புபட்ட ஆர்வலர்களுக்கும் மிகவும் செயல்திறன்வாய்ந்த திட்டமிடல் நடைமுறைகள், சந்தைகளில் காணப்படுகின்ற சிறந்த விலைகள், கிடைக்கப்பெறுகின்ற கொடுகடன் வசதிகள், மண் நிலைமைகள், போசனைகள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு என்பன பற்றிய பிந்திய தகவல்கள் தேவைப்படுகின்றன. மேலும், வரட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு நிலைமைகள், பீடைகள் மற்றும் நோய்ப்பரம்பல்கள் மற்றும் காட்டுத்தீ பற்றிய முன்கூட்டிய எச்சரிக்கை விடுத்தல் என்பன வேளாண்மையாளர்களினால் அடிக்கடி நாடப்படுகின்றது. அத்தகைய தகவல்களை பரப்புவதற்கும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் ஊடாக ஆர்வலர்களை விழிப்படையச் செய்வதற்கும் இலத்திரனியல் விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்களை பயன்படுத்தக் கூடியதாகவிருக்கும். விவசாயிகளை எப்போதும் நேரடியாக தொடர்பு கொள்வதற்குப் பதிலாக, வேளாண்மையாளர்களின் அதிகரித்த செல்லிடத்தொலைபேசிப் பாவனை மூலம் விரிவாக்க முகவர்கள் குரல்ப்பதிவு, எழுத்து, ஒளிப்பதிவுகள் மற்றும் இணைய முறைகள் ஆகியவற்றின் சேர்க்கைகளைப் பயன்படுத்தி வேளாண்மையாளர்களை அடிக்கடி தொடர்பு கொள்ள முடியும். உதாரணமாக இந்தியாவில் காணப்படுகின்ற அக்ரோஸ்டார் தொழில்நுட்பத் தளமானது வேளாண்மை

நடவடிக்கைகளில் தமது உற்பத்தித்திறனை அதிகரித்துக் கொள்வதற்கும் தரம்வாய்ந்த உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கும் வேளாண்மையாளர்களுக்கு விவசாயம் சார்ந்த உள்ளீடுகளுடனும் பணிகளுடனும் ஒன்றினைந்த பரந்தவகையான பயிரியல் பற்றிய ஆலோசனைகளை வழங்குகின்ற அதேவேளை வேளாண்மை நடவடிக்கைகளில் இடம்பெறுகின்ற பொதுவான பிரச்சினைகளைத் தீர்க்கின்றது. தற்போது அக்றோஸ்டார் அதன் டிஜிட்டல் தளத்தில் 500,000 இற்கும் மேற்பட்ட வேளாண்மையாளர்களைத் தொடர்புபடுத்தி குஜராத், மஹாராஸ்டிரா மற்றும் ராஜஸ்தான் ஆகிய இந்திய மாநிலங்களில் தொழிற்படுகின்றது. அதேவேளை, கென்யா வேளாண்மைப் பொருள் பரிவர்த்தனை என்ற நிறுவனம் 'எஸ்எம்எஸ் சொக்கோனி' என்று அழைக்கப்படும் குறுந்தகவல் சேவையொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் நாட்டில் எப்பகுதியிலிருந்தேனும் வேளாண்மையாளர்கள் குறுந்தகவல் சேவை ஊடாக அல்லது செல்லிடத்தொலைபேசி செயலி ஒன்றினூடாக உதவுதொகை வழங்கப்பட்ட சேவைக் கட்டணத்தில் விலைகள் மற்றும் சலுகைகள் பற்றிய நடப்பு மற்றும் நம்பகமான சந்தைத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். தரவுகளினால் தூண்டப்படும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் உற்பத்தி மற்றும் சந்தைக் கேள்வி நிலைமைகளை சமநிலைப்படுத்தும் நோக்குடன் வேளாண்மைத் துறையினை உற்பத்தியினை மையப்படுத்திய நடவடிக்கைகளிலிருந்து சந்தையினை மையப்படுத்திய நடவடிக்கைகளுக்கு மேலும் மாற்றம் பெறச் செய்துள்ளன.

**இலங்கையில் பின்பற்றப்படும் புதிய தொழில்நுட்பங்களின் தற்போதைய நிலைமைகள்**

இலங்கை வேளாண்மைத் துறையில் முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துகின்றமை வேளாண்மையாளர்கள் மத்தியில் மாத்திரமின்றி வேளாண் வியாபாரங்கள் மத்தியிலும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறன் மேம்படுத்தல்களுக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தும் நோக்கத்துடன், வேளாண்மை சார்ந்த தகவல்களைப் பரவச்செய்வதற்கு இடைமுகத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் செல்லிடத்தொலைபேசித் தளங்கள் அதேபோன்று மென்பொருள் பிரயோகங்கள் போன்ற பல இ-வேளாண்மை நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டு வருகின்றன. விக்கிகொவியா வெப்தளம், அக்மிஸ் (குறுந்தகவல் சேவை மற்றும் சந்தை விலைத் தகவல் முறைமை), போக புரோகத்தனய (சிறந்த சந்தை விலையினைப் பெற்றுக்கொள்வதற்குப் பயிரிடப்பட வேண்டிய பயிர்கள் பற்றி வேளாண்மையாளர்களுக்கு மதியுரை வழங்குகின்ற செல்லிடத்தொலைபேசி செயலி), எஸ்எல் நெல் வளமாக்கி (வேளாண்மையாளர்களுக்கு வளமாக்கி பற்றிய பரிந்துரைகளை வழங்குகின்ற செல்லிடத்தொலைபேசி செயலி) மற்றும் கொவிபொல (சந்தைத் தொடர்புகளை வலுப்படுத்தல், விலைகள் பற்றிய விழிப்புணர்வினை அதிகரித்தல் மற்றும் சந்தைகளுக்கு எளிதாக செல்லக்கூடிய வழங்கல் மற்றும் கேள்வியினைப் பொருந்தச் செய்தல் போன்றன ஊடாக வேளாண்மை சமூகத்திற்கு ஆதரவளிக்கின்ற செல்லிடத்தொலைபேசி செயலி) போன்ற சில இ-வேளாண்மைப் பணிகள் வேளாண்மைத் திணைக்களத்தினதும் மற்றும் வேறுபல தனியார் நிறுவனங்களின் முன்முயற்சிகளாக தற்போது இலங்கையில் தொழிற்படுகின்றன. அதேவேளை, விதை மற்றும் நடுகைப் பொருள் முகாமைத்துவத் தகவல் முறைமை, சிறந்த வேளாண்மை நடைமுறை சான்றுபடுத்தலுக்கான கியுஆர் குறியீட்டு முறைமை மற்றும் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான முன்னேற்ற கண்காணிப்பு முறைமை என்பன தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக, இலங்கை நனோதொழில்நுட்ப நிறுவனமானது மெதுவாக விடுவிக்கப்படுகின்ற வளமாக்கி உற்பத்தி, நனோ பூஞ்சணநாசினிகளின் உருவாக்கம், வளமாக்கிகளின் எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதற்கு விதைகளுக்கு பூச்சு இடல், மண் சீராக்கம் மற்றும் மீளமைப்பை மேம்படுத்தல் போன்ற நனோதொழில்நுட்ப தொடர்பான பல எண்ணிக்கையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. மேலும், இலங்கையிலுள்ள பல எண்ணிக்கையான தனியார் தொழில்நுட்பக் கம்பனிகளும் ஆளில்லா விமான தொழில்நுட்பம் மற்றும் வினைத்திறன்மிக்க வானிலைத் தீர்வுகள் (உதாரணம்: வானிலை ஆசான்) போன்ற வேளாண்மை சார்ந்த கருமங்களுக்கான பல்வேறு தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளைத் தொடங்கியுள்ளன. தற்போது இடம்பெற்றுவருகின்ற கொவிட்-19 உலகலாவிய தொற்றுநோயின் போது மக்கள் நடமாட்டம் மற்றும் ஒன்றுகூடுதல்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் இறுதி நுகர்வோர்களை இணைக்கின்ற வேளாண்மை சார்ந்த வழங்கல் சங்கிலிக்கு ஆதரவளிப்பதற்கு வினைத்திறன்மிக்க தொழில்நுட்பங்களும் சமூக வலைத்தளங்களும் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதே விதத்தில் அறுவடை காலங்களை முகாமை செய்வதற்கும், அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களையும் விரயங்களையும் குறைப்பதற்கும் மற்றும் வேளாண்மை சமூகத்திற்கு சிறந்த விலை கிடைப்பதை உறுதிசெய்வதற்கும் சந்தைகளுடன் வேளாண்மை சார்ந்த உற்பத்தியாளர்களை இணைப்பதற்கு வினைத்திறன்மிக்க தொழில்நுட்பங்கள் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட முடியும்.

எவ்வாறாயினும், முன்னேற்றகரமான வேளாண்மை சார்ந்த தொழில்நுட்பங்கள் தொடர்பில் இலங்கையின் தனியார் துறையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகள் இன்னும் ஒரு சில முன்னோடிக் கம்பனிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவையாகக் காணப்படுவதுடன் பரந்தளவிலான பயன்பாடு பற்றி இன்னும் விழிப்படையவேண்டியுள்ளது. மேலும், இலங்கையிலுள்ள வேளாண்மை நிறுவனங்களும் அதேபோன்று வேளாண்மையாளர்களும் எதிர்பார்த்ததை விட குறைவான வேகத்திலேயே புதிய தொழில்நுட்பங்களை பின்பற்றுவதாகத் தென்படுகின்றது என்பதுடன் பண்ணைகள் போட்டித்தன்மைக்கே அடைக்கலம் கொடுக்க நாடுவதனால் அவை உற்பத்தித்திறனை அதிகரிக்கின்ற தொழில்நுட்பங்களில் முதலிடுகின்றமை குறைவான வேகத்திலேயே இடம்பெறுகின்றது. புதிய தொழில் நுட்பங்களுக்கு மாறிக்கொள்ளுகின்றமை மீதான கரிசனைகள், உயர் தொழில்நுட்ப வேளாண்மைக்கு மாற்றம்பெறச் செய்வதற்குத் தேவையான ஆரம்ப முதலீட்டினை மேற்கொள்வதற்கான

மட்டுப்படுத்தப்பட்ட மூலதனம், தொழில்நுட்பம் சார்ந்த கல்வி மற்றும் திறன்கள் போதாமை, தொழில்நுடபம் பற்றி அறிந்த இளைஞர்கள் வேளாண்மை நடவடிக்கைகளில் ஈடுபட தயங்குகின்றமை என்பன வேளாண்மை நிறுவனங்களாலும் வேளாண்மை சமூகத்தினாலும் தொழில்நுட்பம் குறைந்த வேகத்தில் பின்பற்றப்படுவதனை ஏற்படுத்தியுள்ளன. கிராமியப் பிரதேசங்களில் இணையத்தள இணைப்புகள் கிடைக்கப்பெறுகின்றமை மற்றும் வேகம் அத்துடன் கிடைக்கப்பெறுகின்ற சேவைகள் பற்றிய குறைவான விழிப்புணர்வு என்பனவும் வேளாண்மையாளர்களால் வினைத்திறன்மிக்க தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதனை மட்டுப்படுத்துகின்றது.

**முன்னோக்கிய பாதை**

இலங்கையின் வேளாண்மைத் துறையானது, அனைத்து வேளாண்மை நடவடிக்கைகள் நியதிகளிலும் நீண்டகாலமாக கணிசமான மாற்றமடைதலுக்குட்பட்டுள்ளது. இருப்பினும், வேளாண்மை சார்ந்த பெறுமதிச் சங்கிலிகளை மேம்படுத்தும் நோக்குடன் தொழில்நுட்பத்தினை நோக்காகக் கொண்ட வேளாண்மையினை நோக்கிய மேலதிக முன்னேற்றமானது வேளாண்மைத் துறையில் அடுத்த மட்ட அபிவிருத்திக்கும் வளர்ந்துவரும் சவால்களைக் கையாள்வதற்கும் இன்றியமையாதவையாகும். தொழில்நுட்பத்தைப் பின்பற்றுகின்றமை பற்றி துறைசார்ந்த மற்றும் மிகவும் கீழ்மட்ட மட்டுப்பாடுகளை அடையாளம் காணுதலானது மரபுசார்ந்த நடைமுறைகளிலிருந்து தொழில்நுட்பம் அடிப்படையிலமைந்த வேளாண்மைக்கு மாற்றமடைவதில் காணப்படுகின்ற தடைகளைக் குறைப்பதற்கு உதவும். தொழில்நுட்ப மாற்றமடைதலுக்கான மூலதன ஒதுக்கீட்டின் மீதான கொள்கை மறுசீரமைப்புகள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அதேபோன்று டிஜிட்டல் உட்கட்டமைப்பினை வலுப்படுத்தல் என்பன முக்கியமாகக் காணப்படுவதுடன் இதன்மூலம் துறையில் தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுவதனைத் தடைபடுத்துவதில் தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற கட்டமைப்புச் சார்ந்த தடங்கல்களை நிவர்த்திசெய்யும். தரவுகளிவினால் தூண்டப்படும், வினைத்திறன்மிக்க தொழில்நுட்ப் அடிப்படையிலமைந்த வேளாண்மை நடைமுறைகளுக்காக நாட்டில் உள்ள பல எண்ணிக்கையான வேளாண்மை தொடர்புபட்ட ஆராய்ச்சி நிறுவனங்கள் ஊடாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அதிகரித்த அரசாங்க முதலீடு மற்றும் அத்தகைய நடவடிக்கைகளில் முதலிடுவதற்கு தனியார் துறையினருக்கான ஆக்கபூர்வமான முதலீட்டுச் சூழலொன்றினை உருவாக்குதல் அத்துடன் அதிகரித்தளவில் சலுகை வீதங்களில் கொடுகடன்களை கிடைக்கப் பெறச்செய்தல் என்பன வேளாண்மைத் துறையில் தொழில்நுட்ப புத்தாக்கங்களைத் தூண்டுவதற்கு இன்றியமையாதவையாகும். இதற்கு மேலதிகமாக, கிடைக்கப்பெறுகின்ற சேவைகள் பற்றிய விழிப்புணர்வினை அதிகரித்தல் மற்றும் வேளாண்மையாளர் மட்ட முதலீடுகளுக்கு ஆதரவளிப்பதற்கு சலுகைக் கடன்களுக்கான அணுகுவழியினை அதிகரித்தல் என்பனவும் அடிப்படை மட்டத்தில் தொழில்நுட்ப ரீதியான பின்பற்றுதலுக்கான தடைகளை நீக்குவதற்கு மிக முக்கியமானவையாகும். நடுத்தரகாலம் தொடக்கம் நீண்டகாலப் போக்கில் தொழில்நுட்ப மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் பாடவிதானங்களுக்கு முன்னேற்றகரமான வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் தொடர்புபட்ட பாடங்களை அறிமுகப்படுத்துவது வேளாண்மைத் துறையில் தொழில்நுட்ப பின்பற்றுதலினை ஊக்குவிப்பதற்கு அத்தியாவசியமானதாக விளங்குகின்றது. அதே சந்தர்ப்பத்தில் வேளாண்மை நடைமுறைகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் உயிர்ச்சூழல் சிநேகத்தன்மையினையும் அதிகரிக்கும் பொருட்டு இலங்கையின் வரலாற்று ரீதியான வேளாண்மை முறைமைகளின் சிறந்த நடைமுறைகளை முடிந்தவரையில் நவீன தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைக்கும் நோக்குடன் அத்தகைய முறைமைகளை மறுசீரமைப்பதும் பொருத்தமானதாக விளங்குகின்றது.

---

**உசாத்துணைகள்**


1 Hyea, W. L. and Vikas, C. (2017) Agriculture 2.0: how the Internet of Things can revolutionize the farming sector.

2 Manoj, T. and Nimesha, D. (2019) Farm Smart! Developing Sri Lanka's Agriculture Sector in the 4IR.

3 Matthieu, D. C., Anshu, V. and Alvaro B. (2018) Agriculture 4.0: The Future of Farming Technology. World Government Summit.

4 Ranger, S. (2020). *What is the internet of things : everything you need to know about the IoT right now.* [online] Available at: https://www.zdnet.com/article/what-is-the-internet-of-things-everything-you-need-to-know-about-the-iot-right-now/

5 ScienceDaily (2020). *Nanotechnology*. [online] Available at: https://www.sciencedaily.com/terms/nanotechnology.htm


வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சியை ஊக்குவித்தன. வேளாண்மையுடன் தொடர்பான நடவடிக்கைகளின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட மெதுவடைவு, காலாண்டு அடிப்படையில் மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் வேளாண்மைப் பிரிவுடன் தொடர்பான துணைச் சுட்டெண்களில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, சராசரி அடிப்படையிலான வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் உற்பத்தி துணைச் சுட்டெண் இவ்வாண்டுப்பகுதியில் தேய்வடைவொன்றினைப் பதிவுசெய்துள்ளது.

## வேளாண்மை உற்பத்தி

**வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைகளின் வெளியீட்டை அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்திச் சுட்டெண், 2018இன் 11.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 0.03 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து பரந்தளவில் மாற்றமின்றிக் காணப்பட்டது.** சுட்டெண்ணிற்குள், நெல், தெங்கு மற்றும் விலங்கு வளர்ப்பு ஆகிய துணைத் துறைகள் அதிகரித்திருந்த அதேவேளையில் தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய பயிர்கள் (மரக்கறிகள், பழவர்க்கங்கள் மற்றும் ஏனைய களப்பயிர்கள்)

என்பவற்றின் துணைச் சுட்டெண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்து காணப்பட்டன. அதேவேளை, மீன்பிடி நடவடிக்கைகளிலும் சுருக்கமொன்று இவ்வாண்டுப் பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### நெல்

**நெல் உற்பத்தியானது 2018/19 பெரும்போக பருவகாலத்தில் பதிவுசெய்யப்பட்ட அபரிமிதமான அறுவடையுடன் 2019இல் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தது.** அதற்கிணங்க, நெல் உற்பத்தியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் 16.9 சதவீதத்தால் 4.6 மெ.தொன்களாக அதிகரித்திருந்தது. இவ்வாண்டுப் பகுதியில் அறுவடைய செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு 957,596 ஹெக்டேயர்களுக்கு 8.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதேவேளையில், மொத்த நெல் விளைச்சலானது 2018இன் ஒரு ஹெக்டேயருக்கு 4,443 கி.கிறாம்களிலிருந்து 2019இல் ஒரு ஹெக்டேயருக்கு 4,795 கி.கிறாம்களாக அதிகரித்தது. சிறுபோக பருவகால உற்பத்தியில் ஏற்பட்ட குறைவிற்கு மத்தியில், 2019இன் நெல் விளைச்சலில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பானது 2018/19 பெரும்போக பருவாகலத்தின் வளர்ச்சியில் ஏற்பட்ட விளைவொன்றாகும். 2018/19 பெரும்போக பருவகாலத்தில் நெல் உற்பத்தியானது 3.0 மில்லியன் மெ.தொன்களாகக் காணப்பட்டது. இது முன்னைய பெரும்போக பருவகாலத்தின் உற்பத்தியை விட 28.2 சதவீத அதிகரித்த வளர்ச்சியாகும். 2018/19 பெரும்போக பருவகால உற்பத்தியானது கடந்த நான்கு தசாப்தங்களில் நாட்டில் பதிவாகிய மிக அதிகமான நெல் உற்பத்தியாகும். 2018 இறுதிப்பகுதியில் அனுபவிக்கப்பட்ட சாதகமான மழைவீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட ஹெக்டேயரொன்றிற்கான அதிக விளைச்சல் மற்றும் முக்கிய நெல் உற்பத்தி செய்யும் இடங்களில் விதைக்கப்பட்ட நிலத்தின் அதிகரித்த நிலப்பரப்பு பெரும்பாக பருவகால உற்பத்தியின் அதிகரிப்பிற்கு பகுதியளவிலான காரணங்களாகும். 2018/19 பெரும்போக பருவகாலப்பகுதியில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 647,243 ஹெக்டேயர்களாக 16.2 சதவீதத்தால் கணிசமானளவு அதிகரித்தது. 2018/19 பெரும்போக பருவகாலப்பகுதியில் ஹெக்டேயரொன்றிற்கான நெல் விளைச்சலானது முன்னைய ஆண்டின் தொடர்பான பருவகாலத்தின் 4,302 கி.கிறாம்களிலிருந்து 4,747 கி.கிறாம்களாக 10.3 சதவீதத்தால் அதிகரித்தது. அதேவேளை, 2019 சிறுபோக பருவகாலப்பகுதியில் நெல் உற்பத்தியானது 2018 உடன் ஒப்பிடுகையில் 1.5 மில்லியன் மெ.தொன்களாக 0.9 சதவீதத்தால் சிறிதளவில் குறைவடைந்தது. இது முக்கியமான உற்பத்தி இடங்களில் நிலவிய வரட்சி நிலைமைகள் மற்றும் பூச்சிகளின் தாக்கம் காரணமாக ஏற்பட்டதாகும். இதன் விளைவாக, 2019 சிறுபோக பருவகாலத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 310,353 ஹெக்டேயருக்கு 5.2 சதவீதத்தால் குறைவடைந்தது. இருப்பினும், 2019 சிறுபோக பருவகாலத்தின் ஹெக்டேயரொன்றிற்கான நெல் விளைச்சலானது 2018இன் தொடர்புபட்ட சிறுபோக பருவகாலத்தின் 4,683 கி.கிறாம்களிலிருந்து 4,896 கி.கிறாம்களாக 4.5 சதவீதத்தால் அதிகரித்தது. பெரும்போக மற்றும் சிறுபோக பருவகாலங்களின்

அட்டவணை 2.3
**வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010 = 100)**

| விடயம் | 2018 (அ) | 2019 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2017/18 (அ) | 2018/19 (ஆ) |
| வேளாண்மை மற்றும் மீன்பிடி | 126.1 | 126.2 | 11.0 | 0.03 |
| 1 வேளாண்மை | 119.6 | 121.0 | 14.7 | 1.1 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 112.5 | 113.3 | 16.7 | 0.7 |
| நெல் | 105.1 | 122.8 | 64.9 | 16.9 |
| தேயிலை | 97.5 | 96.3 | -1.0 | -1.3 |
| இறப்பர் | 61.5 | 55.7 | -0.6 | -9.5 |
| தெங்கு | 92.6 | 108.9 | 7.1 | 17.6 |
| ஏனைய பயிர்கள் | 152.8 | 136.3 | 12.6 | -10.8 |
| மரக்கறிகள் | 145.3 | 123.0 | 17.7 | -15.3 |
| பழங்கள் | 183.9 | 150.1 | 12.1 | -18.4 |
| ஏனைய களப்பயிர்கள் | 134.2 | 118.8 | 13.8 | -11.4 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 176.4 | 181.9 | 5.9 | 3.1 |
| 2 மீன்பிடி | 158.0 | 151.6 | -0.8 | -4.0 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


அட்டவணை 2.4
**நெல் துறை புள்ளிவிபரங்கள்**

| விடயம் | அலகு | 2018 (அ) | | | 2019 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 667 | 374 | 1,041 | 748 | 369 | 1,117 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 620 | 363 | 983 | 724 | 346 | 1,070 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 557 | 327 | 885 | 647 | 310 | 958 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 2,397 | 1,533 | 3,930 | 3,073 | 1,519 | 4,592 |
| | '000 புசல்கள் | 114,874 | 73,466 | 188,340 | 147,256 | 73,466 | 220,722 |
| சராசரி விளைச்சல் (இ) | கி.கி./ எக்டேயர் | 4,302 | 4,683 | 4,443 | 4,747 | 4,896 | 4,795 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில் | 3,986 | 2,893 | 6,879 | 4,233 | 3,068 | 7,301 |
| அரிசி இறக்குமதிகள் (ஈ) | '000 மெற்றிக்தொன் | வி.கி. | வி.கி. | 249 | வி.கி. | வி.கி. | 24 |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசிற்கு சமனான நெல் (ஈ) | '000 மெற்றிக்தொன் | வி.கி. | வி.கி. | 356 | வி.கி. | வி.கி. | 35 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பெரும்போக மற்றும் சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்ற அதேவேளை மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணிப்பிடப்படுகின்றது.
(ஈ) ஆண்டுக்கான பெறுமதி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.5
அரிசி : நிரம்பல் மற்றும் கேள்வி



*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

வருடாந்த நெல் உற்பத்தியானது, இது 2.9 மில்லியன் மெ.தொன் அரிசிக்குச் சமனானது, இது ஏறத்தாழ 14 மாதங்களுக்கான அரிசியின் உள்நாட்டுக் கேள்வியைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**ஆண்டின் முதலரைப்பகுதியில் திறந்த சந்தையில் நெல் விலைகள் குறைவானதாகவே காணப்பட்டிருப்பினும் இரண்டாம் அரைப்பகுதியில் விலைகள் அதிகரிக்கும் போக்கைக் காட்டியுள்ளன.** 2019இல் சம்பா மற்றும் நாடு வகைகளுக்கான உத்தரவாதமளிக்கப்பட்ட நெல் கொள்வனவு விலைகள் முறையே கி.கிறாமொன்றிற்கு ரூ.41.00 மற்றும் ரூ.38.00 ஆகக் காணப்பட்டன. 2018/19 பெரும்போக பருவகாலத்திலிருந்து அதிகரித்த நெல் விநியோகத்தால் ஆதரவளிக்கப்பட்டு ஆண்டின் முதலரைப்பகுதியில் நெல்லின் பண்ணை விலைகள் குறைந்தளவாக் காணப்பட்டன. இருப்பினும் 2019 சிறுபோக பருவகாலத்தில் திறந்த சந்தையில் போட்டி விலையில் தனியார் ஆலையாளர்களின் மூலமான அதிகரித்த நெல் கொள்வனவு மற்றும் நெல்லின் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம் என்பவற்றின் காரணமாக, 2019இன் இறுதிப்பகுதியில் பெரும்பாலான நெல் உற்பத்தி இடங்களில் அனைத்து நெல் வகைகளினதும் விலைகள் அதிகரித்திருந்தன. ஒட்டுமொத்தத்தில், சம்பா நெல்லின் சராசரி விலை 2018இன் கி.கிறாமொன்றுக்கான ரூ.51.04 இலிருந்து 2019இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.42.78 ஆக குறைவடைந்த அதேவேளையில் நாட்டு நெல்லின் சராசரி விலையானது 2018இன் கி.கிறாமொன்றிற்கான ரூ.40.17 இலிருந்து 2019இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.43.01 ஆக அதிகரித்தது. நெல் விலைகளின் நுகர்வுகளுக்கேற்ப, இவ்வாண்டுப்பகுதியில் சம்பா அரிசியின் சராசரி சில்லறை விலையானது கி.கிறாமொன்றிற்கு ரூ.102.29 ஆக 6.4 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளையில் நாட்டு அரிசியின் சராசரி சில்லறை விலையானது கி.கிறாமொன்றிற்கு ரூ.93.48 ஆக 1.7 சதவீதத்தால் அதிகரித்தது. அபரிமிதமான அறுவடையுடன், 2019இல் அரிசி இறக்குமதியானது கடந்த ஆண்டிலிருந்து 90.3 சதவீதத்தால் கணிசமானளவு குறைவடைந்தது. அதன்படி, 2019இல் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவானது முன்னைய ஆண்டின் 248,901 மெ.தொன்களிலிருந்து 24,193 மெ.தொன்களாக வீழ்ச்சியடைந்திருந்தது. இருப்பினும், இவ்வாண்டின் இறுதியில் சந்தைக்கு தனியார் துறையிலிருந்தான அரிசி விநியோகத்தில் ஏற்பட்ட பற்றாக்குறையானது சில்லறை அரிசி விலைகளின் அதிகரிப்பிற்குக் காரணமாகும். ஆகவே, நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியங்களில் சேமிக்கப்பட்டிருந்த சுமார் 40,000 மெ.தொன் நெல் இருப்புக்களை அரைப்பதன் மூலமும் லங்கா சதோசா மூலமாக சந்தைக்கு அரிசியை வழங்கியதன் மூலமாகவும் அரிசி விலைகளை நிலைப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது. மேலும், அரிசி ஆலையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் நுகர்வோரின் இழப்பில் அளவுகடந்த இலாபம் ஈட்டுவதைத் தடுக்கும் வகையில் சம்பா அரிசி மற்றும் நாட்டு அரிசிக்கான அதிகூடிய சில்லறை விலையை கி.கிறாமொன்றிற்கு ரூ.98.00 ஆக நிர்ணயிப்பதற்கு அமைச்சர்களின் அமைச்சரவை தீர்மானித்தது. இருப்பினும், கீரி சம்பா மற்றும் சுதுரு சம்பா போன்ற விசேட வகை அரிசிகளுக்கு அதிகூடிய சில்லறை விலை பொருந்தாது.

## தேயிலை

**2017 முதல் தேயிலை உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட கீழ் நோக்கிய போக்கானது முதன்மையாக உள்நாட்டுக் காரணிகளால் 2019இலும் தொடர்வடைந்தது.** 2019இல் தேயிலை உற்பத்தியானது 300.1 மில்லியன் கி.கிறாமாக 1.3 சதவீதத்தால் குறைவடைந்தது. இதற்கு கூலிப் பேச்சுவார்த்தைகளின் போது எழுந்த தொழிலாளர் பிரச்சினைகள், ஆண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய வரட்சியான காலநிலை நிலைமைகள் மற்றும் நான்காம் காலாண்டின் பலத்த மழை ஆகியவை காரணங்களாகும். அதற்கிணங்க, உயர் நிலத் தேயிலை உற்பத்தியானது 63.1 மில்லியன் கி.கிறாம்களாக 3.0 சதவீதத்தால் குறைவொன்றை அறிக்கையிட்ட அதேவேளையில் மத்திய நிலத் தேயிலை வெளியீடானதும் 47.2 மில்லியன் கி.கிறாம்களாக 0.1 சதவீதத்தால் சிறிதளவில் குறைவடைந்தது. மொத்த வெளியீட்டில் 62 சதவீதத்திற்கு வகைகூறும் தாழ்நிலத் தேயிலையானது 2019இல் 189.9 மில்லியன் கி.கிறாம்களாக 1.0 சதவீதத்தால் குறைவடைந்தது. சிறுஉடமையாளர் துறையின் சராசரி விளைச்சலானது பெருந்தோட்டத் துறையை விட கணிசமானளவு அதிகமாகக் காணப்பட்டது, இது பழைய தோட்டங்களை அதிக விளைச்சலைத் தரும் தேயிலைச் செடிகளுடன் மீள்நடுகை மற்றும் நிரப்பல் நடுகை செய்வதன் மூலமாகவும் சிறந்த வேளாண்மை நடைமுறைகள் மூலமாகவும் விளைச்சலை அதிகரிக்கக்கூடிய ஆற்றலை பிரதிபலிக்கின்றது.

**தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி இருந்த போதிலும், கொழும்பு ஏலத்தில் வர்த்தகம் செய்யப்பட்ட தேயிலையின் அளவும் ஏற்றுமதி செய்யப்பட்ட தொகையும் 2019இல் அதிகரித்திருந்தன.** இருப்பினும், தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலையானது

2018இல் பதிவு செய்யப்பட்ட கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 5.1 உடன் ஒப்பிடுகையில் 2019இல் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.6 இற்கு 9.1 சதவீதத்தால் குறைவடைந்தது. அதேவேளையில், கொழும்பு தேயிலை ஏலத்தின் வருடாந்த சராசரி விலையானது 2018இல் அறிக்கையிடப்பட்ட கி.கிறாமொன்றிற்கு ரூ.581.58 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.546.67 ஆக 6.0 சதவீதத்தால் குறைவடைந்தது. கொழும்பு தேயிலை ஏலத்தில் தேயிலை விலைகளில் அதிகூடிய ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியானது உயர் நிலைத் தேயிலையில் (10.9 சதவீதம்) அவதானிக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து மத்திய நிலத் தேயிலை (10.0 சதவீதம்) மற்றும் தாழ்நிலைத் தேயிலையில் (3.6 சதவீதம்) அவதானிக்கப்பட்டது. தேயிலை ஏற்றுமதியிலிருந்தான வருவாயை அதிகரிப்பதற்கு, இத்துறையில் பெறுமதி கூட்டலை மேம்படுத்துதல், பண்டகசாலை மற்றும் பொதியிடல் வசதிகளை மேம்படுத்தல் மற்றும் நுகர்வோர் வரையிலான பெறுமதிச் சங்கிலி முழுவதும் தரத்தை உறுதிப்படுத்தல் போன்றன அவசியமானதாகும். உற்பத்தியாளர்களின் சொந்த நாமத்தை உருவாக்குவதன் மூலம் வெளிநாட்டுக் கொள்வனவாளர்களுடன் நேரடி இணைப்புக்களைக் கட்டியெழுப்புவது தேயிலை உற்பத்தியாளர்களுக்கான சிறந்த விலைகளையும் நிலையான சந்தையையும் உறுதி செய்யும்.

## இறப்பர்

**அண்மைய ஆண்டுகளில் குறைவடைந்துவரும் போக்கினையுடைய இறப்பர் உற்பத்தியானது 2019இல் 74.8 மில்லியன் கி.கிறாம்களாக 9.5 சதவீதத்தால் மேலும் குறைவடைந்தது, இது வரலாற்றில் மிகக் குறைவான வருடாந்த வெளியீடாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.** இக்குறைவானது சிறுஉடமையாளர் மற்றும் தோட்டத் தொழில் துறைகள் இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளதுடன் இது பிரதானமாக ஆண்டின் பிற்பகுதியின் மழைக்கால காலநிலை நிலைமைகளினால் பாலெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள் மற்றும் குறைந்த ஊதிய விலைகள் காரணமாக பாலெடுக்கும் செயற்பாடுகளைக் கைவிடுதல் என்பவற்றால் உந்தப்பட்டதாகும். மொத்த இறப்பர் உற்பத்தியில் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறும் தட்டை இறப்பரின் உற்பத்தியின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியால் இக்குறைவானது பிரதிபலிக்கப்பட்டது. அதன்படி, தட்டை இறப்பர் உற்பத்தி 2018இன் 41.3 மில்லியன் கி.கிறாம்களிலிருந்து 37.4 மில்லியன் கி.கிறாம்களாக 9.5 சதவீதத்தால் குறைவடைந்தது. கிறேப் இறப்பர் உற்பத்தியும் 14.4 மில்லியன் கி.கிறாம்களாக 0.5 சதவீதத்தால் சிறிதளவான குறைவொன்றைப் பதிவுசெய்தது. மொத்த இறப்பர் உற்பத்தியில் ஏறத்தாழ 30 சதவீதத்தை வகைகூறும் ஏனைய இறப்பர் வகைகளின் உற்பத்தியானது முன்னைய ஆண்டின் 26.8 மில்லியன் கி.கிறாம் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 22.9 மில்லியன் கி.கிறாம்களாக 14.3 சதவீதத்தால் குறைவடைந்தது.

**2019 காலப்பகுதியில் இறப்பர் துறையின் குறைவான வெளியீடானது ஏற்றுமதியின் அளவைக் குறைத்துள்ளது.** அதற்கிணங்க, இலங்கையின் இயற்கை இறப்பர் ஏற்றுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் 13.0 மில்லியன் கி.கிறாம்களாக 7.0 சதவீதத்தால் குறைவடைந்தது. கடந்த சில ஆண்டுகளாகக் குறைவடைந்த கைத்தொழில் துறையில் இறப்பரின் உள்நாட்டு நுகர்வானது, இறப்பர் தொடர்பான உள்நாட்டு உற்பத்தித் துறையின் கட்டுப்படுத்தப்பட்ட செயலாற்றம் காரணமாக 113 மில்லியன் கி.கிறாம்களாக 16.8 சதவீதத்தால் மேலும் குறைவடைந்தது. அதேவேளையில், 2019இல் இறப்பரின் உற்பத்திச் செலவானது கி.கிறாமொன்றிற்கு ரூ.210.00 ஆக 2.4 சதவீதத்தால் அதிகரித்தது. இருப்பினும், கொழும்பு இறப்பர் ஏலத்தில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர் இல.1 மற்றும் லேட்டக்ஸ் கிறேப்பின் சராசரி விலைகள் முறையே கி.கிறாமொன்றிற்கு ரூ.288.51 மற்றும் கி.கிறாமொன்றிற்கு ரூ.302.32 ஆகக் காணப்பட்டன. இதன் விளைவாக குறைவான இலாப எல்லை ஏற்பட்டு, பாலெடுக்கும் செயற்பாடுகள் மற்றும் உற்பத்தியாளர்களினால் இறப்பர் பயிர்ச்செய்கையில் மேலதிகமாக முதலிடுதல் என்பவற்றை மந்தப்படுத்துகின்றன. உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளின் மெதுவடைவு மற்றும் ஒப்பீட்டளவில் குறைவான பெற்றோலிய விலைகள் என்பவற்றின் கீழ் இயற்றை இறப்பருக்கான பன்னாட்டு மற்றும் உள்நாட்டுக் கேள்வி குறைவாகக் காணப்பட்டது. இவ்வாண்டுப்பகுதியில் இயற்கை இறப்பர் இறக்குமதி 50.0 மில்லியன் கி.கிறாம்களில் 24.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், ஒப்பீட்டளவில் குறைவான உலகளாவிய எண்ணெய் விலைகள் காரணமாக செயற்கை இறப்பர் இறக்குமதி 64.0 மில்லியன் கி.கிறாம்களாக 2.1 சதவீதத்தால் அதிகரித்தது.

## தெங்கு

**2019இல் தெங்கு உற்பத்தி 3,085.6 மில்லியன் காய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 2018இன் வெளியீட்டை விட 17.6 சதவீத மேம்பாடாகக் காணப்பட்டது.** தெங்கு முக்கோண வலயம் மற்றும் ஏனைய தெங்கு பயிரிடப்படும் பிரதேசங்களில் 2018இல் பதிவாகிய சாதகமான மழைவீழ்ச்சியின் காலங்கடந்த விளைவு வெளியீட்டின் அதிகரிப்பிற்குக் காரணமாகும். அதிகரித்த காய் உற்பத்திக்கேற்ப, தெங்கினை அடிப்படையாகக் கொண்ட பிரதான உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியும் மேம்பாடொன்றைக் காட்டியது. அதன்படி, முன்னைய ஆண்டில் 16.7 சதவீதக் குறைவொன்றை அறிக்கையிட்ட உலர்த்திய தேங்காய் துருவலின் உற்பத்தி 44,081 மெ.தொன்களாக 79.0 சதவீத அதிகரிப்பொன்றுடன் கணிசமானளவு மீட்சியடைந்தது. 2019இல் தேங்காய் எண்ணெய் உற்பத்தியும் 44,648 மெ.தொன்களாக 309.2 சதவீதத்தால் அதிகரித்ததுடன் வேர்ஜின் தேங்காய் எண்ணெய் உற்பத்தி 12,725 மெ.தொன்களுக்கு 2.8 சதவீதத்தால் அதிகரித்தது. அதற்கிணங்க, பாம் எண்ணெயின் இறக்குமதியானது

### அட்டவணை 2.5
### முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகை | அலகு | 2018 (அ) | 2019 (ஆ) | மாற்றம் (%) 2017/18 (அ) | மாற்றம் (%) 2018/19 (ஆ) |
|---|---|---|---|---|---|
| **1. தேயிலை** | | | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 303.9 | 300.1 | 5.0 | -1.3 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | ‘000 எக்டேயர்கள் | 200 | 200 | -0.5 | - |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | ‘000 எக்டேயர்கள் | 193 | 193 | - | - |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 475.29 | 483.79 | -0.5 | 1.8 |
| 1.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 581.58 | 546.67 | 31.1 | -6.0 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 820.75 | 822.25 | 26.2 | 0.2 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,027 | 638 | -9.6 | -37.9 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 435 | 296 | 95.7 | -32.0 |
| 1.8 மொ.உ.உ.,இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.7 | 0.7 | - | - |
| **2. இறப்பர்** | | | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 82.6 | 74.8 | 5.1 | -9.5 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு | ‘000 எக்டேயர்கள் | 137 | 138 | 2.9 | 0.7 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | ‘000 எக்டேயர்கள் | 107 | 112 | 3.8 | 4.7 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 205.00 | 210.00 | 8.3 | 2.4 |
| 2.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 281.36 | 288.51 | 40.7 | 2.5 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 363.93 | 332.29 | 16.7 | -8.7 |
| 2.6 மீள்நடுகை (ஊ) | எக்டேயர்கள் | 870 | 1,006 | -8.8 | 15.6 |
| 2.7 புதிய பயிரிடுகை (ஊ) | எக்டேயர்கள் | 980 | 1,099 | 10.1 | 12.1 |
| 2.8 மொ.உ.உ இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.2 | 0.2 | - | - |
| **3. தெங்கு** | | | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 2,623 | 3,086 | -18.7 | 17.6 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | ‘000 எக்டேயர்கள் | 499 | 503 | -3.0 | 0.8 |
| 3.3 உற்பத்திச் செலவு | ரூபா/காய் | 18.84 | 18.33 | -0.1 | -2.7 |
| 3.4 சராசரி விலை | | | | | |
| - உற்பத்தியாளர் விலை | ரூபா/காய் | 60.68 | 47.04 | 95.2 | -22.5 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (எ) | ரூபா/காய் | 68.29 | 41.60 | 50.7 | -39.1 |
| 3.5 மீள்நடுகை/கீழ்பயிரிடுகை (ஏ) | எக்டேயர்கள் | 7,548 | 5,931 | 64.6 | -21.4 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 10,183 | 6,842 | 63.6 | -32.8 |
| 3.7 மொ.உ.உ இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.6 | 0.7 | -14.3 | 16.7 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபவீச்சு உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஐ) புதிதாக நடுகையிடப்பட்ட பரப்பானது ஒரு எக்டேயருக்கு 158 விதைகள் என்ற மாற்றல் வீதத்தில் தெங்குப் பயிர்ச்செய்கை சபையால் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது.

*மூலங்கள்:* இலங்கைத் தேயிலைச் சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத்திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச்சபை
தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சபை
பெருந்தோட்ட கம்பனிகள்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

2018இன் 217,730 மெ.தொன்களிலிருந்து 2019இல் 155,997 மெ.தொன்களாக கணிசமானளவு குறைவடைந்தது. முக்கியமாக ஏற்றுமதிச் சந்தைக்கென உற்பத்தி செய்யப்படுகின்ற தேங்காய் கிறீம், தேங்காய் பால்மா மற்றும் தேங்காய் பால் உள்ளடங்கலான பெறுமதி கூட்டப்பட்ட கைத்தொழில்களின் விரிவாக்கத்திற்கு மேம்படுத்தப்பட்ட தேங்காய் உற்பத்தியானது உதவிபுரிந்தது. இது முன்னை ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்ததுள்ளது.

**கொழும்பு தெங்கு ஏலத்தில் தெங்கு விலைகளானது அதிகரித்த நிரம்பல் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் குறைவானதாகவே காணப்பட்டது.** கொழும்பு தெங்கு ஏலத்தில் தெங்கின் சராசரி ஏல விலையானது 2018இன் காயொன்றுக்கு ரூ.45.55 இலிருந்து 2019இல் காயொன்றுக்கு ரூ.27.55 ஆகக் குறைவடைந்த அதேவேளையில் தெங்கின் சராசரி சில்லறை விலையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் காயொன்றுக்கு ரூ.50.64 ஆக 27.4 சதவீதமாகக் குறைவடைந்தது. ஏனைய தெங்கு உற்பத்திகளிலும் விலைக் குறைவானது அவதானிக்கப்பட்டது. அதன்படி, தேங்காய் எண்ணெயின் சராசரி விலை 750 மி.லீற்றர் போத்தலொன்றுக்கு ரூ.260.16 ஆக 8.0 சதவீதத்தால் குறைவடைந்த வேளையில் உலர்த்திய தேங்காய் துருவலின் சராசரி உள்ளூர் சந்தை விலை 2018இன் கி.கிறாமொன்றிற்கு ரூ.378.22 இலிருந்து 2019இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.251.03 ஆகக் குறைவடைந்தது. அதேவேளையில், உலர்த்திய தேங்காய் துருவல் ஏற்றுமதியாளர்கள் அதிகரித்த உள்நாட்டு உற்பத்தியின் முழுமையான நன்மையையும் பயன்படுத்தக்கூடியதாகக் காணப்பட்டதுடன் இது உலர்த்திய தேங்காய் துருவல் ஏற்றுமதியின் 154.7 சதவீத வளர்ச்சியின் மூலம் பிரதிபலிக்கப்பட்டது.

## சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

**இவ்வாண்டுப்பகுதியின் மோசமான காலநிலை நிலைமைகளிற்கு மத்தியிலும் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி 2019இல் மீட்சியடைந்தது.** ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி 2018இல் பதிவுசெய்யப்பட்ட 12.3 குறைவுடன் ஒப்பிடுகையில் 2019இல் 6.0 சதவீதத்தால் அதிகரித்தது. கராம்பு, கொக்கோ, பாக்கு, சாதிக்காய் மற்றும் அதன் வெளிப்பகுதி என்பனவற்றின் உற்பத்தி 2019இல் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்த வேளையில் மிளகு, கறுவா, ஏலக்காய் மற்றும் சிற்ரநெல்லா உற்பத்தியும் குறைவடைந்தது. அதற்கிணங்க, கராம்பு உற்பத்தி 4,786 மெ.தொன்களாக 42.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மேலும், கொக்கோவின் உற்பத்தியானது 548 மெ.தொன்களாக 32.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததுடன் சாதிக்காய் மற்றும் அதன் வெளிப்பகுதியின் உற்பத்தியானது 5,119 மெ.தொன்களாக 22.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. அதேவேளையில், மிளகின் பண்ணை விலையானது அதன் குறைவடையும் போக்கைத் தொடர்வதுடன் 2019இல் கி.கிறாமிற்கு ரூ.517.60 ஆக 11.6 சதவீதத்தால் குறைவடைந்தது. இது 2019இல் குறைந்தளவிலான உலகளாவிய கேள்வியைப் பிரதிபலிக்கின்றது. முக்கியமாக பூக்கும் மற்றும் பழுக்கும் பருவகாலங்களின் போதான நீடித்த வரட்சி காரணமாக மிளகு அறுவடையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.8 சதவீதத்தால் குறைவடைந்தது. மேலும், கறுவா உற்பத்தியானது 2018இன் 20,398 மெ.தொன்களிலிருந்து

2019இல் 20,352 மெ.தொன்களுக்கு 0.2 சதவீதத்தால் சிறிதளவு குறைவடைந்துள்ளது. மேலும், விலைகளின் குறைவானதும் வேளாண்மையாளர்களின் ஊக்கத்தைக் குறைவடையச் செய்ததுடன் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மீது தேசிய உரையாடலொன்று ஏற்படக் காரணமாகியது. அதேவேளையில், 2019இல் கராம்பு, சாதிக்காய் மற்றும் அதன் வெளிப்பகுதி ஆகியவற்றின் ஏற்றுமதியளவானது அதிகரித்த வேளையில் மிளகு, ஏலக்காய் மற்றும் கோப்பி என்பவற்றின் ஏற்றுமதி அளவு குறைவடைந்தது. இதன் விளைவாக சிறு ஏற்றுமதிப் பயிர்களிலிருந்தான மொத்த வருவாயானது 1.7 சதவீதத்தால் குறைந்தது. ஒழுங்கற்ற மழைக் கோலங்கள், சிறு ஏற்றுமதிப் பயிர் துறைக்கு குறைவான விளைச்சல் மற்றும் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை உருவாக்கக்கூடிய சவாலாகத் தொடர்ந்து காணப்பட்டது. சிறு ஏற்றுமதி வேளாண்மைத் துறையில் பெறுமதி கூட்டலை ஊக்குவிப்பதானது அதிகரித்துவரும் உற்பத்திச் செலவால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளவும் மற்றும் பன்னாட்டுச் சந்தையில் உயர்ந்தளவான பங்கைக் கைப்பற்றவும் கூடிய வகையில் உபாய முன்னுரிமையொன்றாகக் காணப்படுதல் அவசியமாகும்.

### ஏனைய களப் பயிர்கள்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, 2019 காலப்பகுதியில் மோசமான காலநிலை மற்றும் பூச்சித்தாக்கங்களின் விளைவால் ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி குறைவொன்றைப் பதிவுசெய்தது.** ஏனைய களப்பயிர்களின் உற்பத்தியானது, 2018/19 பெரும்போக பருவகாலப்பகுதியின் உற்பத்தியில் ஏற்பட்ட 13.9 சதவீதமான குறைவு மற்றும் 2019 சிறுபோக பருவகாலத்தில் ஏற்பட்ட 1.0 சதவீதமான சிறிதளவான குறைவு என்பவற்றின் இணைந்த விளைவாக 545,358 மெ.தொன்களாக 10.1 சதவீதத்தால் குறைவடைந்தது. மோசமான வானிலை மற்றும் படைப்புழு நோய்ப்பரவல் விளைவாக 2018/19 பெரும்போக பருவகாலத்தில் பதிவுசெய்யப்பட்ட பாரிய பயிர் அழிவுகள் காரணமாக சோள உற்பத்தியானது 2019இல் 245,647 மெ.தொன்களாக 9.0 சதவீதத்தால் குறைவடைந்தது. மேலும், பெரிய வெங்காய உற்பத்தி 2018இன் 28,047 மெ.தொன்களிலிருந்து 2019இல் 18,022 மெ.தொன்களுக்கு 35.7 சதவீதத்தால் குறைவடைந்தது. இது முக்கியமாக 2019இல் சராசரி விளைச்சலானது ஹெக்டேயரொன்றிற்கு 20 மெ.தொன்களாக ஏறத்தாழ 4 சதவீதத்தால் குறைவடைந்ததும் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் 36.2 சதவீதமான கணிசமான குறைவு காரணமாகவும் ஏற்பட்டதாகும். அதேவேளையில், பெரிய வெங்காய ஏற்றுமதி மீது இந்தியா விதித்த கட்டுப்பாடுகள் காரணமாக பெரிய வெங்காயத்தின் இறக்குமதியானது 2019 காலப்பகுதியில் 240,102 மெ.தொன்களாக 2.5 சதவீதத்தால் குறைவடைந்தது. இதன் விளைவாக, உள்ளூர் சந்தையில் பெரிய வெங்காய விலை அதிகரித்துக் காணப்பட்டது. இருப்பினும், உருளைக்கிழங்கு உற்பத்தியானது 2018இல் உற்பத்தி செய்யப்பட்ட 88,897 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 2019இல் 101,642 மெ.தொன்களாக 14.3 சதவீதத்தால் கணிசமானளவு அதிகரித்தது. பயிரிடப்பட்ட நிலத்தின் பரப்பானது 2019இல் 5,610 ஹெக்டேயர்களுக்கு 8.4 சதவீதத்தால் அதிகரித்தது காரணமாக அமையலாம். அதிகரித்த உள்நாட்டு நிரம்பலிற்கேற்ப உருளைக்கிழங்குகளின் இறக்குமதியும் 10.5 சதவீதத்தால் இவ்வாண்டில் குறைவடைந்தது. மேலும், குரக்கன், உழுந்து, இஞ்சி, மிளகாய், சிவப்பு வெங்காயம், நிலக்கடலை, தட்டைப் பயறு மற்றும் பயறு என்பவற்றின் உற்பத்தியும் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளன. இதனால் ஆண்டின் பிற்பகுதியில் கணிசமான விலைத் தளம்பல்கள் ஏற்பட்டதுடன் இது உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பொருத்தமான பயிரிடல் திட்டங்களுடன் கூடிய வர்த்தகளவிலான வேளாண்மையை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

2

### காய்கறிகள்

**பூச்சிப் பாதிப்புக்கள் மற்றும் தீவிரமான காலநிலை நிலைமைகள் காரணமாக காய்கறிகளின் நிரம்பல் குறைவடைந்தது. மொத்தக் காய்கறி உற்பத்தியானது 2018இன் 1,698,698 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 2019இல் 1,497,733 மெ.தொன்களாக 11.8 சதவீதத்தால் கணிசமாகக் குறைவடைந்தது.** இக் குறைவானது முக்கியமாக 2018/19 பெரும்போக பருவகாலத்தில் காய்கறிகளின் குறைவான உற்பத்தியின் காரணமாக ஏற்பட்டதாகும். இது படைப்புழுவின் நோய்த்தொற்று மற்றும் ஆண்டின் முற்பகுதியில் நீடித்த வரட்சியான காலநிலை நிலைமைகள் ஆகியவற்றின் காரணமாக முன்னைய பெரும்போக பருவகாலத்தை விட 15.2 சதவீதக் குறைவொன்றைப் பதிவுசெய்தது. 2018/19 பெரும்போக பருவகாலத்தில் நெற் பயிர்ச்செய்கை அதிகரித்ததைத் தொடர்ந்து, காய்கறிப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் நிலத்தின் பரப்பானது குறைவடைந்தமையாலும் 2018/19 பெரும்போக பருவகாலத்தின் காய்கறி உற்பத்தி பாதிப்படைந்தது. அதேவேளை, ஆண்டின் நான்காம் காலாண்டின் கனமழை காரணமாக 2019 சிறுபோக உற்பத்தியும் 7.1 சதவீதத்தால் குறைவடைந்தது. பெரும்போக பருவகாலத்தின் குறைவடைந்த காய்கறி நிரம்பலுக்குப் பதிலிறுத்தும் வகையில் 2019 மேயில் உயர்நில மற்றும் தாழ்நிலக் காய்கறிகள் இரண்டினதும் விலைகள் அதிகரித்திருந்தன. காலநிலை தொடர்பான பின்னடைவுகள் காரணமாக இடைநிலைப் பருவகாலத்தின் காய்கறிப் பயிர்ச்செய்கையும் குறைவடைந்தது. அதற்கிணங்க, ஆண்டின் மூன்றாம் காலாண்டில் அடிக்கடி விலைத் தளம்பல்கள் அவதானிக்கப்பட்டது. எனினும், வட மாகாணத்திலிருந்தான காய்கறி விநியோகம் காய்கறிச் சந்தையில் விலை அழுத்தங்களைக் குறைக்க உதவியது.

2

இருப்பினும், பயிர்ச்சேதங்கள் மற்றும் கனமழையில் ஏற்பட்ட விநியோகத் தடங்கல்கள் மூலம் பெருக்கப்பட்டு, பருவகால விலைக் கோலங்களைத் தொடர்ந்து காய்கறி விலைகள் ஆண்டின் இறுதிப்பகுதியில் மீண்டும் அதிகரித்தன. மேலும், ஐ.அ.டொலர் 32.0 மில்லியன் பெறுமதியான 23,957 மெ.தொன் காய்கறிகள் 2019இல் ஏற்றுமதி செய்யப்பட்டன. அடிக்கடி ஏற்படும் விநியோகத் தடங்கல்கள் மற்றும் விலைத் தளம்பல்கள் என்பன இத்துறையின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் கூடிய, சிறந்த வேளாண்மை முறைகளை ஊக்குவித்தல், குளிரூட்டப்பட்ட களஞ்சிய வசதிகளை மேம்படுத்தல், பயிர்ச்செய்கையின் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை பிரபல்யப்படுத்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்திய கையாள்தல்கள் மற்றும் பதப்படுத்தல்களை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கான கொள்கை நடைமுறைகளின் அவசியத்தைப் பிரதிபலிக்கின்றன.

### பழவர்க்கங்கள்

**வரட்சி காலநிலை காரணமாக பழவர்க்கங்களின் உற்பத்தி 2019இல் குறைவடைந்தது. பழவர்க்க உற்பத்தியானது முன்னைய ஆண்டின் 28.8 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கெதிராக 2019இல் 3.1 சதவீதமான குறைவொன்றைப் பதிவுசெய்தது.** குறிப்பாக, மாம்பழம், வாழைக்காய் மற்றும் அவகாடோ உற்பத்தி கணிசமானளவு குறைவடைந்த அதேவேளையில், தோடம்பழம், தர்ப்பூசணி, பப்பாசிப்பழம், பசன்பழம் மற்றும் அன்னாசி உற்பத்தி வளர்ச்சியொன்றை அறிக்கையிட்டன. 2019 காலப்பகுதியில் இலங்கை ஐ.அ.டொலர் 75.7 மில்லியன் செலவுடன் 68,602 மெ.தொன் புதிய பழங்களை இறக்குமதி செய்தது. இது 2018இல் இறக்குமதி செய்யப்பட்ட அளவை விட 12.9 சதவீத குறைவொன்றாகும். முன்னைய ஆண்டைப் போலவே அப்பிள், தோடம்பழம் மற்றும் திராட்சை ஆகியன இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பழவகைகளாகும். அதேவேளையில், 2019இல் இலங்கை ஐ.அ.டொலர் 41.1 மில்லியன் பெறுமதியுடைய 38,896 மெ.தொன் புதிய பழவர்க்கங்களை ஏற்றுமதி செய்தது. இத்துறையின் அறுவடைக்குப் பிந்திய இழப்பானது ஏறத்தாழ 30-40 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது வேளாண்-குளிரூட்டப்பட்ட களஞ்சியங்கள், தகரத்திலடைத்தல் மற்றும் நீரகற்றல் முறைகளில் பழவர்க்கங்களை பேணிப் பாதுகாத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. உள்ளூர் பழவர்க்கங்களுக்கு உகந்த ஏற்றுமதிக் கேள்வி நிலவினாலும் தொடர்ச்சியான அடிப்படையில் பெரிய அளவுகளில் விநியோகிக்க முடியாமை தடையொன்றாகக் காணப்படுகின்றது. பழவர்க்க ஏற்றுமதிச் சந்தையை மேம்படுத்துவதற்கு உடமையாளர்களுடன் முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய தொடர்புகளைப் பேணுதல் மற்றும் ஒப்பந்த வேளாண்மை முறைமையை விருத்தி செய்தல் என்பன முக்கியமானவையாகும்.

### சீனி

**சீனி உற்பத்தி முன்னைய ஆண்டில் காணப்பட்ட மெதுவடைவிலிருந்து மீட்சியடைந்து 2019இல் 52,304 மெ.தொன்களாக 2.3 சதவீதத்தால் அதிகரித்தது.** வரட்சியான காலநிலை நிலைமைகள் மற்றும் வெள்ளை இலை நோய்த் தாக்கத்திற்கு மத்தியில், சீனித் தொழிற்சாலைகள் வெளி வேளாண்மையாளர்களின் நடுகைத் தொழிற்பாடுகளை விரிவுபடுத்த இயலுமானதாக இருந்ததோடு அதன் விளைவாக 2019இல் உற்பத்தி மட்டம் அதிகரித்துக் காணப்பட்டது. கல்லோயா மற்றும் செவனகல தொழிற்சாலைகள் உற்பத்தியின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய அதேவேளையில், பெல்வத்த தொழிற்சாலையில் சீனி உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. 2018இல் உற்பத்தியில் 34 சதவீத சுருக்கத்தை அறிக்கையிட்ட கல்லோயா தொழிற்சாலை, 2019இல் 11,129 மெ.தொன்களாக 33.3 சதவீத வளர்ச்சியொன்றுடன் மீட்சியடைந்தது. செவனகல தொழிற்சாலை 2018இன் 14,709 மெ.தொன்களிலிருந்து 2019இல் 16,013 மெ.தொன்களாக 8.9 சதவீதத்திலான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. 2019இல் கல்லோயா மற்றும் செவனகல தொழிற்சாலை இரண்டிலும் பிழிவதற்கான கரும்பின் கிடைப்பனவு அதிகரித்த போதிலும் உற்பத்தி பிரதானமாக மேம்படுத்தப்பட்ட சீனி பெறல் வீதம்[3] மூலம் அதிகரித்தது. 2019இன் மொத்தச் சீனி உற்பத்தியில் 48.1 சதவீதத்திற்கு வகைகூறும் பெல்வத்த தொழிற்சாலை, 2018இன் 28,061 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 2019இல் 25,162 மெ.தொன்களுக்கு 10.3 சதவீதக் குறைவை பதிவுசெய்தது. தனியார் கரும்பு கொள்வனவின் அளவு குறைக்கப்பட்டதன் மூலம் ஏற்பட்ட பிழிவதற்கான கரும்பின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு உற்பத்தியின் வீழ்ச்சிக்கு பகுதியளவு காரணமாக அமையலாம். 2019 காலப்பகுதியில், தொழிற்சாலைகளால் நிர்வகிக்கப்படும் கரும்புச் செய்கையின் (வெட்டுத் தாவரங்கள் உள்ளடங்கலாக) கீழான மொத்த நிலப்பரப்பு 12,300 ஹெக்டேயர்களாக 9.6 சதவீதத்தால் அதிகரித்தது. அதேவேளை, அனைத்துச் சீனி தொழிற்சாலைகளுக்குமான சராசரி சீனி பெறல் வீதமானது 2018இன் 7.1 சதவீதத்திலிருந்து 2019இல் 7.2 சதவீதமாக அதிகரித்தது. மேலும், மேம்படுத்தப்பட்ட சராசரி விளைச்சல் மற்றும் அறுவடை நிலப்பரப்பின் காரணமாக 2019 காலப்பகுதியில் அனைத்து தொழிற்சாலைகளிலும் அறுவடை செய்யப்பட்ட கரும்புகளின் மொத்த அளவானது 600,130 மெ.தொன்களாக 5.8 சதவீதத்தால் அதிகரித்தது. இருப்பினும், தனியார் வேளாண்மையாளர்களால் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட கரும்பு 2019இல் 171,174 மெ.தொன்களாக 6.1 சதவீதத்தால் கணிசமான குறைவொன்றை அறிக்கையிட்டது. வெளி வேளாண்மையாளர்களின் கரும்புச் செய்கை மூலம் சீனி

3 சீனி பெறல் வீதம் = $\frac{\text{உற்பத்தி செய்யப்பட்ட சீனி}}{\text{பிழியப்பட்ட கரும்பின் அளவு}} \times 100$

உற்பத்தியை அதிகரிப்பதற்கான பாரியளவிலான சாத்தியத்தை உணர்ந்து, அனைத்து சீனித் தொழிற்சாலைகளும் தற்போதுள்ள வெளி வேளாண்மையாளர்களின் திட்டங்களை விரிவுபடுத்துவதற்கு கூடிய முன்னுரிமையளித்தன. அதேவேளை, சீனி இறக்குமதியானது 2018இன் 644,675 மெ.தொன்களிலிருந்து 2019இல் 556,270 மெ.தொன்களாக 13.7 சதவீதத்தால் குறைவடைந்தது. உள்ளூர் சீனி உற்பத்தி 2018இன் ஒன்பது சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் ஏறத்தாழ 8 சதவீதமான நாட்டின் மொத்தச் சீனிக் கேள்வியை[4] பூர்த்திசெய்யப் போதுமானதாகக் காணப்பட்டது.

## கால்நடை வளர்ப்பு

**ஆண்டின் இரண்டாம் அரையில் ஏற்பட்ட பாதம் மற்றும் வாய்நோயின் உள்நாட்டு பெருந்தாக்கத்தின் காரணமாக மொத்தத் தேசிய பால் உற்பத்தி 2019இல் வீழ்ச்சியடைந்தது.** பால் உற்பத்தி முன்னைய ஆண்டில் பதிவாகிய 20.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 448 மில்லியன் லீற்றர்களுக்கு 6.3 சதவீதத்தினால் குறைவடைந்தது. பசுப்பால் உற்பத்தி 374 மில்லியன் லீற்றர்களுக்கு 4.5 சதவீதத்தால் குறைவடைந்த அதேவேளை எருமைப்பால் உற்பத்தி 73.6 மில்லியன் லீற்றர்களுக்கு 14.4 சதவீதத்தால் குறைவடைந்தது. மேலும், கறவைப் பசுக்களின் எண்ணிக்கை 323,490 ஆக 1.8 சதவீதத்தால் குறைவடைந்ததுடன் கறவை எருமை மாடுகள் 91,790 இற்கு 2.6 சதவீதத்தால் குறைவடைந்தது. அதேவேளை, தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் பால் உற்பத்தி 2018இன் 14.7 மி.லீற்றர்களிலிருந்து 2019இல் 13.1 மி.லீற்றர்களுக்குக் குறைவடைந்த வேளையில் மில்கோ பிறைவேற் லிமிடெட்டின் பால் சேகரிப்பு 66.0 மில்லியன் லீற்றர்களுக்கு 27.5 சதவீதத்தால் குறைவடைந்தது. பால் உற்பத்தியின் தேசிய சராசரிச் செலவு முதல் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட லீற்றரொன்றிற்கு ரூ.47.67 இலிருந்த லீற்றரொன்றிற்கு ரூ.51.11 இற்கு 7.2 சதவீதத்தால் 2019இல் அதிகரித்தது. இருப்பினும், சராசரி பண்ணை விலை லீற்றரொன்றிற்கு ரூ.69.96 ஆக 4.6 சதவீதம் மாத்திரம் அதிகரித்துக் காணப்பட்டது. இதன் விளைவாக வேளாண்மையாளர்களுக்குக் குறைந்தளவான இலாப எல்லையொன்றறே காணப்படுகிறது. இதற்கிடையில், பால்மா இறக்குமதியானது, ஐ.அ.டொலர் 293.5 மில்லியன் பெறுமதியில் 93,749 மெ.தொன்களாக 5.3 சதவீத வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. தேசிய தேவைப்பாட்டில் ஏறத்தாழ 38 சதவீத உள்நாட்டு பால் உற்பத்தியை மாத்திரமே பூர்த்தி செய்யப் போதுமானதாகவுள்ளதால், உள்நாட்டு உற்பத்திச் செயன்முறைகளிலுள்ள எஞ்சிய இடையூறுகளை நிவர்த்தி செய்யும் அதேவேளையில் உள்நாட்டு உற்பத்திய மேலும் ஊக்குவித்தல் அவசியமானதாகும். மேலும்,

### அட்டவணை 2.6
### கால்நடைத்துறை புள்ளி விபரங்கள்

| துணைத்துறை | 2018 (அ) | 2019 (ஆ) | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2017/18 (அ) | 2018/19 (ஆ) |
| 1. மொத்த மந்தைகள் (எண்ணிக்கை) (மில்) | 1.4 | 1.4 | 10.5 | -2.5 |
| கறவைப் பசுக்கள் | 1.1 | 1.1 | 11.0 | -2.2 |
| எருமைகள் | 0.3 | 0.3 | 8.9 | -3.4 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 477.4 | 447.6 | 20.5 | -6.3 |
| பசும்பால் | 391.5 | 374.0 | 19.5 | -4.5 |
| எருமைப்பால் | 85.9 | 73.6 | 25.3 | -14.4 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்)(இ) | 45.1 | 46.5 | 5.8 | 3.1 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்) | 66.88 | 69.96 | 0.8 | 4.6 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 1972.2 | 2084.2 | -4.9 | 5.7 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 214.2 | 225.0 | 6.6 | 5.0 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது.
(இ) தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை. மற்றும் மில்கோ பிறைவேட் லிமிடட் என்பவற்றின் உற்பத்திகள் மாத்திரம் உள்ளடக்கப்படுகின்றது

மூலங்கள்: மகாவலி, வேளாண்மை, நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்
தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை
மில்கோ பிறைவேட் லிமிடெட்

பன்னாட்டு சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கும் போது சிறியளவிலான உற்பத்தியாளர்களின் வெளியீடு முக்கியமானதாகக் காணப்படுவதால் அத்தகைய சிறியளவிலான பால் பதப்படுத்தல் ஊக்குவிக்கப்பட வேண்டும். அதேவேளையில், கோழித் துறை 2019இல் முன்னேற்றமான செயலாற்றுகையொன்றை எடுத்துக்காட்டியது. 2019இல் கோழி இறைச்சி உற்பத்தி 225,000 மெ.தொன்களுக்கு 5.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. புறையிலர் தாய்க்கோழி உற்பத்தியின் எண்ணிக்கை முன்னைய ஆண்டைவிட 2019இல் 9.4 சதவீதத்தால் அதிகரித்துள்ள அதேவேளை புறையிலர் தாய்க்கோழி இறக்குமதி 2018இன் 383,930 இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 286,707 ஆக 25.3 சதவீதத்தால் குறைவடைந்தது. அதேவேளை, உயர் சந்தைக் கேள்வி காரணமாக முட்டையிடும் தாய்க்கோழி இறக்குமதியும் 94,811 ஆக அதிகரித்திருந்தது. கோழி இறைச்சியின் (உரிக்கப்படாத) உற்பத்திச் செலவும் 2018இன் கி.கிறாமொன்றிற்கு ரூ.265.85 இலிருந்து 2019இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.314.30 ஆக அதிகரித்துக் காணப்பட்டது. மேலும், முட்டை உற்பத்தி 2,084 மில்லியனுக்கு 5.7 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளை, பெரியளவிலான முட்டை உற்பத்தியாளர் ஒருவருக்கான உற்பத்திச் செலவு 2018இன் முட்டையொன்றிற்கு ரூ.12.80 இலிருந்து 2019இல் முட்டையொன்றிற்கு ரூ.13.70 இற்கு அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் கோழி இறைச்சியின் இறக்குமதி குறைவடைந்ததுடன் முட்டைகளின் ஏற்றுமதி அதிகரித்திருந்தமை கோழித் துறையின் விரிவாக்கத்திற்கான சாத்தியத்தை எடுத்துக்காட்டுகின்றது. பன்றி இறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி உற்பத்தி முறையே 11,240 மெ.தொன்கள் மற்றும் 1,880 மெ.தொன்களுக்கு முறையே 7.8 சதவீதம் மற்றும் 15.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. அதேவேளை, மாட்டிறைச்சி உற்பத்தி 29,990 மெ.தொன்களாக 5.5 சதவீதத்தால் குறைவடைந்தது.

4 சீனிக் கேள்வி = வீட்டலகு வருமானம் மற்றும் செலவின அளவீடு 2016 இற்கு அமைவான தனிநபர் சீனி நுகர்வு × நடுவாண்டு சனத்தொகை

### மீன்பிடி

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின்படி, 2019இல் மீன் உற்பத்தி 4.0 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.** மொத்த மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 82 சதவீதத்திற்கு வகைகூறுவதும் கரையோர மற்றும் கடனீரேரி மற்றும் ஆழ்கடல் மீன் உற்பத்தியை உள்ளடக்கியதுமான கடல் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பகுதியளவு காரணமாக மீன் உற்பத்தியில் சரிவு ஏற்பட்டுள்ளது. 172,910 மெ.தொன்களுக்கு 9.2 சதவீதத்தால் குறைவடைந்த ஆழ்கடல் வகையால் கடல்சார் வெளியீட்டில் சுருக்கமொன்று உந்தப்பட்டுள்ளது. இதற்கு இந்தியப் பெருங்கடலில் அடிக்கடி ஏற்படும் சூறாவளி நிலைமைகள் காரணமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாகும். இதன்படி, வானிலை எச்சரிக்கைகளின் அடிப்படையில் பல நாள் மீன்பிடிப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டன. மேலும், கரையோர மற்றும் கடனீரேரி துணைத் துறையின் வெளியீடு 242,580 மெ.தொன்களுக்கு 2.6 சதவீதத்தால் குறைவடைந்தது. அதேவேளை, மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 18 சதவீதத்தை வகைகூறும் நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வளத் துறையின் வெளியீடு 3.0 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்குப் பிரதானமாக மோசமான வானிலை நிலைமைகளுக்கு மத்தியிலும் நீர்த்தேக்கங்களில் மீன்குஞ்சுகளின் சேமிப்பு மற்றும் முகாமைத்துவ ஒழுங்குமுறைகளின் அமுல்படுத்துகை என்பன காரணங்களாகும். இவ்வாண்டுப்பகுதியில், ஏறத்தாழ 89 மில்லியன் மின்குஞ்சுகள் நீர்த்தேக்கங்களில் சேமித்து வைத்திருக்கப்பட்டது. அதேவேளை, நீரியல் துணை வகையின் உற்பத்தியும் மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் அதிகரித்திருந்தது. ஆயினும், பெரும்பாலான இறால் பண்ணைகளில் வெள்ளைப்புள்ளி நோய்க்குறி அறிக்கை செய்யப்பட்டதன் காரணமாக இறால் பண்ணை வகையானது 6,400 மெ.தொன்களாக 21.8 சதவீதத்தால் கணிசமானளவு குறைவொன்றை எடுத்துக்காட்டியது. அதேவேளை, கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின்படி, மொத்த மீன் இறக்குமதி 95,637 மெ.தொன்களாக 13.2 சதவீதத்தால் அதிகரித்தது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டுப்பகுதியில், உலர்த்தப்பட்ட அல்லது உப்பிடப்பட்ட மீன் இறக்குமதி 37,590 மெ.தொன்களாக 16.8 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் தகரத்திலடைக்கப்பட்ட மீன் இறக்குமதி 36,806 மெ.தொன்களாக 31.1 சதவீதத்தால் கணிசமானளவு அதிகரித்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கேற்ப, ஆண்டுப்பகுதியில் பெரிய மீன் வகைகளின் விலைகள் 6.8 சதவீதத்தால் அதிகரித்ததுடன் சிறிய மீன் வகைகளின் விலை 20.2 சதவீதத்தால் அதிகரித்தது. அதேவேளை, 2019இல் மீன் ஏற்றுமதி பெறுமதி நியதிகளில் ரூ.53,483 மில்லியன் பெறுமதிக்கு 11.5 சதவீத அதிகரிப்பொன்றை வெளிக்காட்டிய வேளையில் அளவு நியதிகளில் 28,771 மெ.தொன்களாக 2.8 சதவீத வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. அதேநேரம், மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் அலங்கார மீன்களின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் ரூ.2,913 மில்லியனாகக் காணப்பட்டது. இலங்கை அதன் ஏற்றுமதிச் சந்தைப் பங்கை அதிகரிப்பதற்கு அலங்கார மீன்களின் கையாளுகை மற்றும் பொதியிடலை மேம்படுத்துதல் அவசியமாகும். இதன் அடிப்படையில், உள்ளூர் பொதியிடல் தயாரிப்பாளர்களை ஆதரிக்கும் அதேவேளையில் அலங்கார மீன்களை துறைமுகங்களுக்குக் கொண்டு செல்வதற்கான உள்ளூர் போக்குவரத்துக்கு எடுக்கும் நேரத்தைக் குறைப்பதற்காக பிராந்திய தொடர்புகளை மேலும் மேம்படுத்துதல் அவசியமாகும்.

அட்டவணை 2.7
மீன் உற்பத்தி

'000 மெற்றித்தொன்கள்

| துணைத்துறை | 2018 | 2019 (அ) | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2017/18 | 2018/19 (அ) |
| கடல் | 439 | 415 | -1.7 | -5.4 |
| கரையோரம் மற்றும் களப்பு | 249 | 243 | -5.3 | -2.6 |
| கடற்கரையிலிருந்து தொலைவில் | 190 | 173 | 3.8 | -9.2 |
| நன்னீர் மீன்பிடி | 88 | 90 | 10.7 | 3.0 |
| பிடிப்பு | 71 | 73 | 17.3 | 3.1 |
| பண்ணை மீன் வளர்ப்பு | 8 | 11 | -7.9 | 26.1 |
| இறால் வளர்ப்பு பண்னை | 8 | 6 | -23.2 | -21.8 |
| மொத்தம் | 527 | 506 | 0.1 | -4.0 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு

### வேளாண்மைக் கொள்கைகளும் நிறுவன ரீதியிலான உதவியும்

**வேளாண்மைத் துறையின் வெளியீட்டை அதிகரிக்கும் நோக்கொன்றுடன் பல கொள்கை நடவடிக்கைகள் 2019இல் செயற்படுத்தப்பட்டன.** இவ்வாண்டுப்பகுதியில் வேளாண்மைக் கொள்கைகள் முக்கியமாக உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல், சுற்றுச்சூழலின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் காலநிலைக்குத் தாக்குப்பிடிக்கக்கூடியவாறு வேளாண்மையை விருத்தி செய்தல் என்பவற்றில் கவனம் செலுத்தியது. அதற்கிணங்க, சராசரி விளைச்சலை அதிகரிக்கும் நோக்குடன் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நெல் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்ட அதேவேளையில் உயர்தர நெல் விதைகளை உற்பத்தி செய்வதற்கும் வேளாண்மையாளர்களிடையே புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்களை பிரபல்யப்படுத்துவதற்கும் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்தப்படுகின்றது. அதேவேளை, நெல் சந்தைப்படுத்தல் சபையின் மூலம் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் 2019 காலப்பகுதியில் தொடர்வடைந்தது. சந்தையில் நெல் விநியோகம் ஆரோக்கியமான மட்டத்தில் காணப்பட்டதற்கு மத்தியில் விலைகளை உறுதிப்படுத்துவதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபையானது 2018இனை விட அதிகளவிலான நெல்லை கொள்வனவு செய்தது. மேலும், உர மானிய நிகழ்ச்சித்திட்டமும் 2019இல் தொடர்வடைந்தது. இருப்பினும்,

அட்டவணை 2.8
முக்கிய உணவுப் பண்டங்கள் தொடர்பான உணவு ஐந்தொகை

| விடயம் | அலகு | 2010 | | | 2018 | | | 2019 (அ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) |
| அரிசி (ஆ) | மெ.தொ'000 | 3,011 | 126 | 152 | 2,751 | 249 | 138 | 3,214 | 24 | 149 |
| சோளம் | மெ.தொ'000 | 162 | 16 | 9 | 270 | 133 | 19 | 246 | 118 | 17 |
| கோதுமை | மெ.தொ'000 | - | 1,051 | 51 | - | 1,297 | 60 | - | 1,159 | 53 |
| பெரிய வெங்காயம் | மெ.தொ'000 | 59 | 158 | 10 | 28 | 246 | 13 | 19 | 240 | 12 |
| சீனி | மெ.தொ'000 | 31 | 548 | 28 | 51 | 645 | 32 | 52 | 556 | 28 |
| உருளைக் கிழங்கு | மெ.தொ'000 | 52 | 130 | 9 | 89 | 159 | 11 | 102 | 142 | 11 |
| உடன் மீன் | மெ.தொ'000 | 385 | 14 | 19 | 527 | 19 | 25 | 506 | 19 | 24 |
| பசும்பால் | மில். லீற்றர் | 192 | - | 9 | 386 | - | 18 | 374 | - | 17 |
| தேங்காய் எண்ணெய் | மெ.தொ'000 | 65 | 3 | 3 | 11 | 12 | 1 | 45 | 5 | 2 |

அ) தற்காலிகமானது
ஆ) 1 மெற்றிக்தொன் நெல் = 0.7 மெற்றிக்தொன் அரிசி

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்

2

2019இல் நெல் சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்புக்கள் மற்றும் விநியோகிக்கப்பட்ட உரத்தின் அளவு தொடர்பான மதிப்பீடுகள் இவ்வறிக்கை வெளியிடப்படும் நேரத்தில் கிடைக்கப்பெறவில்லை. நெல் சந்தைப்படுத்தல் சபை சந்தை விலைத் தளம்பல்களின் போது விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கான அதன் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக அதன் களஞ்சியக் கொள்ளளவை நவீனமயமாக்குவதன் மூலமும் விரிவாக்குவதன் மூலமும் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். மேலும், இருப்பு வகைகளுடன் கூடிய கொள்வனவு செய்யப்பட வேண்டிய இருப்புக்களின் அளவு, கொள்வனவு இடங்கள் மற்றும் கொள்வனவிற்கான நிதியியல் பொறிமுறை என்பவற்றைக் காத்திரமாகத் தீர்மானிக்கக்கூடிய வகையிலான கவனமாக வடிவமைக்கப்பட்ட பொது இருப்பு முகாமைத்துவ முறைமையொன்று வேளாண்மையாளர்களுக்கு இலாபகரமான விலைகளை உறுதிப்படுத்தும் அதேவேளையில் நெல் சந்தைப்படுத்தல் சபையில் ஏற்படும் இழப்புக்களைக் குறைப்பதற்கும் ஏற்றவகையில் பின்பற்றப்பட வேண்டும். இதனடிப்படையில், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் பொது - தனியார் கூட்டாண்மைகளை ஊக்குவித்தலும் அவசியமாகும்.

**துறை ரீதியிலான உற்பத்தித்திறனை மேம்படுத்துவதோடு இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் பெறுமதி கூட்டல் மற்றும் போட்டித்தன்மையை நோக்கமாகக் கொண்டு தேயிலைத் துறையின் அபிவிருத்திக்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பல உபாயங்கள் 2019இல் தொடர்வடைந்தது.** அதற்கிணங்க, தேயிலைத் துறைக்கான ஆறு-ஆண்டு உபாயத் திட்டமொன்றைத் தயாரிக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் உடமையாளர்களுடன் ஆரம்பக்கட்ட கலந்துரையாடல்களைத் தொடங்கியிருந்தது. அதேவேளை, இலங்கை தேயிலைச் சபை தனது ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை 2019இல் தொடர்ந்தது. விசேட மானியத் திட்டத்தின் கீழ், 2019இல் இலங்கை தேயிலைச் சபையானது 111.6 மில்லியன் செலவில் 27 பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சிகளில் இலங்கை தேயிலை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களின் பங்கேற்பை வசதிப்படுத்தியது. இலங்கை தேயிலைச் சபை இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் இலங்கை தேயிலை லயன் நாமத்தின் பதிவு மற்றும் புதுப்பித்தலை முன்னெடுத்திருந்ததோடு 2019 இறுதியளவில், உலகெங்கிலும் 103 நாடுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும், 2018/2019 ஆண்டுப்பகுதியில் நாம ஊக்குவிப்பு மானியத் திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 18 தனியார் துறை நிறுவனங்களுடன் இலங்கை தேயிலைச் சபை 41 ஒப்பந்தங்களைக் கையெழுத்திட்டது. இலைகளின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், இலங்கை தேயிலைச் சபை 'பி இலை 60' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேயிலைத் தொழிற்சாலைகளில் பச்சைத் தேயிலை இலைகளின் குறைந்தபட்ச தரத்தை (60 சதவீதம் முதிர்ச்சியடையாத சேதமடையாத இலை) பேணுவதற்கு தொடர்ந்து அறிவுறுத்தியது. அதேவேளையில் ஏற்றுமதி செயற்பாட்டுக் களஞ்சியங்களுக்கு தீங்கு பகுப்பாய்வு நெருக்கடி கட்டுப்பாட்டுப் புள்ளிகள் தரச் சான்றிதழைக் கட்டாய தேவையொன்றாக விதித்தது. மேலும், 2019இல் தேயிலை சட்டங்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருந்தது. அதன்படி, தேயிலை ஆராய்ச்சி சபைச் சட்டம் 2019 யூனில் திருத்தியமைக்கப்பட்டதோடு இலங்கை தேயிலைச் சபைச் சட்டம், தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் தேயிலை சிறுஉடமையாளர் அபிவிருத்திச் சட்டம் உள்ளடங்கலான ஒழுங்குமுறைகளைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், இலங்கை தேயிலைச் சபையானது தேயிலைப் பயிரிடுகையுடன் தொடர்பான அதன் மானிய நிகழ்ச்சித்திட்டங்களை 2019இல் முன்னெடுத்திருந்தது. அதற்கிணங்க, தேயிலை மீள்நடுகை மானியத் திட்டத்தின் கீழ் 172.7 ஹெக்டேயர் நிலப்பரப்புடைய தேயிலை நிலங்கள் ரூ.25.4 மில்லியன் செலவில் மீள்நடுகை செய்யப்பட்டன. மேலும், அதிக விளைச்சலைக் வழிவகுக்கக்கூடியதான சீரான தாவரப்படையொன்றை உருவாக்கக்கூடிய இறந்த தாவரங்களை பலம்வாய்ந்த தாவரங்களாகப் பிரதியீடு செய்யும் நடுகைச்

செயற்பாடொன்றினை மீள்நிரப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று மீள்நிரப்பு மானியத்தை தாவரமொன்றிற்கு ரூ.25 இலிருந்து ரூ.100 இற்கு அதிகரித்ததன் மூலம் மேற்கொள்ளப்பட்டது. தேயிலைத் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ், மொத்தமாக ரூ.17.1 மில்லியனானது 22 தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டது. அதேவேளை, மாதிரி தேயிலை நிலத் திட்டத்தின் கீழ் ரூ.0.19 மில்லியன் தொகையானது 20 தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டது. மேலும், தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் களஞ்சியசாலைகளில் தர நியமங்களைப் பேணுவதற்காக சிறந்த தயாரிப்பு நடைமுறைகள் தொடர்பான நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டன. நாட்டின் தேயிலைத் துறையானது குறைந்த உற்பத்தித்திறன், அதிக உற்பத்திச் செலவு, தொழிலாளர் பிரச்சினைகள், ஏற்றுமதியில் குறைந்தளவான பெறுமதி கூட்டல், மோசமான பறிப்பு முறைகள் மற்றும் உலக சந்தையில் காணப்படும் விலைத் தளம்பல்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், தேயிலை வளர்ப்பாளர்கள் மற்றும் தேயிலை உற்பத்தியாளர்களின் முறையற்ற நடவடிக்கைகள் ஏலத்தில் உயர் சதவீதமான கழிவுத் தேயிலையைக் கொண்ட குறைந்த தரத்திலான உற்பத்திக்கு வழிவகுத்தன. குறிப்பிட்ட தேயிலைத் தயாரிப்புக்களின் குறைந்த தரமானது தேயிலை ஏற்றுமதிகளின் முழு பெறுமதிச் சங்கிலியையும் பாதிப்பதுடன் உலக தேயிலை சந்தையில் இலங்கையின் போட்டித்தன்மையையும் குறைவடைய செய்கின்றது. எனவே, உற்பத்தியின் அனைத்து நிலைகளிலும் தரம் மற்றும் பாதுகாப்பைப் பேணுதல், பெறுமதிகூட்டப்பட்ட தயாரிப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்ப முறைமைகளைப் பின்பற்றுதல் என்பன தேயிலைத் துறையை அதன் மந்தமான நிலையிலிருந்து உயிர்பூட்டுவதற்கு அவசியமானவை என்பதுடன் ஏனைய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளிற்கெதிராக நாட்டின் போட்டித்தன்மையை மேம்படுத்தவும் அவசியமானவையாகும்.

**2040ஆம் ஆண்டளவில் இறப்பர் உற்பத்தியை 200,000 மெ.தொன்களாக உயர்த்தும் நோக்கத்துடன் இறப்பர் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தன. உற்பத்தித்திறன் மேம்பாடு மற்றும் பாரம்பரியமற்ற பிரதேசங்களுக்கு இறப்பர் செய்கையை விரிவாக்கல் என்பன 2019இல் செயற்படுத்தப்பட்ட முக்கிய உத்திகளாகக் காணப்பட்டன.** இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் வளர்ப்பாளர்களின் மற்றும் இறப்பர் தொடர்பான உற்பத்திகளின் தயாரிப்புக் கைத்தொழில்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்திருந்தது. அதன்படி, சிறந்த வேளாண்மை நடைமுறைகள் குறித்து உடமையாளர்களிற்குப் பயிற்றுவிப்பதற்கு விளக்கமளிக்கும் மாதிரிகளை உருவாக்கிய அதேவேளையில் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு குறைவான தடவைகளுடைய அறுவடை முறைமைகளையும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் ஊக்குவிக்கின்றது. சரிசெய்தல் நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டு வழிமுறைகள் என்பவற்றுடன் நில உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு சிறுஉடமையாளர்களிற்கு உதவியளிக்கப்பட்டது. இறப்பர் கைத்தொழிலை வலுப்படுத்த இறப்பர் நிலங்களில் ஊடு பயிர்ச்செய்கையை மேலும் பிரபல்யப்படுத்துவதோடு காலநிலைக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய உயர் விளைச்சலுடைய புதிய இறப்பர் வகைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமானதாகும்.

**தெங்குத் துறையை மேலும் வலுப்படுத்த 2019இல் பல கொள்கை நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** தெங்கு நிலங்களை செல்லிடத் தொலைபேசிப் பிரயோகம் ஒன்றினூடாகப் பதிவுசெய்யும் புதிய முறைமையொன்று தொடங்கப்பட்டது. அதேவேளை, தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் தெங்கு துறையின் அபிவிருத்தியை நோக்கி அதன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. அதன்படி, காலநிலை மாற்றத்திற்கேற்ப இயைபாக்கப்படுதலினூடாக உற்பத்தித்திறனை மேம்படுத்தலுக்கு அதிக முன்னுரிமையளிக்கப்பட்டது. தெங்கு பயிர்ச்செய்கைச் சபை இக்காலகட்டத்தில் அதன் விரிவாக்கப் பணிகள் தொடர்ந்து முன்னெடுத்ததுடன், தெங்கு பயிர்ச்செய்கையில் சிறந்த முறைகளைப் பின்பற்றுவதற்கான அறிவை மேம்படுத்த கிராம அடிப்படையிலான விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்களினூடாக தெங்கு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. மேலும், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையானது சிறியளவிலான மற்றும் முறைசாரா தெங்குத் துறைகளுக்கு பாகங்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல், வணிக மற்றும் நிதியியல் முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் என்பவற்றின் மூலம் ஆதரவளித்தது.

**2019இல், ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் நாட்டில் சிறு ஏற்றுமதி வேளாண்மைத் துறையை முன்னேற்றுவதற்காக பல நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது.** அதற்கிணங்க, ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம், சிறு ஏற்றுமதி பயிர் உற்பத்திகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான சேதனப் பயிர்செய்கையை ஊக்குவித்தல், சிறந்த வேளாண்மை நடைமுறைகள் மற்றும் சிறந்த தயாரிப்பு நடைமுறைகள் என்பவற்றை மேம்படுத்தல் என்பவற்றின் மூலம் உலக சந்தையில் சேதன வாசனைத்திரவியங்கள் மற்றும் குடிபானப் பயிர்களின் சந்தை வகைகூறலை அதிகரிப்பதற்காக பல நடைமுறைகளை மேற்கொண்டிருந்தது. ஆதரவளிக்கும் செயன்முறை வசதிகளினூடாக பொருத்தமான தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கும் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் பல நடவடிக்கைகளை எடுத்திருந்தது. சிறு ஏற்றுமதிப் பயிர் நிலங்களில் சேதன வேளாண்மையை ஊக்குவிக்கும் பொறிமுறையொன்றாக, வேளாண்மையாளர்களுக்கு தங்கள் பயிர்ச்செய்கையை சேதன வேளாண்மையாக மாற்றுவதற்கு முதலீட்டு உதவியொன்று வழங்கப்பட்ட அதேவேளையில்

சேதன சான்றிதழின் செலவானது ஏற்றுமதி வேளாண்மை திணைக்களத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலதிகமாக, காலநிலை அபாயங்களைத் தணிப்பதற்காக நுண்பாக நீர்ப்பாசன முறைமைகளை நிறுவுவதை ஊக்குவிப்பதற்கும் விலங்குகளில் ஏற்படும் பயிர்ச்சேதத்தைத் தடுப்பதற்கு சிறு ஏற்றுமதிப் பயிர் நிலங்களைச் சூழ வேலிகளை அமைப்பதற்கும் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தினால் 50 சதவீத முதலீட்டு உதவி வழங்கப்பட்டது. மேலும், உற்பத்திச் செயன்முறையின் தரத்தை மேம்படுத்துவதுடன் இறுதி உற்பத்தியை மேம்படுத்தவும் செயன்முறை இயந்திரங்கள் மற்றும் செயன்முறை மையங்களுக்கு முதலீட்டு உதவியை ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் வழங்கியிருந்தது.

**தேசிய வேளாண்மைக் கொள்கைக்கிணங்க, வேளாண்மை உற்பத்தித்திறனை அதிகரித்தல், நீடித்துநிலைத்திருக்கும் வேளாண்மை அபிவிருத்தியையும் தேசிய உணவு மற்றும் ஊட்டப் பாதுகாப்பையும் உறுதி செய்தல், வேளாண்மைக்கான மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை பிரபல்யப்படுத்தல் மற்றும் வேளாண் சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்தல் என்பவற்றிற்காக அரசாங்கம் பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.** படைப்புழு பீடைத்தாக்கத்தை எதிர்க்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் அவற்றின் உயிரியல்/உயிர்ச்சூழ்நிலையியல் மற்றும் நடத்தை தகவல்களைக் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத் தொகுப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், நாட்டின் உணவு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்துடன், நெல், ஏனைய களப்பயிர்கள், மரக்கறிகள் மற்றும் பழவர்க்கத் துறைகளை உள்ளடக்கும் வகையில் பொது விரிவாக்க நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. அதற்கிணங்க, பீடைகளின் முற்கூட்டிய கண்டறிதல் மற்றும் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகள் குறித்து வேளாண்மையாளர்களுக்கும் விரிவாக்க அலுவலர்களுக்கும் பல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், சோளம், பெரிய வெங்காயம், பயறு மற்றும் தட்டைப்பயறு போன்ற ஏனைய களப்பயிர்களின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு சான்றளிக்கப்பட்ட விதைகள் மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் என்பன வேளாண்மையாளர்களிடையே பிரபல்யப்படுத்தப்பட்ட அதேவேளையில் உடமையாளர்களிடையே சிறந்த வேளாண்மை முறைகள் ஊக்குவிக்கப்பட்டன. அதற்கிணங்க, உயர் சராசரி விளைச்சலுடைய மூன்று புதிய சோள வகைகள் பொது பயிர்ச்செய்கைக்காக வெளியீடு செய்யப்பட்டன. மேலும், சான்றளிக்கப்பட்ட விதை நெல், ஏனைய களப்பயிர்கள் மற்றும் காய்கறி விதைகளின் உற்பத்தி ஒப்பந்த வளர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அரச விதைப் பண்ணைகளில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. அதேவேளையில், சிறந்த வேளாண்மை முறைகளுக்கான சான்றிதழ் அளிக்கப்பட்ட உற்பத்திகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக, சிறந்த வேளாண்மை முறைகள் குறித்து வேளாண்மையாளர்கள் மற்றும் அலுவலர்களிடையே விழிப்புணர்வை மேம்படுத்த வேளாண்மையாளர்கள் பயிற்சி மற்றும் அலுவலர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**உள்நாட்டுச் சீனி உற்பத்தியை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் மேலும் பல நடவடிக்கைகளை எடுத்திருந்தது.** அதற்கிணங்க, புதிய சீனித் தொழிற்சாலையொன்றை நிறுவுதல் மற்றும் கரும்பு பயிரிடும் நிலப்பரப்பை விரிவுபடுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் இவ்வாண்டு காலப்பகுதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. கரும்பு பிரதான பெருந்தோட்டப் பயிரொன்றாக அமைச்சரவை அமைச்சர்களின் மூலம் பெயரிடப்பட்டுள்ளது. எனவே, பெருந்தோட்டப் பயிர்களுடன் தொடர்புடைய சலுகைகள் மற்றும் மானியங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிமையையும் கரும்பு பெற்றுள்ளது. மேலும், வெல்லம் மற்றும் பாணி உற்பத்தியைப் பிரதான நோக்கமாகக் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் கரும்பு செய்கையானது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, உள்நாட்டுச் சீனிக் கைத்தொழிலின் நீடித்திருக்கும் தன்மையை உறுதி செய்வதற்காக, கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் வணிக பெருந்தோட்டங்களில் நிகழ்வுகளை ஆய்வு செய்வதன் மூலம் பீடை மற்றும் நோய் முகாமைத்துவத்தைப் பின்பற்றுதல் நிகழ்ச்சித்திட்டம் உள்ளிட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. எனவே, கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் வேளாண்மைத் திணைக்களத்துடன் இணைந்து கரும்பு மீது படைப்புழு நோய்த்தாக்க விளைவை முகாமை செய்வதற்காகச் சிறப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை மேற்கொண்டது. மேலும், சேதன உரப் பாவனை, நோய் தாக்கத்தால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் எதிர்ப்பு வகை தாவரங்களை வளர்த்தல் மற்றும் களைகளைக் காத்திரமாகக் கட்டுப்படுத்துவதற்கான புதிய களைக்கொல்லி கலவைகள் போன்ற புதிய பரிந்துரைகளை விருத்தி செய்தல் மற்றும் பின்பற்றுதல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. மேலதிகமாக, கரும்பு தொழில்நுட்பங்களை வேளாண்மையாளர்களுக்கும் கைத்தொழிற்சாலைகளுக்கும் பரிமாற்றும் நடவடிக்கையும் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்டது.

**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் இலங்கையில் பசுமாட்டுக் குடித்தொகையை உயர்த்துவதற்காக விலங்கு இனப்பெருக்கச் செயற்றிட்டம் உள்ளடங்கிய பல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தியது.** உள்நாட்டு பால்த் துறையை மேம்படுத்துவதற்காக நிறுவன ரீதியான ஆதரவு மேலும் வலுப்படுத்தப்பட்டது. ஏழு கால்நடை அலுவலகங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளதுடன் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் பதுளை மாவட்டத்தின் ஹலிஎல்லின் கால்நடை அலுவலகத்துடன் தொடர்புடைய கட்டடவாக்கப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. அதேவேளையில், பிரதேச கால்நடை

2

அலுவலகங்களினூடாக பசுமாடு மற்றும் எருமை மாடுகளுக்கு 229,418 செயற்கை முறை சினைப்படுத்தல்கள் 2019இல் மேற்கொள்ளப்பட்டன. 'கன்னிப் பசுக்கன்றுகளின் வளர்ப்பு' செயற்றிட்டத்தின் கீழ் 2019இல் 16,042 கன்னிப் பசுக்கன்றுகள் பதிவுசெய்யப்பட்டன. மேலும், ஆண்டுப்பகுதியில் தடுப்பூசி மற்றும் நோய் விசாரணை நிகழ்ச்சித்திட்டங்களும் தொடர்ந்தன. அதற்கிணங்க, 761,938 விலங்குகளுக்கு பாதம் மற்றும் வாய் நோய்க்கு எதிராக நோய்த்தடுப்புச் செய்யப்பட்ட வேளையில் முலையழற்சி கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் ஆண்டு முழுவதும் தொடர்ந்தது.

**மீன்பிடி நடைமுறைகளில் இணக்கத்தை ஊக்குவிப்பதற்கும் மீன்பிடித் துறையில் நீடித்துநிலைத்திருக்கும் தன்மை, சமூகப் பொறுப்பு மற்றும் பொருளாதார சமத்துவம் என்பவற்றை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் பல கொள்கை வழிமுறைகளை எடுத்தது.** ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு பொருந்தக்கூடிய பன்னாட்டு நியமங்களுக்கு இணங்கக்கூடிய வகையில் போதைப்பொருள் விற்பனை மற்றும் மனிதக் கடத்தலைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில் சட்ட விரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்கமைக்கப்படாத மீன்பிடித்தலும் நீக்கப்பட்டு வருகின்றது. மீன்பிடி நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு, 'பச்சை மீன்பிடித் துறைமுகம்' கருத்திட்டத்தை ஊக்குவிக்கும் அதேவேளையில் பல துறைமுகங்களையும் நங்கூரங்களையும் நிர்மாணிப்பதற்கும் தரமுயர்த்தவும் பல நடைமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. மேலும், தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகாரசபையின் கூட்டிணைப்புடன் நன்னீர் மீன் மற்றும் நீரியல்வள உற்பத்தியை அதிகரிப்பதற்கு மீன்குஞ்சுகள் மற்றும் நன்னீர் கூனி இறல்களின் இருப்பை அதிகரித்தல், சமுதாயப் பங்கேற்புடன் நீர்நிலைகளை முறையாக முகாமை செய்தல் மற்றும் சமுதாய அடிப்படையில் அமைந்த சிறிய குஞ்சு பொரிக்கும் நிலையங்களை நிறுவுதல் போன்ற பல நடவடிக்கைகள் இவ்வாண்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. இதனடிப்படையில், தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகாரசபை 65.91 மில்லியன் நன்னீர் கூனி இறால்களையம் 88.50 மில்லியன் குஞ்சுகளையும் நீர்நிலைகளில் உற்பத்தி செய்தது. மேலும், தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகாரசபையானது ஏற்றுமதிச் சந்தையைக் குறிவைத்து நாட்டின் வெளிநாட்டு வருமானத்தை மேம்படுத்த கடலட்டை உற்பத்தி, கடல் பாசி உற்பத்தி, நண்டு உற்பத்தி, நீர்த்தாவர உற்பத்தி மற்றும் கடற்கரையோர அலங்கார மீன் இனப்பெருக்க செயற்றிட்டங்கள் என்பவற்றை வேளாண்மையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பங்கேற்புடன் தொடர்ந்தது. மேலும், மீன்பிடி சமூகத்தின் சமூக-பொருளாதார நிலைகளை வலுப்படுத்துவதற்காக 'வவேக் சமக கமக்' நிகழ்ச்சித்திட்டம், மீன்வள கிராம வீடுகள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கடனீரேரி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் இவ்வாண்டில் தொடர்ந்தன.

## கைத்தொழில்

**2019இல் பெறுமதிகூட்டப்பட்ட கைத்தொழில் நடவடிக்கைகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 1.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு கைத்தொழில் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவு பங்கிற்கு கூட்டாக வகைகூறும் கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் காணப்படும் மீட்சியிலிருந்து கிடைத்த நன்மையே முக்கிய காரணமாகும்.** அதேநேரம், தயாரிப்பு நடவடிக்கைகள் 2019இல் மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. ஏனைய கைத்தொழில் நடவடிக்கைகளைப் பரிசீலனையில் கொள்கையில், மின்வலு மற்றும் வாயுவுடன் தொடர்பான நடவடிக்கைகள், வடிகால்கள், கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள், நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் இவ்வாண்டுப்பகுதியில் நேர்க்கணியமான அபிவிருத்தியைத் தொடர்ந்தும் கொண்டிருந்தன. கைத்தொழில் பிரிவுடன் தொடர்பான வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் கேள்வி மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்கள் சராசரியாக விரிவடைந்து இவ்வாண்டுப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளில் காணப்பட்ட வளர்ச்சியைப் பிரதிபலித்தன.

## சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்


**பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2019இல் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் 2018இன் 5.2 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைளுடன் தொடர்பான பின்னணி இணைப்புக்களைக் கொண்டிருந்த கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட புத்தெழுச்சியே காரணமாகும்.** சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள், இரத்தினக்கல் அகழ்தல் அதேபோன்று ஏனைய சுரங்கமகழ்தல் நடவடிக்கைகள் இரண்டினையும் உள்ளடக்கியிருந்தன. இரத்தினக்கல் அகழ்தல் நடவடிக்கைகளைப் பரிசீலனையில் கொள்கையில் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரண ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 2018இன் 13.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 14.4 சதவீதத்தினால் அதிகரித்து இவ்வாண்டுப்பகுதியில் இரத்தினக்கல் அகழ்தல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட புத்தெழுச்சியைப் பிரதிபலித்தது. ஏனைய சுரங்கமகழ்தல் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் காணப்பட்ட மீட்சி மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்குத் தூண்டுதலாக அமைந்தது. எனினும், கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திச் செயற்றிட்டம் 2019 சனவரியில் அதன் நில மீட்புப் பணிகளைப் பூரணப்படுத்தியமையானது 2018 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் மணல் அகழ்வு நடவடிக்கைகளில் மெதுவடைவு ஏற்படக் காரணமாகியது. 2019இல் கனிப்பொருள்

ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 5.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.1 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது. எனினும், பொசுபேற்றின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்து வேளாண்மை நடவடிக்கைகள் மெதுவடைந்தமையினைத் தொடர்ந்து வளமாக்கிக்கான கேள்வி குறைவடைந்தமையினைப் பிரதிபலித்தது. அதேநேரம், காரியத்தின் உற்பத்தி இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

## தயாரிப்பு

**பெறுமதிகூட்டப்பட்ட தயாரிப்பு நடவடிக்கைகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 3.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் 1.9 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டுத் துறையிலிருந்து தோன்றிய பாதகமான விடயங்களே காரணமாக அமைந்தன.** உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினால் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட மோசமானதன்மை அடுத்தடுத்துவந்த காலாண்டுகளில் படிப்படியாக மறைந்தது. இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், தளபாடங்கள் தவிர்ந்த மரம் மற்றும் அடைப்பான் உற்பத்திகள், அடிப்படை உலோகம் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், தாள் உற்பத்திகளின் தயாரிப்பு, அச்சிடல் மற்றும் ஊடக உற்பத்திகளின் மீள்தயாரிப்பு என்பனவற்றின் தயாரிப்பில் பதிவுசெய்யப்பட்ட கணிசமான சுருக்கம் 2019இல் ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகளில் காணப்பட்ட மெதுவான போக்கிற்கு பெருமளவிற்கு வழிவகுத்தது. எனினும், தயாரிப்புத் துறையின் இரு பெரும் துணைத் தயாரிப்புக்களான உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள், புடவைகள், அணியும் ஆடைகள், தோலுடன் தொடர்பான உற்பத்திகள், தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு நேர்க்கணியமாகப் பங்களித்தன. மேலும், கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள், பொறிகள் மற்றும் கருவிகளின் தயாரிப்புக்கள் என்பன 2019இல் சாதகமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. தயாரிப்புடன் தொடர்பான குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொள்கையில் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 0.8 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் 1.3 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, இலங்கை மத்திய வங்கியினால் மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்ட தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணும் இவ்வாண்டுப்பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த விரிவாக்கமொன்றினை எடுத்துக்காட்டின. குறிப்பாக, தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2019 ஏப்பிறலில் வரலாற்றிலேயே மிகக் குறைந்த பெறுமானத்தினைப் பதிவுசெய்து உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் உடனடித் தாக்கத்தினைப் பிரதிபலித்ததுடன் அதன் பின்னர் மே மாதத்தில் பின்னர் மீட்சியடைந்து தயாரிப்பு நடவடிக்கைகள் மீண்டும் உத்வேகம் அடைந்தமையினை எடுத்துக்காட்டும் விதத்தில் விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தது.

வரைபடம் 2.6
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு (அ)





(அ) கொ.மு.சுட்டெண்ணானது புலனுணர்வு அளவீட்டு அடிப்படையிலான கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் விதத்தில் அமைந்தது ஆகும். இந்த வியாபித்தல் சுட்டெண்ணானது 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியினை கொண்டிருப்பதோடு பொதுவான நடுநிலையான 50 இற்கு மேலான சுட்டெண் பெறுமதியானது பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு விரிவாக்கத்தைக் குறிக்கும் வேளையில் 50 இற்கு கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது

*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

**முக்கிய துணைத்துறைகளின் அதிகரித்த உற்பத்தியுடன் தயாரிப்புத் துறையானது 2019இல் சிறிதளவானதொரு விரிவாக்கத்தினைப் பதிவுசெய்திருந்தது.** மொத்தக் கைத்தொழில் துறைக்குள் 60 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற தயாரிப்புத் துறை உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள், தளம்பலடைந்த எண்ணெய் விலைகள் மற்றும் சாதகமற்ற காலநிலை நிலைமைகள் போன்ற பல்வேறுபட்ட சவால்களின் காரணமாக 2019இல் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின்படி 1.3 சதவீதமான வரையறுக்கப்பட்ட வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருந்தது. தயாரிப்புக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்கான முக்கிய தூண்டுதல்களாக பானங்களின் தயாரிப்பு, அணியும் ஆடைகள்,

வரைபடம் 2.7
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)




*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

தளபாடம் தவிர்ந்த மரத்திலான உற்பத்திகள், காகிதம் மற்றும் காகித உற்பத்திகள், கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகள், ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் மற்றும் இலத்திரனியல் கருவிகள் என்பன காணப்பட்டன. உணவு உற்பத்திகளின் தயாரிப்பு, புகையிலை உற்பத்திகள், புடவைகள், தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள், அச்சிடல் மற்றும் பதிவுசெய்யப்படட ஊடகத்தின் மீள்தயாரிப்பு, அடிப்படை மருந்தாக்கற் உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் கருவிகளின் உற்பத்தி அதேபோன்று தளாடம் என்பன ஆய்விற்குரிய காலப்பகுதியில் சுருக்கமொன்றைக் காட்டியிருந்தன.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் பாரியதொரு துணைத்துறையாகக் காணப்படுகின்ற உணவு உற்பத்திகள் துணைத்துறை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் பகுதியளவில் பாதிக்கப்பட்டு முன்னைய ஆண்டில் காட்டியிருந்த விரிவாக்கமொன்றுடன் ஒப்பிடுகையில் 2019இல் மெதுவடைந்திருந்தது.** உணவு உற்பத்திகள் துணைத்துறையானது 2018இன் 1.0 சதவீதமான வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 0.4 சதவீதமானதொரு சிறிதளவான சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது. தகரத்திலடைக்கப்பட்ட மீன், பால்மா, பாண், கோழி, பிஸ்கட் மற்றும் உப்பு போன்றவற்றின் தயாரிப்புக்களில் ஏற்பட்ட பலவீனமான செயலாற்றமே உணவு உற்பத்திகள் துணைத் துறையின் மந்தமான செயலாற்றத்திற்குக் காரணமாகும். உணவுத் தயாரிப்புத் துறையின் மீது கசிவுத்தாக்கத்தைக் கொண்டிருந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் காரணமாக வீழ்ச்சியடைந்த உள்நாட்டுக் கேள்வி, உயர்ந்தளவான உற்பத்திச் செலவு மற்றும் சார்பளவில் அதிகரித்துக் காணப்பட்ட பன்னாட்டு உணவு விலைகள் என்பவற்றின் முக்கிய காரணமாகவே உணவு உற்பத்திகள் துணைத்துறை வீழ்ச்சியடைந்திருந்தது. உலகளாவிய ரீதியில் பால்மாவின் விலைகள் அதிகரித்துச் செல்வதற்கேற்ற வகையில் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளும் செத்தெம்பரில் அதிகரிக்கப்பட்டன. எனினும், அரசாங்கத்தினால் பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட குறைப்பினை பிரதிபலிக்கும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா உற்பத்திகளின் விலைகள் 2019 திசெம்பரில் குறைக்கப்பட்டிருந்தன. இருந்தபோதிலும், உணவுக் கைத்தொழிலில் காணப்படும் சவால்களைத் தீர்ப்பதற்கும் உணவு உற்பத்திகளின் தயாரிப்புக்களை மேம்படுத்துவதற்கும் குறிப்பாக, கிராமப்புறங்களில் விநியோக வலைப்பின்னல்களைப் பலப்படுத்துகின்ற அதேவேளை நுகர்வோர் விருப்பத்தெரிவு மற்றும் மாற்றமடைந்துவரும் வாழ்க்கை முறைகள் என்பவற்றிற்கு இணங்கிச்செல்லும் வகையில் அனைத்துச் சந்தை கூறுகளுக்குமான பெறுமதிசேர்

அட்டவணை 2.9
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்
2015=100

| பிரிவு | 2018 | 2019 (ஆ) | மாற்றம் (%) 2017/18 | மாற்றம் (%) 2018/19 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. உணவு உற்பத்திகள் (35.2%) | 106.1 | 105.6 | 1.0 | -0.4 |
| 2. குடிபானங்கள் (3.8%) | 99.8 | 103.4 | 9.1 | 3.6 |
| 3. புகையிலை உற்பத்திகள் (1.7%) | 92.7 | 81.0 | -12.9 | -12.6 |
| 4. புடவை (3.3%) | 110.2 | 108.3 | 3.6 | -1.7 |
| 5. அணியும் ஆடைகள் (19.8%) | 115.1 | 117.2 | 3.9 | 1.9 |
| 6. தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் (0.3%) | 117.0 | 116.7 | 4.5 | -0.2 |
| 7. தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மரசார் உற்பத்திகள், அடைப்பான்கள் தயாரித்தல், வைக்கோல் பொருட்கள் மற்றும் பின்னல் பொருட்கள் தயாரிப்பு (0.2%) | 98.6 | 101.9 | 5.3 | 3.3 |
| 8. தாள் மற்றும் தாள் உற்பத்திகள் (1.7%) | 86.8 | 96.7 | -19.9 | 11.4 |
| 9. அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு (1.4%) | 106.5 | 102.9 | -0.4 | -3.4 |
| 10. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் (7.4%) | 97.5 | 106.8 | 3.4 | 9.6 |
| 11. இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் (4.1%) | 92.7 | 102.2 | -4.1 | 10.3 |
| 12. மருந்தாக்கற் பொருட்கள், மருத்துவ இரசாயனவியல் மற்றும் தாவரவியல் உற்பத்திகள் (0.1%) | 100.1 | 98.2 | -9.9 | -2.0 |
| 13. இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் (5.7%) | 112.0 | 106.4 | 3.7 | -5.0 |
| 14. ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (7.8%) | 108.9 | 117.8 | -2.4 | 8.2 |
| 15. அடிப்படை உலோகங்கள் (2.4%) | 128.3 | 124.2 | 6.2 | -3.2 |
| 16. பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (1.3%) | 125.4 | 110.7 | 8.3 | -11.7 |
| 17. இலத்திரனியல் சாதனங்கள் (2.0%) | 81.8 | 86.9 | -18.1 | 6.3 |
| 18. பொறி மற்றும் இயந்திரங்களின் உற்பத்தி (0.7%) | 102.0 | 99.3 | -9.2 | -2.6 |
| 19. தளபாட உற்பத்தி (0.8%) | 90.6 | 90.3 | -13.9 | -0.4 |
| 20. ஏனைய உற்பத்திகள் (0.3%) | 95.1 | 66.0 | -3.4 | -30.7 |
| **கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்** | **106.7** | **108.1** | **0.8** | **1.3** |

(அ) ஒவ்வொரு பிரிவுகளுக்கும் பொருந்தக்கூடிய நிறையிடல்கள் அடைப்புக்குறிக்குள் உள்ளன
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

உற்பத்திகளை உணவுக் கைத்தொழிலானது அறிமுகப்படுத்தல் வேண்டும். மேலும், வெளிநாட்டுச் சந்தைகளை இறுக்கமாகக் கொண்டு வணிகக்குறிகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் சரியான நேரத்திலான சந்தைத் தகவல்கள் என்பன உள்நாட்டு உணவுக் கைத்தொழிலை உலகச் சந்தையில் மிகவும் போட்டித்தன்மையானதாக மாற்றுவதற்கு முக்கியமானவையாகும்.


**முக்கியமான பாரம்பரிய ஏற்றுமதிச் சந்தைகளின் மெதுவான வளர்ச்சிக்கும் மத்தியில் அணியும் ஆடைகளின் தயாரிப்பு நடவடிக்கைகள் மெதுவானதொரு செயலாற்றத்தைக் காட்டியிருந்த அதேவேளை புடவைகள் தயாரிப்பு நடவடிக்கைகள் சிறிதளவான சுருக்கமொன்றைப் பதிவுசெய்திருந்தது.** கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் ஐந்தில் ஒரு பங்கிற்கு வகைகூறுகின்ற அணியும் ஆடைகள் தயாரிப்புத் துணைத் துறையானது முன்னைய ஆண்டின் 3.9 சதவீதம் வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 1.9 சதவீதமான மெதுவா வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருந்தது. அதேவேளை, 2018இல் 3.6 சதவீதமான விரிவாக்கமொன்றைப்

பதிவுசெய்திருந்த புடவைகளின் உற்பத்திகளின் தயாரிப்பு 2019இல் 1.7 சதவீதமான வீழ்ச்சியொன்றை அறிக்கையிட்டிருந்தது. முடிக்கப்பட்ட துணி மற்றும் சுருள் மெத்தைகள் என்பவற்றின் வீழ்ச்சியடைந்த உற்பத்தி 2019இல் புடவைகள் உற்பத்திகளின் சுருக்கத்திற்குப் பாரியளவு பங்களித்திருந்தது. வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் உள்நாட்டு முயற்சியாண்மையாளர்களுக்கு வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்றன தொடர்பில் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்றுமதியை நோக்காகக் கொண்டு ஆடை மற்றும் புடவைகள் கைத்தொழில் துறைகள் கணிசமானளவான பங்களிப்பை வழங்கியிருந்த போதிலும் அதிகரித்துச் செல்லும் ஊழியச் செலவு மற்றும் ஜி.எஸ்.பீ சலுகைகளில் அதிகமாகத் தங்கியிருத்தல் என்பன இக்கைத்தொழிலின் போட்டித்தன்மையைக் குறைவடையச் செய்துள்ளதுடன் உலகளாவிய சந்தையில் ஏற்படும் அதிர்வுகளுக்கு அதிகளவு பாதிப்படையக்கூடிய தன்மையினையும் கொண்டுள்ளன. ஆகையால், ஏற்றுமதிச் சந்தைகளைப் பன்முகப்படுத்தல் மற்றும் பெறுமதிசேர்ப்பை அதிகரித்தல் என்பனவற்றினூடாக உலகளாவிய சந்தையில் இக்கைத்தொழிலை அதிகளவு போட்டித்தன்மையானதாக மாற்றுவதற்கு அவசியமான படிமுறைகளை எடுக்க வேண்டியது முக்கியமானதாகக் காணப்படுகின்ற அதேவேளை ஆடைக் கைத்தொழிலுக்கு அப்பால் ஏற்றுமதியைப் பன்முகப்படுத்துவதற்கு வசதியளிக்கின்றது.

**கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் உற்பத்திகளின் தயாரிப்பு 2019இல் விரிவாக்கமொன்றைக் காட்டியிருந்தது.** பெற்றோல், தன்னியக்க டீசல், உலை எண்ணெய் மற்றும் பிட்டுமன் போன்றவற்றின் அதிகரித்த உற்பத்தியினால் துணைபுரியப்பட்டு கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்புக்களின் உபதுறையானது முன்னைய ஆண்டின் 3.4 சதவீதமானதொரு வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 9.6 சதவீதமான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பானது 2018இன் முதலாவது காலாண்டு காலப்பகுதியில் ஒன்றரை மாதங்களுக்கு மேலாக பராமரிப்பு நோக்கத்திற்காக அதன் தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்திருப்பினும் 2019இல் எவ்விதமான தடைகளுமின்றி சுத்திகரிப்புச் செயன்முறையானது தொடரப்பட்டிருந்தது. அதன்படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் உருவாக்கப்பட்ட மொத்த சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் 2018இன் 1.6 மில்லியன் மெ.தொன்களிலிருந்து 2019இல் 1.8 மில்லியன் மெ.தொன்களுக்கு 11.9 சதவீதமான அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்திருந்தது. உலகச் சந்தையில் காணப்படுகின்ற மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் விலைமட்டங்களுக்கு ஏற்றவகையில் குறிப்பிட்ட சில காலப்பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் இறக்குமதி செய்வதனைக் காட்டிலும் மசகெண்ணெயை உள்நாட்டில் சுத்திகரிப்பதானது மிகவும் சிக்கனமானதாக இருக்கக்கூடும். தற்போது, ஏறத்தாழ 70 சதவீதமான சுத்திகரிப்புக்களின் தேவைப்பாடானது இறக்குமதி செய்யப்படுகின்றது. ஆகையால், தற்போது காணப்படுகின்ற இயந்திரங்களை மேம்படுத்துவதுடன் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினை நவீனமயப்படுத்த வேண்டியது தற்போதைய காலத்தின் முக்கிய தேவைப்பாடாகும். அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுவுதற்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய மசகெண்ணெய் சுத்திகரிப்புச் செயற்றிட்டங்கள் நடுத்தர காலத்தில் நாட்டின் அதிகரித்த பெற்றோலிய சுத்திகரிப்பின் இயலளவிற்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை குறிப்பிட்ட சில மட்டத்திற்கு பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி மீதான வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களைக் கட்டுப்படுத்த முடியும்.

**ஏனைய உலோகமல்லா கனியவள உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத்துறை 2019இல் மீட்சிக்கான சமிக்ஞையைக் காட்டியிருந்தது.** இத்துணைத் துறையானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 2.4 சதவீதமான சுருக்கத்துடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 8.2 சதவீதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருந்தது. அரசாங்க உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களிலிருந்தான கேள்விக்குப் பதிலிறுத்தும் வகையில் அதிகரித்திருந்த சீமெந்து உற்பத்திகள், கண்ணாடி போத்தல்கள், தரைப்பளிங்குக் கற்கள், புறொசலின் மேசைப்பொருட்கள் என்பவற்றின் அதிகரிப்பு மற்றும் வர்த்தகக் கட்டுமானங்களின் விரிவாக்கம் என்பன இத்துணைத் துறையின் முக்கிய வகிபாகத்தை வழங்குகின்ற உள்நாட்டுச் சீமெந்து உற்பத்தியானது 19.5 சதவீதமான அதிகரிப்பைக் காட்டியிருந்த அதேவேளை 2019இல் சீமெந்தின் இறக்குமதி 7.6 சதவீதமான சுருக்கமொன்றைப் பதிவுசெய்திருந்தது. சீமெந்து உற்பத்தியின் வளர்ச்சியானது சீமெந்து தயாரிப்பாளர்களின் இயலளவு மேம்படுத்துகையினால் மிக முக்கியமாக ஆதரவளித்திருந்தது.

வரைபடம் 2.8
2019இல் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் முக்கிய பிரிவுகளின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு




*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

2

**ஒட்டுமொத்த கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் ஏறத்தாழ 6 சதவீதத்திற்கும் மேலாக வகைகூறுகின்ற இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் அதேபோன்று தோல் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளின் தயாரிப்பானது 2019இல் சுருக்கமொன்றைப் பதிவுசெய்திருந்தது.** இறப்பர் டயர்களின் குறைவடைந்த உற்பத்தியானது இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளின் துணைத் துறையின் தயாரிப்புக்களின் மெதுவடைவிற்குப் பங்களித்திருந்த அதேவேளை தோல் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்தி வகைகளின் தயாரிப்பில் ஏற்பட்ட சுருக்கத்திற்குப் பாடசாலைப் பாதணிகள் மற்றும் ஆண்களுக்கான பாதணிகள் என்பவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். தற்போது இலங்கையின் இறப்பர் மற்றும் தோல் உற்பத்தி ஏற்றுமதிகளுக்கான முக்கிய சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனா என்பன காணப்படுகின்றன. சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்கா பொருளாதாரங்களின் மெதுவடைவு காரணமாக அவற்றிலிருந்தான மெதுவடைந்த கேள்வி அதேபோன்று உள்நாட்டில் அத்தகைய உற்பத்திகளின் அதிகரித்த இறக்குமதி என்பவற்றுடன் இணைந்து உள்நாட்டு இறப்பர் மற்றும் தோல் அடிப்படையிலான உற்பத்திகளிற்கான உள்நாட்டுக் கேள்வி 2019இல் வீழ்ச்சியடைந்திருந்தது.

**இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத் துறையானது 2018இன் 4.1 சதவீதமான சுருக்கமொன்றிற்கு எதிராக 2019இல் 10.3 சதவீதமாக சாதகமான வளர்ச்சியொன்றைக் காட்டியிருந்தது.** வளமாக்கிகள், ஒட்டுப்பைகள், சுகாதாரக் குட்டைகள், தீப்பெட்டிகள் என்பன 2019இல் இரசாயன உற்பத்திகள் துணைத் துறையின் உற்பத்தி வளர்ச்சியினைத் தூண்டிய முக்கிய விடயங்களாகும்.

**பியர் மற்றும் மென்குடிபானங்கள் போன்ற வெறியமற்ற குடிபானங்கள் என்பவற்றின் அதிகரித்த உற்பத்தியுடன் குடிபானங்கள் தயாரிப்புத் துணைத் துறையானது 2019இல் மெதுவானதொரு விரிவாக்கத்தைக் காட்டியிருந்தது.** அதன்படி, குடிபானங்கள் துணைத் துறையானது 2018இல் பதிவுசெய்திருந்து 9.1 சதவீதமான வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 3.6 சதவீதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருந்தது. அதிகரித்த பியர் உற்பத்தியானது முக்கியமாக வெளியகக் கேள்வியினால் தூண்டப்பட்டிருந்ததுடன் 2019இல் 57.2 சதவீதமான பியர் ஏற்றுமதியின் வளர்ச்சிக்கு இட்டுச்சென்றிருந்தது. எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் காரணமாக ஏற்பட்டிருந்த வீட்டுத்துறை மற்றும் சுற்றுலாத் துறை என்பவற்றிலிருந்தான குறைவடைந்த உள்நாட்டுக் கேள்வி 2019இல் மதுசாரத்திற்கான கேள்வி மற்றும் உள்நாட்டு விற்பனைகள் என்பவற்றைக் கணிசமாகப் பாதித்திருந்தது. உள்நாட்டில் தயாரிக்கப்படும் குடிவகை அதேபோன்று இறக்குமதி செய்யப்பட்ட குடிவகை என்பவற்றின் மீது பிரயோகிக்கப்படும் கலால் வரியானது அவற்றின் மதுசார உள்ளடக்கத்தின் அடிப்படையில் 2019 மாச்சு மற்றும் திசெம்பர் மாதத்தில் அதிகரிக்கப்பட்டதுடன் இது பகுதியளவில் உள்நாட்டுக் கேள்வியின் வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றிருந்ததுடன் அதன் விளைவாக வெறியத்தை வடிகட்டல், சீர்செய்தல் மற்றும் கலவை செய்தல் போன்றவற்றின் நியதிகளில் ஒட்டுமொத்த குடிவகைகளின் உற்பத்தியைக் குறிப்பாக, வீழ்ச்சியடையச் செய்திருந்தன. அதேவேளை, ஆய்விற்குரிய காலப்பகுதியில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நிலவிய வரட்சியானது வெப்பமானதுமான வானிலை நிலைமைகளின் காரணமாக மென்பானங்களுக்கான கேள்வியும் அதிகரித்திருந்தது.

**தளபாடம் தவிர்ந்த பலகை உற்பத்திகள், மின்னியல் கருவிகள் மற்றும் காகித மற்றும் காகித உற்பத்திகள் தயாரிப்புக்களின் துணைத் துறைகள் 2019இல் விரிவாக்கமொன்றைக் காட்டியிருந்தது.** புகைவண்டி கிடைக்கட்டைகளின் அதிகரித்த உற்பத்தியின் முக்கிய காரணமாக தளபாடம் தவிர்ந்த பலகை உற்பத்திகளின் தயாரிப்பு 2018இல் பதிவுசெய்திருந்த 5.3 சதவீதமான விரிவாக்கமொன்றுடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 3.3 சதவீதமான சிறிதளவான விரிவாக்கமொன்றை பதிவுசெய்திருந்தது. அதேவேளை, மின்னியல் தொகுதிகள், அலுமினியம் காப்பிடப்பட்ட வயர், வெறுமையான வயர் மற்றும் சலவை இயந்திரத்துடன் தொடர்புடைய கூறுகளின் அதிகரித்த உற்பத்தியானது மின்னியல் கருவிகள் தயாரிப்புத் துணைத் துறையின் (6.3 சதவீதம்) விரிவாக்கத்திற்கு இட்டுச்சென்றிருந்தது. நெளிந்த காகிதங்கள், காகித உறைகள், அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் என்பவற்றின் அதிகரித்த உற்பத்தியினால் ஆதரவளிக்கப்பட்டு காகிதம் மற்றும் காகித உற்பத்திகளின் தயாரிப்பானது முன்னைய ஆண்டில் பதிவாகிய 19.9 சதவீதமான சுருக்கிமொன்றுடன் ஒப்பிடுமிடத்து ஆய்விற்குரிய காலப்பகுதியில் 11.4 சதவீதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருந்தது.

**புகையிலை உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், தளபாடம் என்பவற்றின் தயாரிப்பு மற்றும் அச்சிடல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் உற்பத்தியின் தயாரிப்பு போன்ற துணைத் துறைகள் 2019இல் சுருக்கத்தை அறிக்கையிட்டிருந்தது.** விலை அதிகரிப்பு, சட்ட ரீதியான கட்டுப்பாடுகள், புகையிலை உற்பத்திகள் மீதான அதிகரித்த வரிகள் அதேபோன்று பொதுமக்களிடையே அதிகரித்திருந்த சுகாதார விழிப்புணர்வுகள் என்பவற்றின் காரணமாக தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பானது 2019இல் சுருக்கமடைந்திருந்ததுடன் 12.6 சதவீதமான வருடாந்த வீழ்ச்சியை அறிக்கையிட்டிருந்தது. சிகரெட் உற்பத்திகளின் வீழ்ச்சியானது 2019இல் புகையிலை உற்பத்திகள் தயாரிப்புத் துணைத் துறையின் மெதுவடைவிற்கு பாரியளவில் பங்களித்திருந்தது. அதேநேரம், முக்கியமாக அலுமினியக் கம்பிகளின் குறைவடைந்த உற்பத்தியின் முக்கிய காரணமாக அடிப்படை உலோகங்களின் உற்பத்தியானது ஆய்விற்குரிய

காலப்பகுதியில் 3.2 சதவீதமான சுருக்கமொன்றைப் பதிவுசெய்திருந்தது. மேலும், பலகைத் தளபாடங்கள், பிளாத்திக்கு கதிரைகள், இறப்பர் மெத்தைகள் மற்றும் கயிறு மெத்தைகள் என்பவற்றின் குறைந்தளவான உற்பத்தியின் காரணமாக தளபாடத் தயாரிப்பு துணைத் துறையானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 13.9 சதவீதமான சுருக்கமொன்றுடன் ஒப்பிடுமிடத்து 0.4 சதவீதமான சிறிதளவான சுருக்கத்தை ஆய்விற்குரிய காலப்பகுதியில் பதிவுசெய்திருந்தது. மேலும், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் தயாரிப்புத் துணைத் துறையானது இரும்பு, எண்ணெய், நீர் மற்றும் சீமெந்து பவுசர்கள், எண்ணெய் களஞ்சிய தொட்டிகள், இரும்பு தளபாடங்கள், ஈயத்தகடுகள் மற்றும் அலுமினிய உற்பத்திகள் என்பவற்றின் குறைந்த உற்பத்தியின் காரணமாக 2018இன் 8.3 சதவீதமான விரிவாக்கமொன்றுடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 11.7 சதவீதமான சுருக்கமொன்றைக் காட்டியிருந்தது. அதேநேரம், அச்சிடல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள்உற்பத்தி துணைத் துறையானது 2018இன் 0.4 சதவீதமான சிறிதளவான சுருக்கமொன்றினைத் தொடர்ந்து 2019இல் 3.4 சதவீதமான சுருக்கமொன்றை அறிக்கையிட்டிருந்தது. நாளிதழ்கள், பாடசாலைக் கருவிகள், அச்சிடல் புத்தகங்கள் மற்றும் அட்டைப்பெட்டிகள் என்பவற்றின் குறைவடைந்த உற்பத்தி அச்சிடல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள்உற்பத்தியின் மெதுவடைவிற்கு முக்கியமாகப் பங்களித்திருந்தது.

## கைத்தொழில் கொள்கைகள் மற்றும் நிறுவன ரீதியிலான உதவி

**அதிகரித்துச்செல்லும் சவால்மிக்க சந்தைச் சூழலில் புத்தாக்கத்தை ஊக்கப்படுத்தவும் அதனூடாக நாட்டின் போட்டித்தன்மைமிக்க நன்மைகளை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் பல்வேறுபட்ட கொள்கை வழிமுறைகளை எடுத்திருந்தது.** தொடர்பான அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், முப்படையினர், பொலிஸ், தனியார் துறை மற்றும் பொருத்தமான ஏனைய பங்குதாரர்களின் பங்கு பற்றுதல்களுடன் இரண்டு சில்பசேனா கண்காட்சிகள் 2019இல் நடாத்தப்பட்டன. இலங்கையர்களின் மனநிலைக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைச் சேர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட சில்பசேனா கண்காட்சியானது கண்டுபிடிப்பாளர்கள் தங்களது கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கங்களை வெளிப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் வாய்ப்புக்களை வழங்கியிருந்தது. ஆராய்ச்சி வணிகமயமாக்கலுக்கான இணைப்பொன்றை உருவாக்குகின்ற அதேவேளை, சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிடையே விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதக் கல்வி மற்றும் நவீன தொழில்நுட்பம் என்பவற்றை பிரபல்யப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களையும் அரசாங்கம் ஆரம்பித்திருந்தது. மேலும், கனிய வளங்களுக்கு பெறுமதிகூட்டலை வழங்குகின்ற அதேவேளை கனியவளத்துடன் தொடர்புடைய கைத்தொழில்களுக்குச் சாதகமான சூழலொன்றை உருவாக்குகின்ற தேசிய கனியவளக் கொள்கையொன்றை உருவாக்குவதற்காக அரசாங்கம் அதனது முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டிருந்தது. அதேவேளை, தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது புத்தாக்கம் மற்றும் வணிகமயப்படுத்தல் போன்ற எண்ணக்கருக்களை இணைத்துக் கொள்கின்ற அதேவேளை தற்போது காணப்படுகின்ற தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கொள்கையை இற்றைப்படுத்தும் செயன்முறையினை மேற்கொண்டிருந்தது. 2019இல் இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவகமானது 100 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சி செயற்றிட்டங்களை மதிப்பிட்டிருந்ததுடன் பல்வேறுபட்ட வருவாயை உருவாக்குகின்ற செயற்றிட்டங்களைத் தொடர்ச்சியாக அமுல்படுத்தியிருந்தது. விதாத வள நிலையங்களின் நாடளாவிய வலையமைப்பூடாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அடிமட்டங்களுக்கு விஞ்ஞானிகளின் விஞ்ஞான ரீதியான அறிவியல் மற்றும் ஆராய்ச்சிப் புத்தாக்கங்கள் என்பவற்றை வழங்குவதனை நோக்காகக் கொண்ட தொழில்நுட்ப பரிமாற்றல் (விதாத) நிகழ்ச்சித்திட்டம் 2019இலும் தொடர்ந்திருந்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், 3,028 விதாத நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இதனூடாக ஏறத்தாழ 118,400 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சியாளர்கள் பயனடைந்திருந்தனர். அதேவேளை, விதாத முயற்சியாண்மையாளர்கள் தங்களின் உற்பத்திகளின் தரத்தை முன்னேற்றுவதற்காக வாய்ப்புக்களை வழங்குகின்ற விதாத ஹரித்தகட மந்திய நிகழ்ச்சித்திட்டங்கள் 2019இலும் தொடர்ந்திருந்தது. சிறிய முயற்சியாண்மையாளர்களின் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான சந்தைப்படுத்தல் இடமொன்றாக சில்பசேன கண்காட்சிக்கு இணையாக மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, மொனராகலை, கம்பஹா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் பல்வேறுபட்ட கண்காட்சிகளை நடாத்துவதனூடாக அரசாங்கம் விதாத முயற்சியாண்மையாளர்களுக்கு வசதிப்படுத்தல்களை மேற்கொண்டிருந்தது. 2019இல், நாட்டில் தொழில்நுட்பத்தின் பிரயோகத்தன்மையை விரிவாக்கும் நோக்குடன் 15 மாவட்டங்களில் கிராமிய சமூகங்களை உள்ளடக்கி 35 விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப சிறப்புச் செயற்றிட்டங்களை நடாத்தியிருந்தது. அதேநேரம், இறக்குமதி செய்யப்பட்ட வளமாக்கிகளின் பாவனையை குறைப்பதற்காக அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவகமானது நுண்ணுயிர் உயிர்-வளமாக்கிகளைத் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்திருந்தது. வேளாண்மைத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவகமானது 2019இல் அரிசி பயிர்ச்செய்கை செய்யப்பட்ட 15,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு உயிர்-வளமாக்கிகளை பிரயோகித்திருந்ததுடன் 2020இல் உயிர்-வளமாக்கிகளின் பாவனையை 50,000 ஏக்கர்களுக்கு

விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது. அதேவேளை, என்டர்பிரைஸ் சிறிலங்கா கடன் திட்டத்தின் கீழ் இயந்திர மின்னணுவியல் அடிப்படையிலான உற்பத்திகளின் உருவாக்கம், வடிவமைப்பு மற்றும் மின்னணுவியல் உற்பத்திகளுக்கு சான்றிதழ் வழங்கத் தொடங்கும் கம்பனிகளுக்கு நீண்ட காலக் கடன் வசதிகளை வழங்குவதற்கு அமைச்சர்களின் அமைச்சரவை ஒப்புதலளித்திருந்தது. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் என்பவற்றிற்கான ஒருங்கிணைப்புச் செயலகம் மற்றும் தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி என்பவற்றுடன் இணைந்து அரசாங்கமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உற்பத்தியாளர்களுக்கு வினைத்திறன்மிக்க இயந்திரங்களை வடிவமைப்பதனூடாக இறக்குமதியைக் குறைக்கின்ற அதேவேளை உயர் தொழில்நுட்பம் கொண்ட ஏற்றுமதிகளுடன் உள்நாட்டுப் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்யும் நோக்கில் மின்னனுவியலால் இயக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி முயற்சிகள் மீதான செயற்றிட்டமொன்றை அமுலாக்கும் செயன்முறையில் ஈடுபட்டிருந்தது.

**பொருத்தமான கொள்கைகள் உருவாக்கத்திற்கு உதவுகின்ற அதேவேளை உள்நாட்டுத் தயாரிப்புத் துறைக்கு ஆதரவளிப்பதற்காக பல்வேறுபட்ட முயற்சிகளை தொடர்பான பல அமைச்சுக்கள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியிருந்தன.** அரசாங்கம் மாவட்ட மட்டங்களில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்காக வியாபாரப் பணிகள் நிலையங்களை நிறுவும் செயன்முறையில் ஈடுபட்டிருந்தது. வியாபாரப் பணிகள் நிலையங்கள் தொழில்நுட்பம் பரிமாற்றல், திறன் அபிவிருத்தி, தரம் மற்றும் உற்பத்தித்திறன் முன்னேற்றம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றிற்கு வசதிப்படுத்தும் தயாரிப்புக் கைத்தொழில் பொறுத்தமட்டில் தாமதங்கள் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறை என்பவற்றைக் குறைக்கும் நோக்கில் கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மையாளர்களின் அபிவிருத்திக்காக அமைச்சுக்களுக்கு இடையிலான படையணியொன்று நிறுவப்பட்டுள்ளது. 2019இல் தேசிய கைத்தொழில் கொள்கையொன்றின் உருவாக்கத்தை ஆரம்பிப்பதற்கு அமைச்சர்களின் அமைச்சரவை ஒப்புதலை வழங்கியிருந்தது. 2020 - 2025 இற்கான இலங்கை தேசிய கொள்கைச் சட்டகம்: நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு அதேபோன்று நீடித்துநிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்கள் என்பவற்றில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள குறிக்கோள்களுக்கேற்ப தேசிய கைத்தொழில் கொள்கையானது தயார் செய்யப்படும். தேசிய கைத்தொழில் கொள்கையானது கைத்தொழில் துறைக்கான உகந்த சூழலொன்றை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கின்ற அதேவேளை கணனி தன்னியக்கப்படுத்தலுக்கு அப்பால் சைபர்-பௌதீக இயந்திரங்களுக்கு அசைவுறுவதனூடாக தயாரிப்புச் செயன்முறை முழுவதும் தயாரிப்பு தன்னியக்கப்படுத்தல் மற்றும் தகவல் பரிமாற்றலை நோக்கியதான போக்கினை கைத்தொழில் 4.0 மட்டத்திற்கு முன்னேற்றுவதற்காக உயர்ந்த அடுக்குகளில் தொழிற்படுகின்ற கைத்தொழில்களுக்கு வசதிப்படுத்துகின்றது.

**உள்நாட்டுக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காக பல்வேறுபட்ட பொது நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் சங்கங்கள் பல முயற்சிகளைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியிருந்தன.** 2019இல் தேசிய வர்த்தகச் சங்கமானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அவற்றின் வியாபாரத் திறன்கள் மற்றும் அறிவு என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு உதவும் நோக்குடன் நாட்டின் வெவ்வேறுபட்ட பகுதிகளில் பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதனூடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மேம்படுத்தவும் கல்வியறிவூட்டுவதற்காகவும் அதனது முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டிருந்தது. சுதேசிய மற்றும் மேற்கத்தேய மருத்துவப்பொருட்கள் மற்றும் பணிகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்கும் நோக்கில் அரசாங்கத்தின் உதவியுடன் தேசிய வர்த்தகச் சங்கமானது 2019 யூலை மாதம் பன்னாட்டு சுகாதாரக் கண்காட்சியொன்றை நடாத்தியிருந்தது. சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத் தொழில்முயற்சிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மூலோபாயத் திட்டமொன்றை தயார் செய்திருந்ததுடன் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத் தொழில்முயற்சியாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக என்டர்பிரைஸ் சிறிலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறுபட்ட செயலமர்வுகளை சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலுக்கான இலங்கைச் சங்கம் நடாத்தியிருந்தது. சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலுக்கான இலங்கைச் சங்கமானது பொதுவான மேடையொன்றில் எதிர்காலக் கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுடன் வலைப்பின்னல்களை உருவாக்குகின்ற அதேவேளை வெவ்வேறுபட்ட வர்த்தகச் சந்தை, கண்காட்சிகள், பன்னாட்டு வர்த்தக பிரதிநிதிகளின் கூட்டங்கள் என்பவற்றிலும் கலந்து கொண்டிருந்தது. அதேவேளை, வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேம்படுத்துவதற்காக சிலோன் வர்த்தகச் சங்கமானது பல்வேறுபட்ட வர்த்தகப் பிரதிநிதித்துவங்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வர்த்தகச் சம்மேளனம் என்பவற்றிற்குத் தொடர்ச்சியாக வசதிப்படுத்தியிருந்தது. ஏனைய முயற்சிகளுக்கிடையில், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகமானது பிரதானமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா போன்ற மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர வியாபார தொழில்முயற்சிகளைத் தரமுயர்த்துவதற்காக குறிப்பாக, குறைந்தளவான கரும்புச் சக்கரை சேகரிப்புடன் உயர்ந்தளவான போசாக்குப் பெறுமதியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக உணவு தயாரிப்பதற்கான உணவு தொழில்நுட்ப விடயப்பரப்பிற்குள் பணிகளை 2019இல்

வழங்கியிருந்தது. அதேநேரம், ஆய்விற்குரிய காலப்பகுதியில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது பதினொரு கைத்தொழில் தோட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்தவும் நவீனமயப்படுத்துவதற்காகவும் அதனது நடவடிக்கைகளைத் தொடர்ந்திருந்தது. ஆண்டுகாலப்பகுதியில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் புதிதாக 554 நிறுவனங்கள் நிறுவப்பட்டதுடன் இவற்றுள் 40 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் என்ற வகைக்குள் காணப்பட்டிருந்தன. மேலும், எட்டு கைத்தொழில் தோட்டங்களில் ரூ.448 மில்லியன் கொண்ட மொத்த முதலீட்டில் பதினேழு புதிய நிறுவனங்கள் நிறுவப்பட்டதுடன் இவை 336 புதிய நேரடி தொழில்வாய்ப்புக்களை உருவாக்கியிருந்தன. இரத்தினக்கல் வெட்டுதல், ஆபரணங்களை வடிவமைத்தல் மற்றும் தயாரிப்புத் துறை போன்ற விடயப்பரப்புக்களில் வளர்ந்துவரும் தொழில் வாய்ப்புக்களுடன் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையானது இக்கைத்தொழிலில் காணப்படும் ஊழியப் பற்றாக்குறை பிரச்சினையைத் தீர்க்கின்ற அதேவேளை பங்குதாரர்களுக்காக பல்வேறுபட்ட சிறப்புக் கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது. அத்தகைய இரத்தினக்கற்களை வெட்டி மெருகூட்டிய பின்னர் மீள்ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்காக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள தனிநபர் ஒருவரால் இரத்தினக்கற்களை இறக்குமதி செய்யும் போது விதிக்கப்பட்டிருந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் நீக்கமானது இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிலில் பெறுமதிகூட்டலை ஊக்குவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பல்வேறுபட்ட அரச நிறுவனங்கள் மற்றும் வர்த்தகச் சங்கங்ள் என்பவற்றின் ஒத்துழைப்புடன் கைத்தொழில் துறை அபிவிருத்திக்கான தேசிய கொள்கையொன்றை உருவாக்குதல் மற்றும் தொடர்ச்சியாக அமுலாக்குதலானது கைத்தொழில் துறையின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கு மிகவும் இன்றியமையாததாகும்.

**இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பன ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட உள்நாட்டுத் தயாரிப்புக் கைத்தொழிலினைத் தீவிரமாக ஊக்குவித்திருந்த அதேவேளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து முதலீடுகளைக் கவருவதற்காகப் பல்வேறுபட்ட வழிமுறைகளை எடுத்திருந்தது.** முதலீட்டாளர்களுக்கு கொடுக்கல்வாங்கல்கள் செலவினத்தை அதிகரிக்கக்கூடிய உற்பத்திச் செயன்முறையொன்றை நிறைவு செய்வதற்கான நேரகாலத்தை இழிவுபடுத்துகின்ற அதேவேளை ஒழுங்குமுறை குறைபாடுகள் மற்றும் நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்புப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதனூடாக தகவல் தொழில்நுட்பத் துறையில் பணி வழங்கலை மேம்படுத்தும் நோக்கில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2019இன் இறுதியிலுள்ளவாறு, குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் ஒப்புதல்களை வழங்குவதற்கான சட்டகமொன்றை வழங்குவதற்கும் ஒப்புதல் செயன்முறையை விரைவாகக் கண்காணிப்பதற்குமாக இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் என்பவற்றிற்கிடையே பதின்மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட செயற்றிட்டங்கள் அவற்றின் ஏற்றுமதி அளவுகளை அதிகரிப்பதற்காக இலங்கை முதலீட்டுச் சபை பல்வேறுபட்ட வழிமுறைகளைத் தொடர்ச்சியாக எடுத்திருந்தது. இது தொடர்பில், முன்னர் உள்நாட்டுச் சந்தையை மாத்திரம் நோக்காகக் கொண்டிருந்த கம்பனிகள் ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழையும் வகையில் இலங்கை முதலீட்டுச் சபை சுங்கத் தீர்வை விலக்களிப்பை வழங்குவதனூடாக அக்கம்பனிகளை ஊக்கப்படுத்தியிருந்தது. இலங்கை முதலீட்டுச் சபை வலயங்களுக்குள் தொழிற்படுகின்ற செயற்றிட்டங்களில் ஏறத்தாழ 5,000 வேலை வாய்ப்பு வெற்றிடங்கள் காணப்படுகின்றதுடன் பொருத்தமான விண்ணப்பதாரர்களின் பற்றாக்குறையின் காரணமாக இவ்வெற்றிடங்களை நிரப்புவதில் இக்கம்பனிகளுக்கு கடினமாகவுள்ளது. ஆகையால், இலங்கை முதலீட்டுச் சபை செயற்றிட்டங்களில் காணப்படும் வேலை வாய்ப்புக்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நாடு முழுவதும் இலங்கை முதலீட்டுச் சபை தொடர்பான அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் பல்வேறுபட்ட தொழிற்சந்தை மற்றும் தொழில் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது. உள்நாட்டு தகவல் தொழில்நுட்பம் கைத்தொழிலுக்குத் தேவையான முதலீட்டை ஊக்கப்படுத்துவதற்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளை வழங்கும் ஏதேனும் கம்பனிகளினால் சம்பாதிக்கப்படும் வருமானம் மற்றும் இலாபம் என்பவற்றிற்கு 2020 சனவரி 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பூச்சிய கூட்டுத்தாபன வருமான வரியானது வழங்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபன வருமான வரியின் குறைப்பானது உலகளாவிய ரீதியில் பிரபல்யமாகக் காணப்படும் தகவல் தொழில்நுட்பக் கம்பனிகள் இலங்கையில் முதலீட்டை மேற்கொள்வதற்கு ஊக்கமளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, இலங்கை முதலீட்டுச் சபை பன்னாட்டுச் சந்தைகளில் வளர்ந்துவரும் அதிகரித்த கேள்வியைப் பூர்த்திசெய்யும் வகையில் பல்வேறு வகையான பணிகளை வழங்கியிருந்த அதேவேளை டயர் மற்றும் அலுமினிய உணவு கொள்கலன்கள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட கைத்தொழில் உற்பத்திகளைத் தயாரிப்பதற்காக இலங்கையில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக பல தனியார் கம்பனிகளுடன் பல உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டிருந்தது. பிராந்திய மட்டங்களில் பொதியிடல், பெயர்ச்சீட்டிடல், ஏற்றுமதி விலையிடல் மற்றும் செலவிடல் தொடர்பில் பல கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் வர்த்தக வசதிகளை வழங்குதல் என்பவற்றினூடாக ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட புதிய சிறிய மற்றும் நடுத்தரளவான வியாபாரத் தொழில்முயற்சிகளினை அடையாளங் காண்பதற்கும் அவற்றை

ஊக்குவிப்பதற்குமாக ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபையானது பல நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது. உலகளாவிய நிரம்பல் சங்கிலியுடன் உள்நாட்டு மின்சார மற்றும் மின்னணு தயாரிப்புக் கைத்தொழிலை இணைக்கும் நோக்குடன் மின்சார மற்றும் மின்னணு கருவிகளை இலங்கைக்கு கவருவதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை என்பவற்றால் பல்தேசிய கூட்டுத்தாபன வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2019இல் அமைச்சர்களின் அமைச்சரவை ஒப்புதலை வழங்கியிருந்தது. இந் நிகழ்ச்சித்திட்டம் 2022ஆம் ஆண்டளவில் இலங்கையில் 3 தொடக்கம் 5 வரையான பல்தேசிய மின்சார மற்றும் மின்னணு தயாரிப்புக் கம்பனிகளை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டம் வேலை வாய்ப்புக்களை உருவாக்குகின்ற அதேவேளை, உள்நாட்டு மின்சாதனக் கருவிகள் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்க் கவருமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**2019இல் கைத்தொழில் துறையில் சிறிய மற்றும் நடுத்தரளவான வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் பல கடன் நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.** உயர்ந்தளவான வட்டி வீதங்கள் மற்றும் பிணையங்கள் இல்லாமை என்பன நாட்டின் சிறிய மற்றும் நடுத்தரளவான தொழில்முயற்சிகளின் வளர்ச்சியைத் தடுக்கின்ற முக்கியமான பிரச்சினைகளாகும். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சிறிய மற்றும் நடுத்தரளவான வியாபார தொழில்முயற்சிகளுக்கு சலுகை வட்டி வீதங்களுடன் கடன் திட்டமொன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்தியிருந்ததுடன் பிணையங்கள் பிரச்சினையைத் தணிப்பதற்காக கொடுகடன் உத்தரவாதங்களையும் வழங்கியிருந்தது. ஜய இசுரு மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவான வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கான ஒதுக்குத் தொகை கடன் திட்டம் என்பவற்றின் கீழ் சிறிய மற்றும் நடுத்தரளவான வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கு ரூ.26.5 பில்லியன் கொடுகடன் வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, 2019இல் சிறிய மற்றும் நடுத்தரளவான வியாபார தொழில்முயற்சிகளுக்கு ஒதுக்குத்தொகை கடன் திட்டத்தின் கீழ் 964 கடன்களுக்காக ரூ.7.4 பில்லியன் வழங்கப்பட்டிருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் காரணமாக கைத்தொழில் நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டமையினால் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சானது கைத்தொழில் துறைக்குள் காணப்படும் சிறிய மற்றும் நடுத்தரளவான வியாபார தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக தொழிற்பாட்டு மூலதனக் கடன் மற்றும் சங்சாரக்க பொட்டோ போன்ற பெயரில் இரண்டு கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருந்தது. மேலும், என்டர்பிரைஸ் சிறிலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2019இன் இறுதியிலுள்ளவாறு 44,841 கடன்கள் வழங்கப்பட்டதுடன் ரூ.84.9 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

## மின்வலு, நீர் மற்றும் கழிவுகளைச் சுத்திகரித்தல்


**பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் மின்வலு, நீர் மற்றும் கழிவுகளைச் சுத்திகரித்தல் நடவடிக்கைகள் 2018இன் 6.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 4.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு மின்வலு வகையின் செயலாற்றமே பெருமளவிற்கு உதவியாக அமைந்தது.** இதன்படி, மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டிகளின் வழங்கல் நடவடிக்கைகள் 2019இல் 4.0 சதவீதத்தினால் விரிவடைந்தன. இது 2019இல் 5.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. மின்வலு உருவாக்க தரவுகளைப் பரிசீலனையில் கொள்கையில் மொத்த மின்வலு உருவாக்கம் 2018இன் 4.8 சதவீதம் கொண்ட அதன் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வாண்டுப்பகுதியில் மொத்த உருவாக்க கலப்பினைப் பரிசீலனையில் கொள்கையில் நீர்மின்வலு உருவாக்கம் 2018இன் 59.4 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 24.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு நீரேந்தும் பிரதேசங்களில், குறிப்பாக ஆண்டின் முதலரைப்பகுதியில் காணப்பட்ட குறைந்த மழைவீழ்ச்சியே காரணமாகும். அதற்கிணங்க, 2018இல் முறையே 28.1 சதவீதத்தினாலும் 6.7 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்த எரிபொருள் எண்ணெய் மற்றும் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கங்கள், இவ்வாண்டுப்பகுதியில் முறையே 38.2 சதவீதத்தினாலும் 12.5 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தன. இவ்வகையில் காணப்பட்ட ஏனைய துணை பொருளாதார நடவடிக்கைகளைப் பரிசீலனையில் கொள்கையில் பெறுமதிகூட்டப்பட்ட நீர்ச் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றம் வழங்கல் நடவடிக்கைகள் 2918இன் 5.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 5.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இது தொடர்பில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையினால் பங்கீடு செய்யப்பட்ட நீரின் அலகுகள் 2019இல் 5.0 சதவீதத்தினால் அதிகரித்து 2018இல் பதிவுசெய்யப்பட்ட 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் நீர்வழங்கல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தினைப் பிரதிபலித்தது. மேலும், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் நுகர்வோர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 4.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 4.7 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை பெறுமதிகூட்டப்பட்ட வடிகால்கள், கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 6.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 7.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

## கட்டடவாக்கம்

**இவ்வாண்டுப்பகுதியில் மீண்டும் உத்வேகமடைந்த கட்டடவாக்க நடவடிக்கைகள் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2018இன் 2.5 சதவீதம் கொண்ட சுருக்கத்திற்கெதிராக 2019இல் 4.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு பாரியளவிலான கட்டடவாக்கச் செயற்றிட்டங்கள் விரைவாக முடிக்கப்பட்டமையே காரணமாகும்.** தென்பகுதி விரைவுப்பாதை மற்றும் வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை என்பனவற்றன் விரிவாக்கம் மற்றும் சனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக மத்திய விரைவுப்பாதைச் செயற்றிட்டத்தின் விரைந்த செயற்பாடுகள் அதேபோன்று கூட்டுறுதி தொடர்மாடிமனை அபிவிருத்திச் செயற்றிட்டங்களுடன் தொடர்பான கட்டடவாக்க வேலைகள் என்பன இவ்வாண்டுப்பகுதியில் கட்டடவாக்க நடவடிக்கைகள் விரிவடைவதற்கு பெருமளவிற்குப் பங்களித்தன. கட்டடவாக்க நடவடிக்கைகளில் காணப்பட்ட மீள் உத்வேகம் நாட்டின் மொத்த சீமெந்து கிடைப்பனவு 2018இல் காணப்பட்ட 6.3 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2019இல் 2.1 சதவீதத்தினால் அதிகரித்தமையின் மூலம் பிரதிபலிக்கப்பட்டது. இதன்படி, சீமெந்தின் உள்நாட்டு உற்பத்தி 2018இல் பதிவுசெய்யப்பட்ட 0.8 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 19.5 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதமொன்றில் வளர்ச்சியடைந்த வேளையில் சீமெந்து இறக்குமதிகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 9.9 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 7.6 சதவீதத்தினால் தொடர்ந்தும் சுருக்கமடைந்தது. மேலும், கட்டடவாக்க மூலப்பொருள் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2018இல் காணப்பட்ட 3.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கெதிராக இவ்வாண்டுப்பகுதியில் 1.5 சதவீதத்தினால் அதிகரித்து இவ்வாண்டுப்பகுதியில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் இடம்பெற்ற நேர்க்கணியமான அபிவிருத்திகளை எடுத்துக்காட்டியது. அதேவேளை, கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2018 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 14.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019 திசெம்பர் இறுதியில் 5.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியை பதிவுசெய்தது. மேலும், தனிப்பட்ட வீடமைப்பு கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் 2018 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 13.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் திசெம்பர் இறுதியில் 5.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. எனினும், இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட வியாபார அளவீடுகளினால் எடுத்துக்காட்டப்பட்டவாறான பொருளாதாரச் சிந்தனைகளின்படி, செயற்றிட்டங்களுடன் தொடர்பான அரசாங்கத்திற்கான கொடுப்பனவுகளில் காணப்படும் நீண்ட தாமதங்கள், கட்டடவாக்க நிறுவனங்களுக்கான நிதியியல் தடைகளைப் பெருமளவிற்கு உருவாக்குவதும் கட்டடவாக்க கைத்தொழிலின் வலுவான வளர்ச்சி உத்வேகத்திற்கு தடையாக காணப்படுகின்றமையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பதிலிறுத்தவர்கள் பெரும்பாலான நிறுவனங்கள் நிதியியல் தடைகளின் காரணமாக ஆண்டு முழுவதும் தாக்குப்பிடிப்பதற்கு போராட வேண்டியிருந்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

வரைபடம் 2.9

சீமெந்து கிடைப்பனவு





*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

## பணிகள்

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலிலிருந்தான மோசமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2019இல் பணிகள் நடவடிக்கைகள் 2018இன் 4.6 சதவீதத்திலிருந்து 2.3 சதவீதத்தினால் மெதுவடைந்து ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளிலேயே மிகக் குறைந்த வளர்ச்சியைப் பதிவுசெய்தன.** தாக்குதலின் தாக்கம் முக்கியமாக தங்குமிட வசதிகள், போக்குவரத்து, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய தனியாள் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய சுற்றுலாவுடன் தொடர்பான பணிகளுக்கு முக்கியமாக விரிவடைந்து சென்றது.

வரைபடம் 2.10

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (அ)




(அ) கொ.மு.சுட்டெண்ணானது புலனுணர்வு அளவீட்டு அடிப்படையிலான கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் விதத்தில் அமைந்தது ஆகும். இந்த வியாபித்தல் சுட்டெண்ணானது 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியினை கொண்டிருப்பதோடு பொதுவான நடுநிலையான 50 இற்கு மேலான சுட்டெண் பெறுமதியானது பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு விரிவாக்கத்தைக் குறிக்கும் வேளையில் 50 இற்கு கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது

*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

2

2

இதன்படி, தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானப் பணி நடவடிக்கைகள் இவ்வாண்டுப்பகுதியில் சுருக்கமடைந்து பணிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை தளர்வுறச் செய்தவேளையில் பணிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளர்களாகக் காணப்படும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள், ஏனைய தனியாள் பணிகள் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவாக வளர்ச்சியடைந்தன. அதேவேளையில், நிதியியல் பணிகள், உண்மைச் சொத்து, பொது நிருவாகம், தொலைத்தொடர்பூட்டல், காப்புறுதி, கல்வி, தொழில்சார் நிபுணத்துவப் பணிகள், மானிட நலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்ட ஆலோசனைகள் மற்றும் அதனுடன் தொடர்பான பணிகள் இவ்வாண்டுப்பகுதியில் விரிவடைந்தன. மாதாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்படும் பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், அளவீடு தொடங்கியதன் பின்னர் பணிகள் நடவடிக்கைகள் மீதான உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலிலிருந்து தோன்றிய மோசமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2019 மே மாசத்தில் குறைந்தளவு சுருக்கமொன்றினை எடுத்துக்காட்டியது. எனினும், பணிகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் வரலாற்று ரீதியான பின்னடைவிற்குப் பின்னர் யூன் மாதத்திலிருந்து விரிவாக்கமொன்றினை எடுத்துக்காட்டி பணிகள் நடவடிக்கைகள் படிப்படியாக புத்தெழுச்சியடைந்து வருவதனை எடுத்துக்காட்டின. மறுபுறத்தில் பணிகள் பிரிவுடன் தொடர்புபட்ட வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் கேள்வி துணைச் சுட்டெண் ஆண்டின் முதல் மூன்று காலாண்டு பகுதிகளிலும் எதிர்க்கணியமான வீச்சொன்றிற்குள் காணப்பட்டதன் மூலம் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினைத் தொடர்ந்து பணிகள் நடவடிக்கைகளின் செயலாற்றம் மந்தமடைந்தமையினை எடுத்துக்காட்டியது.

## மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

**பெறுமதிகூட்டப்பட்ட மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் 2019இல் 3.0 சதவீதத்தினால் விரிவடைந்ததெனினும் 2018இன் 4.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்தில் காணப்பட்டமைக்கு பொருளாதாரத்தின் ஒட்டுமொத்தக் கேள்வியிலும் இறக்குமதி வர்த்தக நடவடிக்கைகளிலும் காணப்பட்ட மெதுவடைவும் அதேபோன்று வர்த்தக நடவடிக்கைகளுடன் இணைக்கப்பட்டிருந்த உள்நாட்டுப் வேளாண்மை நடவடிக்கைகளின் மந்தமான வளர்ச்சியும் காரணங்களாக அமைந்திருந்தன.** உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்தக் கேள்வியை குறிப்பாக ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் மிக மோசமாகப் பாதித்திருந்தது. மேலும், இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கைகள் இறக்குமதி வர்த்தக நடவடிக்கைகளைப் பாதித்தன. வர்த்தகச் சுட்டெண்களின் அசைவினைப் பரிசீலனையில் கொண்டு மொத்த இறக்குமதி அளவுச் சுட்டெண் 2018இன் 1.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பிலிருந்து குறைவடைந்து 2019இல் 5.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இறக்குமதி அளவுச் சுட்டெண்ணிற்குள் நுகர்வோர் மற்றும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளின் அளவுகள் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்த வேளையில் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிகளின் அளவுகள் மீட்சியைப் பதிவுசெய்தன. இதற்கமைய, 2018இல் 9.6 சதவீதத்தினால் அதிகரித்த நுகர்வுப்பொருள் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2019இல் 20.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஊர்தி இறக்குமதிகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியும் உணவு மற்றும் குடிபான இறக்குமதிகளில் காணப்பட்ட பின்னடைவும் முக்கிய காரணங்களாக அமைந்தன. மேலும், 2019இல் இடைநிலைப்பொருட்கள் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2018இன் 2.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக 3.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், முதலீட்டுப்பொருள் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2018இன் 0.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியிலிருந்து மீட்சியடைந்து 2019இல் 1.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2019இல் மொத்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 7.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2018இன் 0.5 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் வேளாண்மை ஏற்றுமதிகளில் காணப்பட்ட மீட்சியுடன் கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட உயர்வும் இணைந்தமையே இதற்குப் பெருமளவிற்கு உதவியாக அமைந்தது.

## போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்

**களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள் உட்பட பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து பெறுமதிகூட்டல் நியதிகளில் 2018இன் 2.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 1.4 சதவீதம் கொண்ட மெதுவான வீதமொன்றில் வளர்ச்சியடைந்தமைக்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினை உடனடுத்து எடுக்கப்பட்ட குறிப்பிட்ட பாதுகாப்பு வழிமுறைகளின் காரணமாக உள்ளூர் சமூகத்தினரின் நகர்வுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அதேபோன்று சுற்றுலாவுடன் தொடர்பான நடவடிக்கைகளில் காணப்பட்ட பின்னடைவுகளின் கசியும் தாக்கங்களும் காரணங்களாக விளங்கின.** போக்குவரத்துடன் தொடர்பான பெரும்பாலான குறிகாட்டிகள் ஆண்டு முழுவதும் குறைவடைந்த செயலாற்றத்தினை எடுத்துக்காட்டி போக்குவரத்துப் பணிகளில் காணப்பட்ட மிதமான தன்மைகளைப் பிரதிபலித்தது. இதற்கமைய, போக்குவரத்துப் பணி வழங்குவோரினால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கி.மீற்றர்கள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. தரைவழி போக்குவரத்தினைப் பரிசீலனையில் கொள்கையில் இலங்கை போக்குவரத்துச் சபையினாலும் தனியார் துறை


2

### சிறப்புக்குறிப்பு 5
### ஜிக்(GIG) பொருளாதாரத்தின் தோற்றமும் அதன் சவால்களும்

ஜிக் பொருளாதாரம்[1] என்ற பதம் தொழில்வழங்குநருக்கும் ஊழியர்களுக்குமிடையில் காணப்படும் பாரம்பரிய தொழில் ஏற்பாடுகளுக்கு மாறாக தொழிற் சந்தையில் சுயமான தொழிலாளர்கள் அல்லது சுயாதீனமான ஒப்பந்தக்காரர்கள் ('ஜிக் வேலையாட்கள்') பரந்தளவிற்குக் காணப்படுகின்ற பொருளாதாரமொன்றினைப் பரந்தளவிற்குக் குறிக்கிறது (வரைபடம் சி.கு. 1). ஜிக் நடவடிக்கைகளுக்கான மிகப் பொதுவான உதாரணங்கள் பயணங்களைப் பகிர்ந்து[2] கொள்ளுதல், கணனிவழியில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய விதத்திலான தங்குமிட வசதிகள்[3] என்பனவற்றை உள்ளடக்குகின்றன. அதனை இறுதியாக சமமான தங்குமிட வசதிகளை வழங்குகின்றவற்றிற்கும் உலகளாவிய கணனி வழியிலான சுயாதீன நியமமான தளங்களுக்கும் கணனிவழியில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய விதத்தில் விரிவாக்க முடியும். எனினும், ஜிக் பொருளாதாரம் தொழிலாளர்களுக்கான புதிய வழிகளைத் திறந்துவிட்டமையின் மூலம் உலகளாவியப் பொருளாதார வளர்ச்சியின் மீது செல்வாக்கினைச் செலுத்தியது மட்டுமன்றி, ஒழுங்குமுறைப்படுத்தல்கள், சூழல், வளர்ச்சி மற்றும் தொழில்நிலை போன்ற பேரண்டப் பொருளாதாரத் தரவுகளை மதிப்பிடல் ஆகிய நியதிகளிலும் சவால்களைத் தோற்றுவிக்கிறது.

ஜிக் பொருளாதாரம், நெகிழ்ச்சித் தன்மையினை வழங்குவதன் மூலமும் வாடிக்கையாளருக்கும் தொழிலாளர்களுக்குமிடையேயான சமச்சீரற்ற தகவல்களைக் குறைப்பதன் மூலமும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுவதனூடாக தற்போதுள்ள பணி

வரைபடம் சி.கு. 5.1
ஜிக் எதிர் பாரம்பரியமான தொழில் ஏற்பாடுகள்




1 ஜிக் பொருளாதாரமானது 'தளப் பொருளாதாரம்' அல்லது 'பகிர்வுப் பொருளாதாரம்' அல்லது ' கேள்வி அடிப்படையிலான பொருளாதாரம்' எனவும் குறிப்பிடப்படுகிறது

2 பயன்படுத்துனர் தேவையின் அடிப்படையில் மோட்டார் கார் அல்லது பார வண்டி போன்ற ஊர்திகளைப் பெறுவதற்கான வழிகளை வழங்குதல்

3 தனிப்பட்டவர்கள், அறைகள் அல்லது முழு வீட்டினையும்/ தொடர்மாடி மனையினையும் இன்னொருவருக்கு வழங்குதல் போன்ற தங்குமிட வசதிகளை வழங்குதல்

விநியோக மார்க்கங்களுக்கு புதிய வடிவமைப்பொன்றினைத் தோற்றுவிக்கின்றது. வாடிக்கையாளர்கள் அவர்களது சொந்த அலுவலர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக அவசியமானவிடத்து ஜிக் தொழிலாளர்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதன் மூலம் அவர்களது சம்பளப் பட்டியலை நெகிழ்ச்சித் தன்மையுடையதாக்கலாம். வேலையாட்களும் வரையறைகளற்ற வருவாய்களுடன் கூடிய வேலை நேரங்களின் நெகிழ்ச்சித்தன்மை, சுலபமான சமச்சீரான வாழ்க்கைமுறை என்பனவற்றினை ஜிக் ஒப்பந்தங்கள் வழங்குவதன் காரணமாக அதற்கு முன்னுரிமையளிக்கின்றனர் (வரைபடம் சி.கு. 2). மேலும், டிஜிட்டல் தளங்கள், குறிப்பாக, செல்லிடத் தொலைபேசிச் செயலி பெரும்பாலும் உடனடியாகவே வேலையாட்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே காத்திரமான பொருத்தப்பாடொன்றினை ஏற்படுத்துவதன் மூலம் வேலையாட்கள் உத்தம அளவிலான பணிகளைப் பொறுப்பேற்கவும் மிகப் போட்டித்தன்மை வாய்ந்த வீதங்களில் சேவைகளை வழங்கவும் அவற்றினை அனுமதிக்கிறது. மேலும், டிஜிட்டல் தளங்கள் தற்பொழுது கிரமமான தொழில்களிலுள்ள வேலையாட்கள் பகுதி நேர அடிப்படையில் மேலதிகத் தொழில்களைப் பார்ப்பதற்கான வசதிகளையும் வழங்குகிறது.

அதிகரித்து வருகின்ற பிரபல்யத்தன்மைக்கு மத்தியிலும் ஜிக் பொருளாதாரம் வாய்ப்புக்களை வழங்குவது மட்டுமன்றி, ஒழுங்குமுறைப்படுத்தல் சூழல், அரசிறைச் சேகரிப்புக்கள் மற்றும் குறிப்பாக, அலுவல்சார் புள்ளிவிபரங்களைத் தொகுத்தல் என்பன தொடர்பில் சவால்களைத் தோற்றுவித்து வருகிறது.

அமைப்பியல் முறையிலுள்ள நிறுவனங்களில் தொழில்புரியும் ஆட்களை முக்கியமாக இலக்காகக் கொண்டு தொழிலாளர் உரிமைகளையும் நலன்புரிகளையும் பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்ட தற்போதுள்ள ஒழுங்குவிதிகள் விமர்சனத்திற்குள்ளாகி வருவதுடன் ஜிக் வேலையாட்கள் அத்தகைய ஏற்பாடுகளின் மூலமாக போதுமானளவிற்கு உள்ளடக்கப்படாமல் இருக்கலாம் என்பதனால் ஜிக் பொருளாதாரத்தின் பின்னணியில் இதனை மீளாய்வு செய்யும் தேவை காணப்படுகின்றது. இதேபோன்று, ஜிக் தளங்கள் குறிப்பிட்ட நாடொன்றினைத் தளமாகக் கொண்டிருந்த போதும், இது உலகளாவிய ரீதியில் தொழிற்படுவதனால் அனுசரனை வழங்கும் நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் சூழ்நிலையின் கீழும் மற்றும் உள்நாட்டு வியாபாரப் பதிவு இல்லாமல், வரி விதிப்பு முறைமையினையும் கட்டுப்படுத்துவது கடினமானதாகும். மாறாக, உள்நாட்டுத் தளங்கள் ஒழுங்குமுறைப்படுத்தலின் நுணுக்கமான பார்வைக்குட்பட்டிருப்பதனால் உள்நாட்டு வரிகளைச் செலுத்த அது பொறுப்புடையதாக இருக்கும். ஒழுங்குவிதிகளைப் பிரயோகிப்பதில் காணப்படும் அத்தகைய வேறுபாடுகள் உள்நாட்டுத் தொழிற்பாட்டாளர்களுக்கு தொழில்புரிவதற்குச் சமமான வாய்ப்புக்களை வழங்குவதனை உறுதிப்படுத்தாது.

ஜிக் பொருளாதாரத்தின் தோற்றம், பொருளாதார நடவடிக்கைகளைப் பாரம்பரியமாக அளவிடுகின்ற முறையின் மீதும் தொழிற்படைப் புள்ளிவிபரங்களை மதிப்பிடுவதிலும் அநேக சவால்களைத் தோற்றுவித்திருக்கிறது. தொழிலாளர் சந்தை அளவீடு ஜிக் பொருளாதாரத்தில் மேலதிக தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்டளவிலான தகவல்களை வழங்குவதனால் ஜிக் வேலையாட்கள்

வரைபடம் சி.கு. 5.2
ஜிக் பொருளாதாரத்தில் பணியாற்றுவதற்கான காரணங்கள்




தொழிற்சந்தைப் புள்ளிவிபரங்களில் சரியான முறையில் கணக்கிடப்படுவதில்லை (பீன் 2016). அத்தகைய தரவுகள் அளவீடுகளினூடாகச் சேகரிக்கப்பட்டாலும் கூட, ஜிக் வேலைகள் பிரதான தொழில்களுக்கு[4] மேலதிகமானவையாக இருக்கும் வேளையில், ஜிக்கின் இயல்பானதன்மை காரணமாக தொழில் ஒழுங்குகள் இரட்டை முறை (அல்லது பல் பெருக்கம்) தவறுகளை உருவாக்கக் கூடும்.

ஜிக் பொருளாதார விடயங்கள் போதுமானளவில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக, பொருளாதார நடவடிக்கைகள் குறைத்து மதிப்பிடப்படக்கூடும் என்பதனால் தேசிய கணக்குகளைத் தொகுப்போரும் கடுமையான விமர்சனத்திற்குள்ளாகின்றனர். உற்பத்திப் பக்கத்திலிருந்து நோக்குகையில், தேசிய கணக்குகளின் மதிப்பீடுகள் குறைத்து மதிப்பிடப்படுவதற்கு ஜிக் பொருளாதார நடவடிக்கைகளின் அளவு மீதான தரவுகள் போதாமல் இருப்பது காரணமாக இருக்கக்கூடும். ஜிக் பொருளாதாரத்தின் கீழ் மூலவளங்களின் மேம்பட்ட பயன்பாட்டினால் உருவாக்கப்பட்ட மேலதிக வருமானம் அலுவல்சார் மதிப்பீடுகளில் முழுமையாகக் கணக்கிடப்படாமலும் போயிருக்கலாம். உதாரணமாக, வீட்டின் அறையொன்றினைச் சுற்றுலாப் பயணிக்கு வாடகைக்கு வழங்குதல் அல்லது சொந்த ஊர்தியை டிஜிட்டல் தளமூடாக வாடகைக்கு வழங்குவதனால் கிடைக்கும் பொருளாதாரத்திற்கான மேலதிகப் பெறுமானம் தொடர்பில் அத்தகைய நடவடிக்கைகளிலிருந்தான கூட்டப்பட்ட பெறுமானத்தினைக் கணிப்பதற்குப் பொருத்தமான மூலங்களில்லை. மேலும், கூட்டப்பட்ட உண்மைப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்கு சுருக்கியைப் பயன்படுத்துவது தேசிய வருமானக் கணக்கீட்டில் பொதுவான நடைமுறையாகும். புள்ளிவிபரவியலாளர்கள் பெயரளவு பெறுமதிகளிலிருந்து உண்மைப் பெறுமதியினைப் பெறுவதற்கு விலைச் சுட்டெண்களை பயன்படுத்துகின்றனர். எனினும், ஜிக் பொருளாதாரத் தளங்களில் முன்வைக்கப்படும் விலைகள் வேறெங்கும் உள்ள விலைகளிலும் பார்க்க குறைவானதாக இருப்பதுடன் அவை அலுவல்சார் விலைச்சுட்டெண்களில் சரியான முறையில் பிரதிபலிக்காமலும் போய்விடக்கூடும் (பீன், 2016). இது விலைச் சுட்டெண்களின் மிகையான மதிப்பீடுகளுக்கு வழிவகுக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில், உண்மை நியதிகளில் மதிப்பிடப்பட்ட பொருளாதார நடவடிக்கையின் கூட்டப்பட்ட பெறுமதியினை அத்தகைய விலைச் சுருக்கிக்குப் பயன்படுத்துவது குறைத்து மதிப்பிடுவதாக அமையக்கூடும். மேலும், ஜிக் பொருளாதாரத்தில் பகிர்ந்து கொள்ளும் பணிகள் தேசிய கணக்குகளின் செலவு வகைப்படுத்தல்களிலும் சவால்களைத் தோற்றுவிக்கும். உதாரணமாக, தனிப்பட்ட பயன்பாட்டிற்காக ஊர்தியொன்றைக் கொள்வனவு செய்வது வீட்டுத்துறையினது நுகர்வுச் செலவினமாகக் கருதப்படுகின்றவிடத்து, வாடகை நோக்கத்திற்காக ஊர்தியைக் கொள்வனவு செய்வது முதலீட்டு நோக்கமாகக் கருதப்படும். எனினும், தனிப்பட்ட பயன்பாட்டாளருக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ஊர்தியை வருவாயினை உருவாக்குவதற்காக, ஊர்தியைப் பகிர்ந்து கொள்ளும் பணிக்காக பயன்படுத்தும் போது, முதலீடு மற்றும் நுகர்வு தொடர்பான விகிதாசாரங்களைக் கொண்ட முறையில் மதிப்பிட்டுக் கொள்வது இடர்ப்பாடானதாகும். இது முதலீட்டுச் செலவினத்தின் குறை மதிப்பீட்டிற்கு வழிவகுக்கிறது (பீன், 2016).

ஜிக் பொருளாதாரமொன்றில் பொருளாதார நடவடிக்கைகளின் துல்லியமான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு பாரம்பரிய மூலங்களையும் முறைகளையும் பயன்படுத்துவது மோசமான சாதனங்களாக இருப்பதனால் ஜிக் பொருளாதாரத்தின்

4 ஷைனுடீன் (2019) ஆல் மேற்கோள் காட்டப்பட்ட படி, கட்ஷ் மற்றும் குறூகர் (2019) 2005-2015இற்கு இடையில் ஐக்கிய அமெரிக்காவில் ஜிக் தொழில்கள் 5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததாக 2015இல் மதிப்பிட்டுள்ளனர். இது பின்னர் 1-2 சதவீதமெனத் திருத்தப்பட்டது. முன்னர் இது மிகையாக மதிப்பிடப்பட்டதற்கான காரணங்களிலொன்றாக அளவீட்டின் போது பல்வேறு தொழில்நிலைகளும் போதுமான நிலையில் அங்கீகரிக்கப்படாமல் போனமையே காரணமாகும்.

தாக்கத்தினையும் பங்களிப்பினையும் அறிந்துகொள்வதற்கு புள்ளிவிபரவியலாளர்களும் கொள்கை வகுப்போரும் சிறந்த தரவு மூலங்களையும் குறிகாட்டிகளையும் பெற்றுக்கொள்வதற்கு தொடர்ந்தும் பரிசோதனைகளில் ஈடுபடல் வேண்டும். இப் பிரச்சினையினைக் கட்டுப்படுத்தும் விதத்தில் கனடா போன்ற முன்னேற்றங்கண்ட நாடுகள் ஜிக் வருமானத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு 'சுயவேலை ஊழியர்களின் வரி வருமானம்' பயன்படுத்துவதில் குறிப்பிட்ட அளவிற்கு வெற்றிகண்டுள்ளன (ஜோன் மற்றும் ஏனையோர், 2019). மேலும், பல்வேறு தொழில்நிலை வருமானத்தினை உள்ளடக்கத்தக்க விதத்தில் நன்கு கட்டமைக்கப்பட்ட வீட்டுத்துறை தொடர்பான அளவீடு, ஜிக் வேலைகளிலிருந்து ஈட்டப்படும் வருமானத்தினைப் பெருமளவிற்கு உள்ளடக்கிக் கொள்ளக் கூடியதாயிருக்கும். மேலும், குறிப்பாக ஒரு சில தளங்கள் சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் போது ஜிக் வேலையாட்களுக்கு வசதியளிக்கும் டிஜிட்டல் தளம் இன்றியமையாத மூலமாக விளங்க முடியும்.

இலங்கையில், தளங்களை அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்துப் பகிர்வுப் பணிகள் மற்றும் தங்குமிட வசதிப் பணிகள் போன்ற சில ஜிக் பொருளாதார நடவடிக்கைகள் அண்மைய ஆண்டுகளில் தோற்றம்பெற்று வருகின்றன. மேல் மாகாணத்திலும் ஏனைய நகர்ப்புறங்கள் மற்றும் ஓரளவு நகர்ப்புறங்களிலும் வாழுகின்ற ஆட்களில் கணிசமான எண்ணிக்கையினர் வீதியோரங்களில் காத்திருப்பதற்குப் பதிலாக வாடகை ஊர்திகளை அல்லது பார ஊர்திகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள செல்லிடத் தொலைபேசிச் செயலிகளைப் பயன்படுத்துகின்றனர். காலப்போக்கில் ஜிக் பொருளாதாரம் படிப்படியாக கிராமிய சமூகத்தினரையும் சென்றடையும். பண்ணைப் பொறிகளைப் பகிர்ந்து கொள்வதனைக் கூட உள்ளடக்கும் விதத்தில் ஜிக் பொருளாதார நடவடிக்கை விரிவடைவதற்கான உள்ளார்ந்த வளம் அங்கே காணப்படுகின்றது. அலுவல்சார் புள்ளிவிபரங்களில் ஜிக் நடவடிக்கைகளை உள்ளடக்கிக் கொள்வதன் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு, இலங்கையில் அலுவல்சார் புள்ளிவிபரங்களைக் கையாளுகின்ற அதிகாரிகள் தற்பொழுது ஜிக் பொருளாதாரத்தினை மதிப்பிடுவதற்கான மாற்று முறைகளைக் கண்டறியும் ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், நம்பகமான தரவுகளின் கிடைப்பனவு ஜிக் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தினையும் இலங்கைப் பொருளாதாரத்தில் அதன் தாக்கத்தினையும் புரிந்துகொள்வதற்கு பெரும் தடையாக தொடர்ந்துமிருக்கிறது. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஜிக் பொருளாதார நடவடிக்கை அபிவிருத்தியடைந்த நாடுகளில் அதன் நடவடிக்கைகளிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாக இருக்கின்ற போதும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட உலகில் ஜிக் பொருளாதாரம் விரைந்து வளர்ச்சியடைந்துவரும் துறையாக இருப்பதனால் அதனைக் கண்காணிப்பது நிச்சயமாக நன்மை பயப்பதாக இருக்கும்.

**உசாத்துணைகள்**


1 Bean, C. (2016) Independent review of UK economic statistics. [online]. Available at: https://assets.publishing.service.gov.uk/government/uploads/system/uploads/attachment_data/file/507081/2904936_Bean_Review_Web_Accessible.pdf

2 Jeon, S.H, Liu, H., and Ostrovsky, Y. (2019) Measuring the gig economy in Canada using administrative data. [online] Available at: https://www150.statcan.gc.ca/n1/pub/11f0019m/11f0019m2019025-eng.htm


3 Schwellnus, C., Geva, C., Pak, M. and Veiel, R. (2019) Gig economy platforms: boon or bane? [online] Available at: https://pdfs.semanticscholar.org/2f82/18abf1aa01928992196673facadec331f187.pdf?_ga=2.167602622.1268294441.1585380972-1588165493.1585380972

4 Zainudeen, A. (2019) Problems with quantifying the gig economy. [online] Available at: https://lirneasia.net/2019/02/problems-with-quantifying-the-gig-economy/


பேருந்து தொழிற்பாட்டாளர்களினாலும் தொழிற்படுத்தப்பட்ட மொத்தப் பயணிகள் கி.மீற்றர்கள் 2018இன் 6.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியிலிருந்து 2019இல் 3.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மேலும், இலங்கை புகையிரதப் பகுதியினால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கி.மீற்றர்கள் 2018இன் 2.9 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக 2019இல் 5.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. வான் போக்குவரத்து நடவடிக்கைகளைப் பரிசீலனையில் கொள்ளும் பொழுது சிறிலங்கன் எயார்லையின்சின் மூலம் பயணிக்கப்பட்ட மொத்த பயணிகள் கி.மீற்றர்கள் 2018இன் 14.5 சதவீதம் கொண்ட அதன் வளர்ச்சிக்கு மாறாக 2019இல் 4.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட பின்னடைவுகளின் தாக்கமே முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், சிறிலங்கன் எயார்லையின்சினால் மேற்கொள்ளப்பட்ட சரக்குத் தொன் கி.மீற்றர்களும் 2018இன் 7.1 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக 2019இல் 6.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. அதேநேரம், நீர்வழிப் போக்குவரத்துடன் தொடர்பான நடவடிக்கைகளும் இவ்வாண்டுப்பகுதியில் மெதுவான போக்கொன்றினை எடுத்துக்காட்டியது. இதன்படி, கொள்கலன் போக்குவரத்து (20 அடிக்குச் சமனான அலகுகள்) மற்றும் இலங்கை துறைமுகங்களினால் கையாளப்படும் சரக்குகள் என்பன 2018இல் பதிவுசெய்யப்பட்ட 13.5 சதவீதம் மற்றும் 11.8 சதவீதம் கொண்ட தொடர்பான உயர் வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2019இல் முறையே 2.6 சதவீதம் மற்றும் 1.8 சதவீதம் கொண்ட மெதுவான வீதங்களினால் மாத்திரம் வளர்ச்சியடைந்தன. அதேவேளை, அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகளின் கூட்டப்பட்ட பெறுமதி 2018இல் பதிவுசெய்யப்பட்ட 1.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 5.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

2

வரைபடம் 2.11
மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்




*மூலம்* : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

## தங்குமிடம் மற்றும் உணவுப்பணிச் செயற்பாடுகள்

**பெறுமதிகூட்டப்பட்ட தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 5.7 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக 2019இல் 4.6 சதவீதம் கொண்ட சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தமைக்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினை உடனடுத்து சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே காரணமாக அமைந்தது.** 2019இல் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2018இன் 10.3 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கெதிராக 18.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இதே மாதிரியான போக்கினைத் தொடர்ந்து சுற்றுலாவிலிருந்தான வருவாய்களும் 2018இன் 11.6 சதவீத வளர்ச்சியிலிருந்து 2019இல் 17.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து சுற்றுலாக் கைத்தொழில் ஏற்பட்ட பின்னடைவினைப் பிரதிபலித்தது. எனினும், சுற்றுலாவினை ஊக்குவிக்கும் பிரச்சாரங்கள் நடைமுறைக்கிடப்பட்டமை உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் எடுக்கப்பட்ட ஏனைய காத்திரமான வழிமுறைகள் என்பனவற்றினைத் தொடர்ந்து மாதாந்த அடிப்படையில் 2019 யூனின் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் படிப்படியாக மீட்சியடையத் தொடங்கின. மேலும், மொத்த உள்நாட்டுச் செலவினத்தில் காட்டப்பட்டவாறு உணவகங்கள் மற்றும் சுற்றுலாவிடுதிகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2019இல் மெதுவடைந்து தங்குமிட வசதி மற்றும் உணவக வசதிகளுக்கான மந்தமான கேள்வியை எடுத்துக்காட்டின. அதேவேளை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட தரமிடப்பட்ட சுற்றுலா விடுதிகளில் அறைகளில் தங்கும் வீதம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 72.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 57.1 சதவீதத்திற்க கணிசமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

## தகவல் மற்றும் தொடர்பூட்டல்

**தொலைத்தொடர்பூட்டல் பணிகள் அதேபோன்று தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் ஆலோசனைகள் மற்றும் தொடர்பான பணிகளின் விரிவாக்கம் தகவல் மற்றும் தொடர்பூட்டல் நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் வளர்ச்சிக்கு தூண்டுதலளித்ததுடன் 2018இன் 9.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 15.7 சதவீதம் கொண்ட வீதத்தில் காணப்பட்டது.** இதற்கமைய, தொலைத்தொடர்பூட்டல் பணிகள் 2018இன் 10.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 17.2 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தன. தொலைத்தொடர்பூட்டல் பணிகளுடன் தொடர்பான குறிகாட்டிகள் பொருளாதாரத்தில் இப்பணிகளுக்கான அதிகரித்து வருகின்ற கேள்வியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இவ்வாண்டுப்பகுதியில் பரந்த விரிவாக்கமொன்றினை குறித்துக்காட்டின. இதற்கமைய, செல்லிடத் தொலைபேசி வாடிக்கையாளர்கள் அதேபோன்று நிலையாகப் பொருத்தப்பட்ட கம்பிவழி இணைப்புக்கள் அதிகரித்த வேளையில் நிலையான கம்பியற்ற வழி இணைப்புக்களின் வசதிகள் இவ்வாண்டுப்பகுதியில் மீட்சியை எடுத்துக்காட்டின. மேலும், இணையத்தள இணைப்புக்காக வளர்ந்துவரும் கேள்வியும் இவ்வாண்டுப்பகுதியில் நாட்டின் இணையத்தளப் பணிகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. அதேவேளை, தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் ஆலோசனை மற்றும் தொடர்பான நடவடிக்கைகள் 2018இன் 11.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியிலிருந்து மேலும் அதிகரித்து 2019இல் 13.1 சதவீதம் உயர்ந்த வீதத்தினால் வளர்ச்சியடைந்து பொருளாதாரத்தில் தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட பணிகளுக்கான வளர்ந்துவரும் கேள்வியை சமிக்ஞைப்படுத்தின. அதேநேரம், நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைள், கட்புல மற்றும் செவிப்புல தயாரிப்பு நடவடிக்கைகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 10.2 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியுற்று 2019இல் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

## நிதியியல், காப்புறுதி மற்றும் வீடுகளின் உடைமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

**நிதியியல், காப்புறுதி மற்றும் வீடுகளின் உடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டப்பட்ட 2018இன் 9.6 சதவீத கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.5 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் விரிவடைந்தமைக்கு நிதியியல் பணிகள் நடவடிக்கைகளில் காணப்பட்ட கணிசமான மெதுவான வளர்ச்சியே முக்கிய தூண்டுதலாக அமைந்தது.** இதன்படி, நிதியியல் பணி நடவடிக்கைகளும் துணை நிதியியல் பணிகளும் 2018இன் பதிவுசெய்யப்பட்ட 13.4 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.0 சதவீதத்தினால் மாத்திரம் வளர்ச்சியடைந்தன. நிதியியல் பணிகளுடன் தொடர்பான குறிகாட்டிகளும் இவ்வாண்டு முழுவதும் மெதுவான போக்கினைக் கொண்டிருந்தமையினை குறித்துக்காட்டின. இதற்கமைய, வங்கித்தொழில் துறையில் காணப்பட்ட மொத்தக் கடன்களும் முற்பணங்களும் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 19.6 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க

வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 5.6 சதவீதம் கொண்ட ஒப்பீட்டு ரீதியில் மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தன. அதேவேளையில், வங்கியல்லா நிதியியல் நிறுவங்களிலுள்ள மொத்தக் கடன்களும் முற்பணங்களும் 2018இன் 8.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியிலிருந்து இவ்வாண்டுப்பகுதியில் 0.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. கடன்கள் மற்றும் முற்பணங்களில் காணப்பட்ட இம்மெதுவான விரிவாக்கம், இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் வங்கிக் கொடுகடன் துணைச் சுட்டெண்ணிற்கான கேள்வியின் மூலம் பிரதிபலிக்கப்பட்டது. இது 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் மெதுவான சராசரி அதிகரிப்பொன்றினை எடுத்துக்காட்டுகிறது. மேலும், வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வைப்புத் தளம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 14.8 சதவீதம் மற்றும் 4.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் முறையே 7.9 சதவீதம் மற்றும் 5.6 சதவீதம் கொண்ட மிதமான வேகத்தில் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2018இன் 3.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேநேரம், காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியங்களுடன் தொடர்பான நடவடிக்கைகள் 2018இன் 17.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 5.8 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சி கண்டன. காப்புறுதிக் கைத்தொழிலுடன் தொடர்பான குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொள்கையில் கட்டுப்பணம் மற்றும் காப்புறுதித் தொழிலினால் உறப்பட்ட கோரல்கள் இரண்டும் 2019இல் வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

### தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகள்

**2019இல் தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியில் ஏனைய தனியாள் பணிகளிலும் அதேபோன்று தொழில்சார் பணிகளிலும் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் மெதுவான வளர்ச்சியே காரணமாகும்.** இதன்படி, 2019இல் ஏனைய தனியாள் பணிகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 2.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. பொருளாதாரத்தில் ஏற்பட்ட காணப்பட்ட ஒட்டுமொத்த மெதுவான தன்மை அத்தகைய தனியாள் பணிகளுக்கான கேள்வியைப் பாதித்திருக்கக்கூடும். அதேநேரம், தொழில்சார் நிபுணத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், நிருவாகம் மற்றும் ஆதரவுப் பணி நடவடிக்கைகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 4.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.4 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தன.

### பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மானிடநலம் மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள்

**பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்புப் பணிகளில் காணப்பட்ட மீட்சியின் காரணமாக பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மானிடநலம் மற்றும் சமூக பணி நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் 2018இன் 1.2 சதவீதத்திலிருந்து 2019இல் 2.3 சதவீதத்தினால் விரிவடைந்தது.** இதன்படி, பொது நிருவாகம், பாதுகாப்பு மற்றும் கட்டாய சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 0.6 சதவீதம் கொண்ட சுருக்கத்திற்கெதிராக 2019இல் 2.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. மேலும், மானிட நல நடவடிக்கைகள், வதிவிடக் கவனிப்பு மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 3.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 1.9 சதவீதத்தினால் சிறிதளவினால் வளர்ச்சியடைந்தது. அதேநேரம், 2018இல் பதிவுசெய்யப்பட்ட 4.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் கல்விப் பணிகள் 3.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து மெதுவான வீதமொன்றினூடாக இப்பிரிவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு நேர்க்கணியமாகப் பங்களித்தது.

## 2.5 செலவினம்

**நடைமுறை விலைகளில் பொருளாதாரத்தின் நுகர்வினையும் முதலீட்டுச் செலவினத்தையும் உள்ளடக்கிய மொத்த உள்நாட்டுச் செலவினம் 2018இன் 8.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.15,935.6 பில்லியனுக்கு 3.3 சதவீதம் கொண்ட மிதமான வேகத்தில் வளர்ச்சியடைந்தது.** இம் மெதுவான தன்மைக்கு 2018இன் 3.8 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கெதிராக இவ்வாண்டுப்பகுதியில் முதலீட்டுச் செலவினத்தில் பதிவுசெய்யப்பட்ட 5.9 சதவீதம் கொண்ட கணிசமான வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். எனினும், நடைமுறை விலைகளில் நுகர்வுச் செலவினம் 2018இன் 9.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 6.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மொத்த உள்நாட்டு செலவினத்தின் வளர்ச்சிக்கு நேர்க்கணியமாகப் பங்களித்தது. நடைமுறை விலைகளில் வெளிநாட்டுக் கேள்வியைப் பொறுத்த வரையில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 13.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 5.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்த வேளையில் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் 2018இன் 12.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 0.9 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியை மாத்திரம் பதிவுசெய்தது. பொருட்கள் மற்றும் பணிகளில் காணப்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் கணிசமாக மெதுவடைந்தமைக்கு 2018இல் பதிவுசெய்யப்பட்ட 10.3 சதவீதம்

2

அட்டவணை 2.10
மொத்த கேள்வி (அ)

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகள் (ரூ.மில்) | | | நிலையான (2010) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 (ஆ) | 2018 (ஆ)(இ) | 2019 (இ) | 2017 (ஆ) | 2018 (ஆ)(இ) | 2019(இ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 10,079,907 | 11,055,624 | 11,822,861 | 7,224,405 | 7,433,998 | 7,692,548 |
| (% மாற்றம்) | 5.8 | 9.7 | 6.9 | 2.7 | 2.9 | 3.5 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 4,210,997 | 4,372,357 | 4,112,690 | 3,366,348 | 3,509,874 | 3,175,883 |
| (% மாற்றம்) | 26.0 | 3.8 | -5.9 | 6.7 | 4.3 | -9.5 |
| **மொத்த உள்நாட்டு கேள்வி** | **14,290,904** | **15,427,981** | **15,935,551** | **10,590,753** | **10,943,872** | **10,868,431** |
| **(% மாற்றம்)** | **11.0** | **8.0** | **3.3** | **3.9** | **3.3** | **-0.7** |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 2,909,720 | 3,292,414 | 3,472,337 | 1,714,147 | 1,722,275 | 1,844,791 |
| (% மாற்றம்) | 14.6 | 13.2 | 5.5 | 7.6 | 0.5 | 7.1 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 3,872,521 | 4,354,292 | 4,391,746 | 2,945,752 | 2,997,547 | 2,823,843 |
| (% மாற்றம்) | 13.4 | 12.4 | 0.9 | 7.1 | 1.8 | -5.8 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-962,801** | **-1,061,878** | **-919,410** | **-1,231,605** | **-1,275,272** | **-979,052** |
| **(% மாற்றம்)** | **-10.1** | **-10.3** | **13.4** | **-6.5** | **-3.5** | **23.2** |
| **இ. மொத்த கேள்வி** | **13,328,103** | **14,366,103** | **15,016,142** | **9,359,147** | **9,668,600** | **9,889,379** |
| **(% மாற்றம்)** | **11.1** | **7.8** | **4.5** | **3.6** | **3.3** | **2.3** |

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் நடைமுறை விலைகளில் 13.4 சதவீதம் கொண்ட மேம்பாடொன்றினைப் பதிவுசெய்வதற்கு தேறிய வெளிநாட்டுக் கேள்வி வழிவகுத்தது. மேற்குறிப்பிட்ட அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொத்த உள்நாட்டுச் செலவினத்தினதும் தேறிய வெளிநாட்டுக் கேள்வியினதும் கூட்டாக விளங்கும் நடைமுறை விலைகளிலான மொ.உ.உற்பத்தி 2018இன் 7.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து 2019இல் ரூ.15,016.1 பில்லியனாக விளங்கியது. நிலையான விலைகளில் செலவினத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகளைப் பரிசீலனையில் கொண்டு நுகர்வுச் செலவினம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 2.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 3.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இருப்பினும் கூட, நிலையான விலைகளில் 2018இல் 4.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த முதலீட்டுச் செலவினம் 2019இல் 9.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்து 2018இன் 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கெதிராக மொத்த உள்நாட்டுச் செலவினம் 0.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. நிலையான விலைகளில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 0.5 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 7.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் 2018இன் 1.8 சதவீதம் கொண்ட அதன் வளர்ச்சிக்கெதிராக 2019இல் 5.8 சதவீதம் கொண்ட சுருக்கத்தைப் பதிவுசெய்தன. இதன்படி, நிலையான விலைகளில் தேறிய வெளிநாட்டுக் கேள்வியும் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 3.5 சதவீதம் கொண்ட தேய்வுடன் ஒப்பிடுகையில் 2019இல் 23.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது. இதன் விளைவாக, நிலையான விலைகளில் மொ.உ.உற்பத்தி 2018இன் 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

## நுகர்வு

**தனியார் மற்றும் அரச செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பிலிருந்து தோன்றிய நன்மைகள் காரணமாக நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியின் மிகப் பெரும் செலவினக் கூறாக விளங்கும் நுகர்வுச் செலவினம் 2019இல் 6.9 சதவீதத்தினால் விரிவடைந்து மொ.உ.உற்பத்தியில் 78.7 சதவீதத்திற்கு வகைகூறியது.** எனினும், குறிப்பாக, போக்குவரத்து, ஆடைகள் மற்றும் உணவகங்கள் மற்றும் விடுதிகள் தொடர்பான தனியார் நுகர்வுச் செலவினம் நகர்வுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினால் பாதிக்கப்பட்டது. இதற்கமைய, தனியார் நுகர்வுச் செலவினம் 2018இன் 9.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 6.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து 2019இன் மொத்த நுகர்வுச் செலவினத்தில் 88.0 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, நடைமுறை விலைகளில் அரச நுகர்வுச் செலவினம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 15.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 8.1 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வளர்ச்சியானது 28.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அரசாங்கத்தின் தனிப்பட்ட நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட விரிவாக்கத்தினால் பெருமளவிற்குத் தூண்டப்பட்ட வேளையில் அரசாங்கத்தின் கூட்டு நுகர்வுச் செலவினம் 2019இல் 0.2 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியை மாத்திரம் பதிவுசெய்தது.

2

## தனியார் நுகர்வுச் செலவினம்

**நடைமுறை விலைகளில் உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகளின் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2018இன் 8.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.3 சதவீதம் கொண்ட மெதுவான வீதத்தில் வளர்ச்சியடைந்தது.** இம்மெதுவான போக்கினை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதி பெறுமதி மற்றும் அளவு ஆகிய இரண்டு நியதிகளிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, உணவு மற்றும் குடிவகைகளுக்கான இறக்குமதி ரூபாப் பெறுமதிச் சுட்டெண் மற்றும் அளவுச் சுட்டெண் என்பன 2019இல் முறையே 1.7 சதவீதத்தினாலும் 7.0 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டில் இவை முறையே 7.5 சதவீதத்தினாலும் 11.8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. மேலும், உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகள் மெதுவான தன்மையைப் பதிவுசெய்தமைக்கு உணவுடன் தொடர்பான தயாரிப்பு நடவடிக்கைகளில் காணப்பட்ட மிதமான தன்மை காரணமாக அமைந்தது. இதற்கு தேசிய நுகர்வுச் சுட்டெண்ணினால் (2013=100) பிரதிபலிக்கப்பட்டவாறு 2018இன் 0.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் வருடாந்த சராசரி உணவுப் பணவீக்கம் 0.7 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தமை ஓரளவிற்குப் பங்களித்தது. இவ்வபிவிருத்திகளின் இணைந்த பெறுபேறு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் நடைமுறை விலைகளில் உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினத்தில் மெதுவான வளர்ச்சியொன்றைத் தோற்றுவித்தது.

**நடைமுறை விலைகளில் ஆடைகள் மற்றும் காலணிகளுடன் தொடர்பான தனியார் நுகர்வுச் செலவினம் 2018இன் 9.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 4.5 சதவீதத்தினால் அதிகரித்தது.** இவ்வகையுடன் தொடர்பான இறக்குமதிச் சுட்டெண்களைப் பரிசீலனையில் கொள்கையில் ரூபாப் பெறுமதி மற்றும் அளவு ஆகிய இரண்டு நியதிகளிலும் ஆடைகள் மற்றும் துணைப்பொருட்களின் இறக்குமதிகள் 2018இன் முறையே 10.6 சதவீதம் மற்றும் 21.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் 2019இல் முறையே 2.0 சதவீதத்தினாலும் 16.9 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோலுடன் தொடர்பான உற்பத்திகளின் தயாரிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் உயர்ந்த வீதத்தினால் வளர்ச்சியடைந்து உள்நாட்டு நிரம்பலின் விரிவாக்கத்தினை எடுத்துக்காட்டியது. எனினும், தேசிய நுகர்வு விலைச் சுட்டெண்ணின் ஆடைகள் மற்றும் காலணிகள் வகையின் ஆண்டுச் சராசரி விலைகள் 2018இன் 4.0 சதவீதத்திலிருந்து 2019இல் 4.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**நடைமுறை விலைகளில் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்களின் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 7.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 7.9 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** 2019ஆம் ஆண்டுப்பகுதியில் நீர் மற்றும் மின்வலுவிற்கு தீர்வைத் திருத்தங்கள் எதுவும் காணப்படாத போதும் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் வீட்டுவாடகை மற்றும் எரிபொருள் விலைகள், டீசல் மற்றும் பெற்றொல் இரண்டினதும் விலைகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து இவ்வகையின் வீட்டுத்துறையினரின் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தது. மேலும், வீட்டுத்துறைக்கான மின்வலு விற்பனை 2019இல் 4.8 சதவீதத்தினால் அதிகரித்து 2018இல் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மின்வலு நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கிறது. அதேநேரம், வீட்டுத்துறையினருக்கான நீர் அலகுகளின் விநியோகம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 4.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 5.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. எனினும், உள்நாட்டு திரவப் பெற்றோலிய வாயுவின் விலை இவ்வாண்டுப்பகுதியில் குறைவடைந்தது. அதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள் வகைகளின் ஆண்டுச் சராசரி விலைகள் 2018இன் 1.3 சதவீதத்திலிருந்து 2019இல் 8.0 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு வீட்டுவாடகையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பெருமளவு காரணமாக அமைந்ததுடன் இவ்வகையில் அதிகரித்த விலை அழுத்தங்களையும் பிரதிபலித்தது.

**நடைமுறை விலைகளில் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பான தனியார் நுகர்வுச் செலவினம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 12.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 8.0 சதவீதம் கொண்ட ஒப்பீட்டு ரீதியில் மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தது.** போக்குவரத்து நடவடிக்கைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் அதன் உச்சத்திலிருந்து குறைவடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் பேருந்துப் பணிகள் மற்றும் புகைவண்டிப் பணிகள் மீதான பயணிகள் போக்குவரத்துக் கட்டணங்களில் மாற்றங்கள் எதுவும் இடம்பெறாமையே ஓரளவிற்குக் காரணமாகும். மேலும், ஊர்திகளின் இறக்குமதிகள் ரூபாப் பெறுமதி மற்றும் அளவு ஆகிய இரண்டு நியதிகளிலும் 2018இல் பதிவுசெய்யப்பட்ட கணிசமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் வீழ்ச்சியடைந்து இவ்வாண்டுப்பகுதியில் போக்குவரத்து நடவடிக்கைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் மெதுவடைந்தமையினைப் பிரதிபலித்தது. அதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலுள்ள போக்குவரத்து நடவடிக்கைகளுடன் தொடர்பான ஆண்டுச் சராசரி விலைகள்

அட்டவணை 2.11

நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு (அ)

| வகை | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் சதவீதமாக (%) | | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|
| | 2017 (ஆ) | 2018 (ஆ) (இ) | 2019 (இ) | 2018 (ஆ)(இ) | 2019 (இ) |
| 1. உணவு மற்றும் வெறியமல்லா குடிபானங்கள் | 29.5 | 29.4 | 28.1 | 8.5 | 2.3 |
| 2. வெறியமுள்ள குடிபானங்கள்,புகையிலை மற்றும் போதைப்பொருள் | 3.4 | 3.5 | 3.4 | 12.5 | 4.6 |
| 3. புடவையும் காலணியும் | 4.1 | 4.1 | 4.0 | 9.0 | 4.5 |
| 4. வீடமைப்பு, நீர், மின்சாரரம், எரிவாயு, மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 10.4 | 10.3 | 10.4 | 7.5 | 7.9 |
| 5. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுத்துறையின் பராமரிப்பு | 1.1 | 1.1 | 1.0 | 10.5 | 3.2 |
| 6. நலம் | 2.6 | 2.7 | 2.8 | 10.9 | 12.1 |
| 7. போக்குவரத்து | 23.2 | 23.9 | 24.2 | 12.5 | 8.0 |
| 8. தொடர்பூட்டல் | 1.0 | 0.9 | 0.9 | -4.2 | 3.2 |
| 9. பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் | 1.7 | 1.7 | 1.7 | 10.6 | 4.8 |
| 10. கல்வி | 1.2 | 1.2 | 1.3 | 9.8 | 9.8 |
| 11. விடுதிகள் மற்றும் உணவகங்கள் | 4.2 | 4.3 | 4.0 | 10.0 | 0.2 |
| 12. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 21.5 | 21.4 | 21.5 | 8.9 | 6.9 |
| 13. வதிவோரினால் நேரடி வெளிநாட்டு கொள்வனவுகள் | 2.8 | 2.9 | 2.9 | 10.7 | 9.0 |
| 14. கழிக்குக: வதிவற்றோரினால் உள்நாட்டு சந்தையில் நேரடி கொள்வனவுகள் | 6.7 | 7.4 | 6.2 | 18.9 | -9.4 |
| **மொத்த தனியார் நுகர்வுச் செலவு** | **100.0** | **100.0** | **100.0** | **9.0** | **6.8** |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2018இன் 8.4 சதவீதத்திலிருந்து 2019இல் 4.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையின் மூலம் போக்குவரத்துடன் தொடர்பான செலவினத்தில் விலை அழுத்தங்கள் ஒப்பீட்டு அடிப்படையில் மெதுவடைந்தமையைப் பிரதிபலித்தது.

**நடைமுறை விலைகளில் நலக்கவனிப்பு நடவடிக்கைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 10.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 12.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் கல்வி நடவடிக்கைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2018இன் அதே வீதத்திலிருந்து 2019இல் 9.8 சதவீதத்தினால் அதிகரித்தது.** விலை அழுத்தங்களைப் பரிசீலனையில் கொள்கையில் நலக்கவனிப்பு தொடர்பான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி விலைகள் 2018இன் 7.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் 7.3 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேநேரம், கல்வி வகையுடன் தொடர்புபட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி விலைகள் 2018இன் 6.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் 8.0 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், ஒட்டுமொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தில் நலக்கவனிப்பு மற்றும் கல்வியுடன் தொடர்பான செலவினத்தின் பங்கு தொடர்ந்தும் குறைவாக இருப்பதற்கு நலம் மற்றும் கல்விப் பணிகளை கட்டணமின்றி வழங்குவதில் பொதுத்துறை ஆதிக்கம் செலுத்துவதே காரணமாகும். இவ்வாதிக்கம் நிறுவன ரீதியான துறைப் பகுப்பாய்வின் கீழ் பொது அரச துறையிலிருந்து நலம் மற்றும் கல்விப் பணிகளின் பெறுமதிகூட்டலில் உயர்ந்த பங்களிப்பினால் பிரதிபலிக்கப்பட்டது.


## அரச நுகர்வுச் செலவினம்

**இறைத்திரட்சி வழிமுறைகள் தொடர்ச்சிக்கு மத்தியில் அரசாங்கத்தின் கூட்டு இறுதி நுகர்வுச் செலவினத்தையும் (அரச நுகர்வுச் செலவினத்தில் 66.4 சதவீதம்) தனிப்பட்ட இறுதிச் நுகர்வுச் செலவினத்தையும் (அரச நுகர்வுச் செலவினத்தில் 33.6 சதவீதம்) உள்ளடக்கிய அரச நுகர்வுச் செலவினம் நடைமுறை விலைகளில் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 15.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 8.1 சதவீதத்தினால் விரிவடைந்தது.** பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு, பொதுமக்கள் பணிகள், பொருளாதார அலுவல்கள் மற்றும் பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு போன்ற பணிகள் மீதான அரச செலவினத்தை உள்ளடக்கிய கூட்டு இறுதி நுகர்வுச் செலவினம் 2108இன் 20.1 சதவீத கொண்ட உயர்ந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 0.2 சதவீதத்தினால் சிறிதளவில் விரிவடைந்தது. இதற்கு 2018இல் பதிவுசெய்யப்பட்ட 112.3 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 27.4 சதவீதம் கொண்ட சுருக்கத்தைப் பதிவுசெய்த பொதுமக்கள் பணிகள் மீதான அரசின் செலவினம் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, நலம் மற்றும் கல்விப் பணிகள் மீதான அரசாங்கத்தின் செலவினை முக்கியமாக உள்ளடக்கிய அரசாங்கத்தின் தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினம் 2018இன் 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 28.0 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.

## முதலீடு

மொத்த நிலையான மூலதன உருவாக்கத்தில் சாதகமான வளர்ச்சியொன்று காணப்பட்ட போதும் நடைமுறை விலைகளில் முதலீட்டுச் செலவினம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 3.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 5.9 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட சுருக்கத்திற்கு கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் விற்பனைகளின் பெறுமதியைக் கழித்த கையேற்புக்கள் என்பனவற்றின் மாற்றங்கள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய தூண்டுதலாக அமைந்தன. மொத்த நிலையான மூலதன உருவாக்கத்தில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பரிசீலனையில் கொள்கையில் முதலீட்டுச் செலவினத்தில் மிகப்பெரும் வகையாக விளங்கும் கட்டடவாக்க நடவடிக்கைகள் மீதான முதலீடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் கணிசமானளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்விரிவாக்கம் கட்டடவாக்க மூலப்பொருட்கள் உட்பட முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் காணப்பட்ட மீட்சியைக் குறித்துக் காட்டிய வர்த்தகச் சுட்டெண்ணின் அசைவில் அவதானிக்கப்பட்டது. மேலும், கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக தனியார் துறைக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடனிலும் தொடர்ச்சியான வளர்ச்சியை அவதானிக்க முடியும். அதேவேளை, பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் ஆயுத முறைமைகள், போக்குவரத்துக் கருவிகள், தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பவியல் கருவிகள் மற்றும் புலமைச் சொத்து தயாரிப்புக்கள் மீதான முதலீடும் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. எனினும், பயிர்செய்யப்பட்ட உயிரியல் சார்ந்த மூலவளங்கள் மீதான முதலீடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட வியாபார அளவீடொன்றினால் பிரதிபலிக்கப்பட்டவாறு முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முதலீட்டுத் தீர்மானங்களைத் தாமதப்படுத்திய நாட்டில் நிலவிய நிச்சயமற்ற அரசியல் மற்றும் கொள்கைகள் ஓரளவிற்குக் காரணமாக இருக்கக்கூடும். மேலும், வியாபாரத் தோற்றபாட்டு அளவீட்டின் முதலீட்டுச் சுட்டெண் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் உச்சத்திலிருந்து கீழ் இறங்கிய தனியார் துறையின் முதலீட்டு நடவடிக்கைகள் மெதுவடைந்தமையினை எடுத்துக்காட்டின. அரச நிதியியல் புள்ளிவிபரங்களைப் பரிசீலனையில் கொள்கையில் அரச முதலீட்டுச் செலவினம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட சுருக்கத்திற்கு மாறாக 2019இல் சிறிதளவு வளர்ச்சியை பதிவுசெய்திருக்கிறது.

வரைபடம் 2.12
முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளின்
வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (அ) (ஐ.அ.டொ.மில்லியன்)




அட்டவணை 2.12
இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு என்பவற்றின்
கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | தொழிலாளர் (எண்ணிக்கை) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 (அ) | 2019 (ஆ) | 2018 (அ) | | | 2019 (ஆ) | | | 2018 (அ) | 2019 (ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்) | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 146 | 152 | 176,034 | 210,597 | 386,631 | 4,586,853 | 145,878 | 4,732,731 | 27,769 | 32,076 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 130 | 142 | 174,417 | 207,512 | 381,929 | 4,583,054 | 145,647 | 4,728,701 | 27,261 | 31,770 |
| பிரிவு 16இன் கீழ் | 16 | 10 | 1,618 | 3,084 | 4,702 | 3,800 | 230 | 4,030 | 508 | 306 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 95 | 104 | 75,260 | 146,345 | 221,604 | 747,282 | 117,889 | 865,170 | 24,181 | 17,841 |
| பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ)(உ) | 1,860 | 1,909 | 2,073,905 | 1,297,696 | 3,371,601 | 2,281,863 | 1,470,123 | 3,751,986 | 507,313 | வி.கி. |
| வர்த்தகத் தொழிற்பாடுகளின் செயற்றிட்டங்கள் (ஈ) | 2,325 | 2,214 | 399,266 | 524,458 | 923,724 | 435,577 | 556,920 | 992,496 | 359,474 | 351,821 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 1,708 | 1,665 | 372,930 | 514,774 | 887,704 | 409,556 | 547,892 | 957,449 | 327,606 | 322,427 |
| பிரிவு 16இன் கீழ் | 617 | 549 | 26,336 | 9,684 | 36,020 | 26,020 | 9,027 | 35,048 | 31,868 | 29,394 |
| கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் (ஈ) | 2,674 | 2,876 | - | - | 206,565 | - | - | வி.கி. | 314,230 | வி.கி. |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது.

*மூலங்கள்:* இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு

குறிப்பு : முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது வேறு ஏதேனும் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்கம் மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

2

**இலங்கை முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கான கடன்கள் உள்ளிட்ட வெளிநாட்டு நேரடி முதலீடு 2018இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,366.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 1,188.7 மில்லியனுக்கு[5] 49.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** 2018இன் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துடன் தொடர்பான வெளிநாட்டு முதலீடுகளை உள்ளடக்கியிருந்தன. ஆகவே, 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் சுருக்கமடைந்தமைக்கு 63.7 சதவீதம் மற்றும் 25.6 சதவீத வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் மற்றும் பணிகள் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் ஏறபட்ட உட்பாய்ச்சல்கள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். எனினும், ஆய்விற்குரிய காலப்பகுதியில் மொத்த வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சல்களில் நான்கிலொரு பங்கிற்கும் கூடுதலானளவிற்கு வகைகூறிய தயாரிப்புத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 319.5 மில்லியனுக்கு 9.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. அதேநேரம், வேளாண்மைத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடு 2019இலும் குறைந்த மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்பட்டது.


**முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழ் 2019இல் இலங்கை முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்தப் பெறுமதி ரூ.4,732.7 பில்லியனாக மதிப்பிடப்பட்டது.** உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், பணிகள், இரசாயனங்கள், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள், ஏனைய தயாரிப்பு உற்பத்தித் துறைகளில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் மதிப்பிடப்பட்ட மூலதன உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய காலப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. எனினும், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவிகளில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முதலீட்டுப் பெறுமதி 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. 2019இன் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீட்டுப் பெறுமதி முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.221.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.865.2 பில்லியனாகக் காணப்பட்டது. **இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழ் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்கிய செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீடுகள் 2019 இறுதியில் ரூ.992.5 பில்லியனாக விளங்கி முன்னைய காலப்பகுதியினை விட 7.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தன.** 2019 இறுதியில் முதலீட்டுச் சபையில் பெறப்பட்ட ஒன்றுசேர்ந்த முதலீடு 2018 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.3,371.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.3,752.0 பில்லியனாகக் காணப்பட்டது.

5 வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் தொடர்பான எண் தொகைகள், இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உட்பட பெறுகைகளை குறிப்பிடுவதுடன் அத்தியாயம் 5இல் காட்டப்பட்டுள்ள மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடக்கூடும். இதற்கு பிந்தியதில் முதலீட்டுச் சபையல்லாக் கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதே முக்கிய காரணமாகும்.

## மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

**நடைமுறை விலைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலவளங்கள் இரண்டையும் உள்ளடக்கிய பொருளாதாரத்தின் கிடைக்கத்தக்க மொத்த மூலவளங்கள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 8.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.19,407.9 பில்லியனாக விளங்கி 3.7 சதவீதத்தினால் மாத்திரம் விரிவடைந்தது.** நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் இரண்டும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்து நாட்டின் மூலவளக் கிடைப்பனவினைக் குறைவடையச் செய்தது. அதேவேளை, நிலையான விலைகளில் மூலவளத்தின் கிடைப்பனவு 2018இல் பதிவுசெய்யப்பட்ட 2.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன்

வரைபடம் 2.13
2019இல் பொருளாதாரம்
(நடைமுறை சந்தை விலைகளில்) (அ)




(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)

*மூலங்கள் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.13
நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் (அ)(ஆ)

| விடயம் | சதவீதப் பங்கு % | | சதவீத வளர்ச்சி % | |
|---|---|---|---|---|
| | 2018 (இ) | 2019 | 2018 (இ) | 2019 |
| அ. மூலவளங்கள் | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 76.7 | 77.4 | 7.8 | 4.5 |
| பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள் | 23.3 | 22.6 | 12.4 | 0.9 |
| **மொத்தம்** | 100.0 | 100.0 | 8.8 | 3.7 |
| ஆ. பயன்பாடு | | | | |
| நுகர்வு | 59.1 | 60.9 | 9.7 | 6.9 |
| மொத்த நிலையான மூலதனவாக்கம் | 19.6 | 21.0 | 4.4 | 10.8 |
| பெறுமதியானவற்றின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களின் மாற்றம் | 3.7 | 0.2 | 0.9 | -93.9 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 17.6 | 17.9 | 13.2 | 5.5 |
| **மொத்தம்** | 100.0 | 100.0 | 8.8 | 3.7 |

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலங்கள்*: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

ஒப்பிடுகையில் 2019இல் 0.4 சதவீதத்தினால் சிறிதளவினால் விரிவடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் நிலையான விலைகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட மெதுவான விரிவாக்கத்துடன் சேர்ந்து இறக்குமதிகளில் பதிவுசெய்யப்பட்ட சுருக்கமே காரணமாக அமைந்தது.

**இவ்வாண்டுப்பகுதியில் பொருளாதாரத்தின் கிடைக்கத்தக்க மூலவளங்கள் நுகர்வு மற்றும் முதலீட்டு நோக்கங்களுக்கும் ஏற்றுமதிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டன.** பெரும்பாலான மூலவளங்கள் நுகர்வு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதுடன் இவை 2018இல் பதிவுசெய்யப்பட்ட 59.1 சதவீதம் கொண்ட இதன் பங்குடன் ஒப்பிடுகையில் 2019இல் நடைமுறை விலைகளில் பயன்படுத்தப்பட்ட மொத்த மூலவளங்களில் 60.9 சதவீதத்திற்கு வகைகூறின. அதேநேரம், ஏற்றுமதிகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கு 2018இல் பதிவுசெய்யப்பட்ட 17.6 சதவீதத்திலிருந்து 2019இல் 17.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், முதலீட்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கு 2018இல் பதிவுசெய்யப்பட்ட 23.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 21.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## சேமிப்புக்கள்

**நடைமுறை விலைகளில் பொருளாதாரத்தின் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 3.5 சதவீத சுருக்கத்தினைப் பதிவுசெய்து 2018இல் பதிவுசெய்யப்பட்ட 1.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.3,193.3 பில்லியனாக விளங்கின.** இதற்கு 2018இன் 4.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 3.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த தனியார் சேமிப்புக்களின் மெதுவான வளர்ச்சியே ஓரளவிற்குக் காரணமாக அமைந்தது. மேலும், அரச மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு அரசிறையின் மெதுவான அதிகரிப்பினை விஞ்சி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் அரசின் குறைச் சேமிப்புக்களில் உயர்ந்த அதிகரிப்புக்களைத் தோற்றுவித்ததன் மூலம் உள்நாட்டுச் சேமிப்புக்களின் வளர்ச்சியை தளர்வுறச் செய்தது. இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2018இன் 23.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 21.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**நடைமுறை விலைகளில் தேசிய சேமிப்புக்கள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 1.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.3,791.7 பில்லியனாக அமைந்து 3.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** இப்பின்னடைவிற்கு உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூபா நியதிகளில் உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானங்கள் இரண்டும் சுருக்கத் தாக்கத்தினைக் காட்டியமையே பெருமளவிற்குக் காரணமாகும். எனினும், ரூபா நியதிகளில் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் இவ்வாண்டுப்பகுதியில் விரிவாக்கத்தினைப் பதிவுசெய்தமைக்கு தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட அதிகரிப்பே தூண்டுதலாக அமைந்தது. இதன்படி,

அட்டவணை 2.14
நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு (அ) (ஆ)

| விடயம் | ரூ.மில்லியன் | | வளர்ச்சி (%) | | மொ.உ.உ.இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 (இ) | 2019 | 2018 (இ) | 2019 | 2018 (இ) | 2019 |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 14,366,103 | 15,016,142 | 7.8 | 4.5 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 11,055,624 | 11,822,861 | 9.7 | 6.9 | 77.0 | 78.7 |
| தனியார் | 9,744,969 | 10,405,872 | 9.0 | 6.8 | 67.8 | 69.3 |
| அரசு | 1,310,655 | 1,416,989 | 15.2 | 8.1 | 9.1 | 9.4 |
| 3. முதலீடுகள் | 4,372,357 | 4,112,690 | 3.8 | -5.9 | 30.4 | 27.4 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 3,310,479 | 3,193,281 | 1.9 | -3.5 | 23.0 | 21.3 |
| தனியார் | 3,480,219 | 3,603,537 | 4.1 | 3.5 | 24.2 | 24.0 |
| அரசு | -169,740 | -410,256 | -76.5 | -141.7 | -1.2 | -2.7 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -1,061,878 | -919,410 | -10.3 | 13.4 | -7.4 | -6.1 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் (ஈ) | -389,601 | -432,250 | -10.4 | -10.9 | -2.7 | -2.9 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் | 999,504 | 1,030,690 | 3.6 | 3.1 | 7.0 | 6.9 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 3,920,382 | 3,791,721 | 1.6 | -3.3 | 27.3 | 25.3 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான வேறுபாடுகளிற்கு தொகுத்தலில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்.

*மூலங்கள்*: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2

அட்டவணை 2.15
நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறைகளின் வருமான கூறுகள் (அ) (ஆ)

| விடயம் | சதவீதப்பங்கு (%) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 (இ) | | | | 2019 | | | |
| | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் |
| **ஊழியர்களின் நட்டஈடு** | **32.6** | **9.6** | **27.6** | **30.2** | **34.6** | **6.7** | **28.2** | **30.6** |
| **மொத்த தொழிற்பாட்டு மிகை** | **35.7** | **3.4** | **2.1** | **58.8** | **35.4** | **5.0** | **1.9** | **57.7** |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 39.4 | 3.9 | 0.7 | 55.9 | 38.6 | 5.8 | 0.6 | 54.9 |
| கலப்பு வருமானம் | - | - | - | 100.0 | - | - | - | 100.0 |
| நிலையான மூலதனத்தின் நுகர்வு | 41.9 | 2.9 | 13.1 | 42.1 | 41.6 | 3.1 | 12.7 | 42.6 |
| **உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள்** | **91.1** | **8.6** | **-** | **0.3** | **91.1** | **8.6** | **-** | **0.3** |
| **அடிப்படை விலைகளில் பெறுமதி சேர்ப்பு** | **34.8** | **5.4** | **10.4** | **49.3** | **35.4** | **5.5** | **10.2** | **48.8** |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்*: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 2018இன் 27.3 சதவீதத்திலிருந்து 2019இல் 25.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், முதலீட்டுச் செலவினத்தில் காணப்பட்ட உயர்ந்த சுருக்கத்தின் காரணமாக தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி, 2018இன் மொ.உ.உற்பத்தியின் 3.1 சதவீதத்திலிருந்து 2019இல் மொ.உ.உற்பத்தியின் 2.1 சதவீதத்திற்குக் குறுக்கமடைந்தது.

## 2.6 வருமானம்

**நடைமுறை விலைகளில் பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலுக்குச் சமமான வருமானக் கூறுகளின் கூட்டுத்தொகை 2018இன் 8.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 6.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** பொருளாதாரத்தின் உயர்ந்தளவிலான வருமானம் உருவாக்குகின்ற கூறான மொத்த தொழிற்பாட்டு மிகையானது 2018இன் 6.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 7.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து மொ.உ.உற்பத்தியில் 63.1 சதவீதத்திற்கு வகைகூறியது. இதற்கு மொத்த தொழிற்பாட்டு மிகையின் பாரிய துணைக்கூறான தேறிய தொழிற்பாட்டு மிகையானது 2018இன் 5.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2017இல் 9.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமை காரணமாகும். மொத்தத் தொழிற்பாட்டு மிகையின் ஏனைய இரண்டு துணைக்கூறுகளைக் கருத்திற்கொள்கையில் நிலையான மூலதனத்தின் நுகர்வு 2018இல் பதிவுசெய்யப்பட்ட 5.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 4.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அதேவேளையில் கலப்பு வருமானம் 2018இன் 11.5 சதவீத வளர்ச்சியிலிருந்து 2019இல் 4.3 சதவீத சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. இதேவேளையில், 2019இன் மொ.உ.உற்பத்தியில் 29.5 சதவீதத்திற்கு வகைகூறிய ஊழியர் இழப்பீடானது 2018இன் உயர்ந்த வளர்ச்சியான 15.3 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து இவ்வாண்டுக் காலத்தில் 3.5 சதவீத மெதுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், ஏனைய வருமானக்கூறான உற்பத்தியில் உதவுதொகைகளைக் கழித்த வரிகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட சிறிதளவான வளர்ச்சியான 0.7 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 43.4 சதவீத கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்து மொ.உ.உற்பத்தியில் 0.4 சதவீதத்திற்கு வகைகூறியது.

**வருமானம் உருவாக்குதலின் நிறுவன ரீதியான வகைப்படுத்தலின்படி வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறையானது நடைமுறை விலைகளில் பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலுக்கு உயர்ந்தளவான பங்களிப்பினை வழங்கியிருந்தது.** நடைமுறை விலைகளில் மொத்தத் தொழிற்பாட்டு மிகைக்கு துறை ரீதியான பங்களிப்புக்களைக் கருத்திற்கொள்ளும் போது வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறையானது மொத்தத் தொழிற்பாட்டு மிகையில் 57.7 சதவீதத்தினால் பிரதிபலித்து 2019இல் 5.1 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதனை நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறை தொடர்ந்திருந்ததுடன் மொத்தத் தொழிற்பாட்டு மிகையில் 35.4 சதவீதத்திற்கு வகைகூறி 2019இல் 6.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. ஊழியர்களின் இழப்பீட்டினைக் கருத்திற் கொள்ளும் போது நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறை ஊழியர்களின் இழப்பீட்டில் 34.6 சதவீதத்திற்கு வகைகூறி 2019இல் 9.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் மற்றும் பொது அரசாங்கத் துறையில் 2019இல் ஊழியர்களின் இழப்பீட்டில் முறையே 30.6 சதவீதம் மற்றும் 28.2 சதவீதத்திற்கு வகைகூறி முறையே 4.5 சதவீத மற்றும் 5.6 சதவீத வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன. மேலும் நிதிக் கூட்டுத்தாபனங்கள் துறை ஊழியர்களின் இழப்பீட்டில் 6.7 சதவீதத்திற்கு வகைகூறி 2019இல் 28.0 சதவீத சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது. உற்பத்தியில் உதவுதொகைகள் கழித்த வரிகளுக்குப் பிரதான பங்களிப்பாளராக நிதியல்லாக் கூட்டுத்தானங்கள் துறை விளங்கி இக்கூறின் 91.1 சதவீதத்திற்க வகைகூறி 2019இல் 43.4 சதவீத கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது.